


கல்கி
KALKI 3.5.1959
30 நயா பைசா

பிறந்து 8 மாதங்கள்கூட ஆகவில்லை—

அவன் நிற்க ஆரம்பித்துவிட்டான்!



கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற | விகாரி ஞூ
இதழ் 40 | தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | சித்திரைமீ 20

மலைபோன்ற உண்மை

மக்கள் சபையின் ஆட்சி மொழிக் கமிட்டி அறிக்கை வெளியாகி விட்டது. அதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன வென்றால், இந்தக் கமிட்டி அங்கத்தினர் ஹிந்தி பேசாத மற்ற மொழியாளர்களின் உணர்ச்சிகளைச் சற்றும் பொருட்படுத்தவில்லை என்பதுதான்.

சென்னையில், வங்கத்தில், ஆந்திர நாட்டில், ஹிந்தி ஆட்சிமொழி யாவதை எதிர்த்து மகாநாடுகள் நடைபெற்று, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றையெல்லாம் ஆட்சிமொழிக் குழுவினர் அலட்சியம் செய்திருக்கிறார்கள்.

தேசத்தின் பல்வேறு அறிஞர்கள், அனுபவசாலிகள், திறமைபடைத்தவர்களான டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், காலஞ்சென்ற மிர்ஸா இஸ்மெயில், ஸ்ரீ ராதா பினோத் பால், லக்கராஜு சுப்பராவ், இப்படி நூற்றுக் கணக்கானவர்கள் எடுத்துரைத்தும் உண்மை அவர்கள் மண்டையில் ஏறவில்லை.

வங்க சட்டசபையிலுள்ள எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஏகமனதாக ஹிந்தி ஆட்சிமொழியாவதை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியும், அந்த ராஜ்யத்தின் அபிப்பிராயத்தை அப்படியே புறக்கணித்திருக்கின்றனர்.

பாரத நாட்டுக்குப் பெரும் சேவைகளைப் புரிந்த ராஜாஜியோ, "இந்தி ஆட்சிமொழியாவதால், இந்திய ஐக்கியம் அழிந்து பிளவுச் சக்திகளுக்குப் பலம் கொடுத்ததாக முடியும்" என்று தீர்க்கதரிசனத்தோடு எச்சரிக்கை செய்து, ஒரு முறையல்ல, பலப்பல முறை, பல்வேறு காரண காரியங்கள் காட்டி விளக்கினார். அப்படியும் அவர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. தேசத்தை அழிவுப் பாதையில் கொண்டு போகவே முடிவு செய்து விட்டாற்போல் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

மத்திய சர்க்காரில் வர்த்தக மந்திரியாகவுள்ள ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி ஹிந்தி மாகாணமாகிய உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் கல்கத்தாவில் ஹிந்திப் பிரசார சங்கத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது, "**ஆங்கிலம் எப்படி இந்தியர்களின் ஆட்சி மொழியாக இருக்க முடியும்? எனக்குப் புரிந்துகொள்ளவே முடியவில்லை**" என்று கூறியிருக்கிறார்.

இந்தியா சுதந்திரம் பெற்றுப் பத்தாண்டுகளுக்கு மேலாகியும் ஆங்கிலத்திலேயே ஆட்சி நடந்து வருகிறது. இந்த ஆட்சியில் ஏற்பட்டு வரும் குற்றங்களும் எடுத்துக் காட்டப்பட்டு வரும் குறைகளும் ஆட்சிமொழியினால் ஏற்பட்டனவையா? அல்ல.

இவ்வளவிருந்தும், ஆங்கிலம் எப்படி ஆட்சி மொழியாக இருக்க முடியும் என்று லால்பகதூர் சாஸ்திரியும் மற்றவர்களும் சொன்னால் அவர்களுடைய ஹிந்தி வெறி அறிவை எப்படி மயக்குகிறது என்பது தெரிகிறதல்லவா! உத்தரப் பிரதேசக்காரர்களின் கண்ணுக்கு எதிரில் நிற்கும் மலைபோன்ற உண்மையை இந்தி பட்சபாதம் மறைத்து விடுகிறது. இவர்கள்தான் தில்லி மக்கள் சபையில் பெரும்பான்மையோராக இருக்கிறார்கள். இந்தச் சபையில் ஆட்சிமொழி சம்பந்தமாக, கட்சி வேறுபாடின்றிச் சர்ச்சை நடப்பதாகக் காட்டப்பட்டாலும் இந்தச் சபையிலிருந்து நாட்டின் உண்மையான அபிப்பிராயம் எங்கே வெளிப்படப் போகிறது!

நாட்டின் உண்மையான அபிப்பிராயம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், ராஜ்ய சட்ட சபைகள் பலவற்றுக்குக் கட்சிக் கட்டுப்பாடின்றி இவ்விஷயம் சம்பந்தமாகத்

தங்கள் கருத்தைத் தெரிவிக்கும்படி பூரண சுதந்திரம் அளித்தால் அப்பொழுது தெரியலாம். அப்போதும் கட்சிக் கட்டுப்பாடுகளும், புல்லுருவி வேகங்களும் மறைவாக வேலை செய்து கொண்டுதான் இருக்கும். இந்தப் பிரச்னை சரியாகத் தீர வேண்டுமானால், இந்தி ஆட்சிமொழியாக விரும்பாத பிரதேசங்களில் எதிர்ப்பு இயக்கங்கள் கால தாமதமின்றிப் பலமாக நடத்தப்பட வேண்டும்.

கல்லூரிகளில் போதனாமொழி

கல்லூரிகளில் தமிழைப் போதனாமொழியாகச் செய்ய வேண்டும் என்று சென்னை சர்க்கார் நீண்ட நாட்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இவ் விஷயத்தில் நமது கல்வி மந்திரி தீவிர ஊக்கம் கொண்டவர். சென்னை சர்வகலாசாலைதான் முட்டுக்கட்டை போட்டு வந்தது. இப்பொழுது அந்த முட்டுக்கட்டையைச் சென்னை சர்வகலாசாலை எடுத்துவிட்டது என்று அறிந்து மகிழ்கிறோம். விரைவில் தமிழே போதனாமொழியாகும். 1960-61ம் ஆண்டுகளிலிருந்து கோவைப் பகுதியில் சில கல்லூரிகளில் தமிழ்மூலம் விஞ்ஞானப் பாடங்கள் போதிக்கப்படும்.

இவ் விஷயங்களையெல்லாம் நாம் மனமகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். விஞ்ஞானப் பாடங்களில் வழங்கும் நுட்பமான பொருள் தொனிக்கும் விஞ்ஞானச் சொற்றொடர்களைத் தமிழில் மொழிபெயர்க்க விரிவான கமிட்டியைச் சென்னை சர்க்கார் நியமித்திருப்பதை உற்சாகமாக வரவேற்க முடியவில்லை.

காயைப் புகை போட்டுப் பழுக்க வைப்பது போல் கமிட்டி போட்டு, மொழிபெயர்ப்பு வேலையில் இறங்கினால் பயன் உண்டாகாது. இம்முறைகளைப் பலமுறை கடைப்பிடித்துப் படுதோல்விதான் அடைந்திருக்கிறோம்.

பல விஞ்ஞானத்துறை நூல்களை அந்தத் துறை நிபுணர்கள் தமிழில் இயற்றி அவற்றைப் பொதுமக்களும் மாணவர்களும் படிக்கச் செய்தால்தான் குறைகள் நன்றாக உணரப்பட்டு மொழிகள் நல்ல முறையில் அமையும்.

கல்லூரிகளில் விளக்கங்களும் விரிவுரைகளும் தமிழில் நடத்திய போதிலும் மாணவர்கள் படிக்க வேண்டிய நூல்கள், அதாவது பாடபுத்தகங்களும் நூல் நிலையத்தில் வைக்கப்படும் புத்தகங்களும் இது வரை இருப்பது போல் ஆங்கிலத்திலேயே இருந்து வரவேண்டும். அப்போதுதான் அறிவு வளர்ச்சி மாணவர்களுக்குப் பிழையின்றி உண்டாகும்.

தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட விஞ்ஞானப் பரிபாஷைச் சிறப்புச் சொற்களையே மாணவர்களுக்கு வழங்கினால், கல்லூரி நிலை தாண்டி, மேல் படிப்புக்குப் போய்த் தாமாகவே ஆங்கிலத்தில் விஞ்ஞான நூல்களை நூல் நிலையங்களிலிருந்து படிக்கத் தொடங்கும் மாணவர்கள், தமிழில் தாங்கள் கற்ற சொல் ஆங்கிலத்தில் என்னவாக வழங்குகின்றன என்பதைக் கண்டு கொள்வதிலேயே பெரும் காலம் வீணாகி விடும். விஞ்ஞான அறிவு வளர்ச்சி தடைப்படும். தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சியைக் கருதிச் செய்யப்படும் முயற்சி அவர்களின் அறிவுத் தேய்வுக்கே காரணமாகும்.

தேசத்தை மறந்து, இந்தி பாஷையை நினைவில் வைத்துக் கொண்டு வடநாட்டார் செய்யும் காரியங்களைப் போலாகும், தமிழையே நினைவில் வைத்துக் கொண்டு தமிழ் மாணவர்களின் நன்மையை மறந்து விட்டோமானால்.


ஆகவே ஆங்கிலபுத்தகங்களை அப்படியே வைத்துக் கொண்டு தமிழில் பாடங்களை ஆங்கிலக் கலைச் சொற்களும் தமிழும் கலந்த முறையில் ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்கள் விளக்கத்தில், முக பாவத்தில், கை அசைவுகளில் இப்படிப் பல வகைகளில் ஒரு விஷயத்தின் உட்பொருளை மாணவன் புரிந்து கொள்கிறான். ஆங்கிலப் பாடப் புத்தகம் வைத்துக் கொண்டே தமிழில் போதிக்கத் தொடங்கலாம். தமிழில் விளக்குவதில் கஷ்டமில்லை. இப்படி விளக்கி வந்தால், கடைசியில் நுட்பமான விஞ்ஞானச் சொற்களுக்கு நல்ல தமிழ்ச் சொற்கள் தாமே தோன்றும். தோன்றித் தாமாகவே அரசாங்க உத்தரவின்றி நிலைக்கும். அத்தகைய சொற்கள் அர்த்தபுஷ்டியுடன் விளங்கும். இப்படி விளக்கி விளக்கிப் பெற்ற பயிற்சியின் காரணமாக எழுதப்படும் தமிழ் விஞ்ஞானப் பாடப் புத்தகம்தான் நன்றாக இருக்கும். பல்வேறு அபிப்பிராயங்கள் கொண்ட பெரியார்களைச் சேர்த்துக் குழு அமைத்து விஞ்ஞானச் சொற்களைச் சிருஷ்டியுங்கள் என்றால், அவர்களுடைய கூட்டங்களில் பல சண்டை சச்சரவுகள் நடத்தி முடிவில் கவைக்குதவாத சொற்களைத்தான் ஆக்கித் தருவார்கள். கல்லூரிகளில் விஞ்ஞான விரிவுரைகளும் விளக்கங்களும் ஆங்கிலச் சொற்களும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில் நடைபெறுவது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அந்த முறையிலுள்ள குறையைப் பொருட்படுத்தாமல் பாடங்கள் நடந்தால்தான் மாணவர்களுக்கு விஞ்ஞான சிட்சை சரியாக நடைபெறும். வேறு வகுப்புகளில் பாஷையின் தூய உருவத்தைக் காப்பாற்றி வந்தால் விஞ்ஞானப் பாடங்களில் நடைபெறும் மணிப்பிரவாளம் தீங்கு விளைவிக்காது.

இன்னொரு விஷயமும் இங்கு சொல்ல வேண்டும். சற்றுப் பரந்த மனப்பான்மை

நல்ல அத்தாட்சி!



தனியார் துறையைவிட சர்க்கார் துறை சிறப்பாக வேலை செய்வதாக நேருஜி சமீபத்தில் கூறினர்!



வேண்டும். தமிழில் பல ஆங்கிலச் சொற்களை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இதற்குக் கூச்சப்படவே கூடாது. பழைய பண்டங்களுக்குப் பழைய பெயர்களும், புதிய பண்டத்துக்குப் பண்டத்தோடு வந்த பெயருந்தான் வழங்க வேண்டும். அடுப்புக் கரி வேறு; விஞ்ஞான விளக்கத்தில் வரும் கார்பன் வேறு. இரண்டையும் குழப்பலாகாது. ஆங்கிலத்திலும் அடுப்புக் கரியை கார்பன் என்று சொல்ல மாட்டார்கள்; கார்பனைச் சார்க்கோல் என்று சொல்ல மாட்டார்கள். கார்பன் என்பது ஆங்கிலத்தில் புதிதாக எடுத்து கொண்ட விஞ்ஞானச் சொல். ஆங்கிலத்தில் வழங்கும் விஞ்ஞானச் சொற்கள் அநேகமாக ஆங்கிலச் சொற்களேயல்ல. கிரீக், லத்தீன் மொழிகளைச் சேர்ந்தவையாகும். எனினும், அவை இன்று மூல வாசனை இழந்து பூரண ஆங்கில மொழியாகவே ஆகிவிட்டன. அப்படிப் பல சொற்களைச் சேர்த்துக் கொண்டால்தான் நம் மொழி வளம் பெறும். பழைய உரம் வாய்ந்த நம் நாட்டுச் சொற்களை மறந்த மூட்டையிலிருந்து கண்டு பிடித்து எடுத்து உபயோகப்படுத்தவும் முற்பட வேண்டும்; புதிய சொற்களைச் சேர்த்துக் கொள்ளவும் அஞ்சுதல் கூடாது.

யாவருக்கும் கல்வி

1965-ம் வருஷத்துக்குள் பாரதநாட்டில் எழுத்து வாசனை யில்லாதவர்களே இருக்கக் கூடாது என்பது அரசியல் நிர்ணயச் சட்டம். அதற்கு முதற்படியாக மக்களைப் பள்ளிக்கூடம் வந்து படிக்கச் செய்ய வேண்டும்.

ஏழைத் தொழிலாளர்கள் வாழும் இத்தேசத்தில், ''படிப்பு என்னத்துக்குங்க, பையனுக்கு? வயலில் உழுது வேலை செய்தால் கஞ்சிக்காகிலும் உதவுவான்'' என்பதுதான் உழைத்துப்பாடுபடும் மக்களின் அபிப்பிராயம். படித்து விட்டால் உடம்பு வணங்கிப் பையன் பிற்காலத்தில் வேலை செய்ய மாட்டான்; பிழைப்புக்கு வழியற்றுப் போகும்; அதனால் படிப்புவேண்டாம் என்பது விவசாயிகளின் கருத்து. இதில் உண்மையிருக்கவே செய்கிறது.

இப்பொழுதுள்ள பள்ளிக்கூடப் படிப்பு முறை தொழிலில் ஊக்கம் இழக்கச் செய்யும் முறையாகவே இருக்கிறது. பையன் காலை 9-30 மணி முதல் மாலை 4-30 மணி வரையும், அதற்கு மேலும் பள்ளிக்கூடத்தில் அடைந்து கிடந்தால், புஸ்தகத்தையும் கோட்டுப் புஸ்தகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தால் உடம்பு வணங்கி வேலை செய்வது ஏது? படிப்பு முறையில்தான் அதற்கு இடமே இல்லையே! அதனால், கல்வியின் உயர்வை எவ்வளவு பிரசங்கம் செய்தாலும், அநுபவஞானமுடைய எழுத்து வாசனையற்ற ஏழை விவசாயி தன் மகனையோ, மகளையோ பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப மறுக்கிறான். இது முதல் பிரச்னை.

மற்றொரு பிரச்னை இந்த ஏழை விவசாயிக்கு வருஷத்தில் ஆறு மாதங்கள் தான் வயலில் வேலையிருக்கிறது. மற்ற ஆறு மாதங்கள் வேறு தொழில் செய்து வயிறு பிழைக்க வேண்டியிருக்கிறது. இந்நிலையில் இவன் மகனுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டிப் படிக்க வைக்க முடியுமா? இது இரண்டாவது பிரச்னை.

இதில் முதல் பிரச்னையை ஒருவாறு சமாளித்து வருகிறார்கள்.

தோட்டத்திலும், வயலிலும் சுற்றித் திரியும் பையன்களைப் பள்ளிக்கூடம் வரச் செய்ய 'மதிய உணவு' ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதை நமது பிரதமர் நேரு நாளுக்கு ஒரு தடவை பாராட்டிப் பேசுகிறார். சென்னை ராஜ்யம் போல் உண்டா என்று புகழ்கிறார். இவையெல்லாம் நாம் அறிந்ததே!

அடுத்தது, இன்று சென்னை ராஜ்யத்தில் தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிக்கூடங்களில்கூட முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் படிக்கும் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்! இதனால் சர்க்கார் கஜானாவிலிருந்து ஏராளமான பணம் செலவழியும்! ஆனால் எழுத்து வாசனை பிரஜைகளுக்கு அளிப்பது சர்க்காரின் முதற்கடமை! அவ்வகையில் இது வரவேற்கப்பட வேண்டியதே!

ஆனால் நமது கல்வியிலுள்ள அடிப்படைக் குறை தொழில் பயிற்சி இல்லாமை. உடம்பு வணங்கி, கைகளைப் பயன்படுத்தி வேலை செய்யும் பழக்கம் இழிவு என்ற மிக மிகத் தவறான உணர்ச்சியை ஊட்டி வரும் இன்றையக் கல்வி முறையை மாற்றாமல், இப்படி இலவசக் கல்வியளிப்பது எதிர்காலத்துக்கு உகந்ததா என்பதை நமது ஆட்சியாளர்கள் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

ருஷ்யாவில் தொழிற் பயிற்சியுடன் கல்வி போதிக்கும் புதுக் கல்வி முறையைக் கொண்டு வருகிறார்கள்.

ஆனால் நம் நாட்டில் வேலை செய்வது, உடம்பில் அழுக்குப்படுவது, துணி கசங்கிப் போவது தவறு என்று நினைக்கும் ஆபத்தான கல்விமுறையை எல்லா மக்களுக்கும் போதிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். தேசம் முழுதும் பேனா ஓட்டும் குமாஸ்தாக்களாகி விட்டால், தேசத்துக்கு நலமா என்பதைச் சிந்திக்காமல் இம் முறையை மேற்கொண்டிருப்பது அறிவுடைமையாகுமா?

எந்த மாகாணமும் செய்யத் துணியாத காரியத்தைச் சென்னை சாதித்து விட்டது என்று பெருமை கொள்ளலாம். நீண்ட நாட்களுக்குப் பிறகு பயன் அளிக்கும் வகையில் கல்வி முறையை மாற்றியமைத்துவிட்டு அப்புறம் இம்முறையைப் பின்பற்றுவதல்லவோ அறிவுடைமை!

ஆகாச வெடி!

"டிக்கெட் இல்லாமல் ரயில் வண்டிகளில் பிரயாணம் செய்வோரின் எண்ணிக்கை வர வர அதிகரித்து விட்டது."
—ரயில்வே ஆலோசனையாளர் ஒருவர்.

"இடம் உள்ள வரையில்தான் டிக்கெட் டில்லாப் பிரயாணிகள் அனுமதிக்கப்படுவார்கள்" என்ற போர்டுகளை வண்டிகளில் இனி மாட்டிப் பார்க்கலாமே!

★

"மாஜி பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் தாம் மீண்டும் பொதுத் தேர்தலுக்கு நிற்கப் போவதாக அறிவித்திருப்பது உலக அரசியலில் புகைச்சலை உண்டாக்கியிருக்கிறது."
—செய்தி

இந்தப் புகைச்சலுக்கும், அவரது பிரசித்தி பெற்ற சுருட்டிலிருந்து கிளம்பும் புகைச்சலுக்கும் சம்பந்தம் இராதென்பது மட்டும் நிச்சயம்.

"கேரள சட்டசபையில், ஆர். எஸ் பி. கோஷ்டிகளில் ஒன்று உள்ளே நுழைய முயன்றபோது சிறிது நேரம் சபைக் கதவு சாத்தி வைக்கப்பட்டது." —செய்தி

சில சட்டசபைகளில் ஆறாகும் சொற்ப அங்கத்தினர்களும் வெளியே போய்விடாமல் இருக்க இந்த உபாயத்தை ஏன் கடைப்பிடிக்கக் கூடாது?

★

"நான்கு பேர் வரையில் பேபி டாக்ஸிகளில் ஏற்றிச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்குச் சென்னை சர்க்கார் சம்மதம் அளித்து விட்டது."
—உதகைச் செய்தி

நாலு பேர் சௌகரியத்தை பொட்டி நடப்பதென்ற முடிவுக்குச் சென்னை சர்க்கார் இப்போதாவது வந்தது குறித்துச் சந்தோஷப்பட வேண்டும்.

என்ன சேதி?

விலைவாசிகளே, கீழே இறங்கு!

விலைவாசிகளுக்கு மட்டும் அறிவு, உணர்ச்சி இருக்குமேயானால் உதகையில் சட்டசபையில் வெளியிடப்பட்ட விவரங்களைப் பார்த்தபின், அரிசி விலையும், நெல் விலையும் உடனே மடமடவென்று கீழே இறங்கியிருக்க வேண்டும். நமது ராஜ்யத்தில் இந்த ஆண்டில் 32½ லக்ஷம் டன் அரிசி கிடைக்கக்கூடிய அவ்வளவு நெல் விளைந்திருக்கிறதாம். தலைக்குப் பதினறு அவுன்ஸ் வீதம் அரிசி எல்லாரும் சாப்பிட்டால்கூட 32½ லக்ஷம் டன் அரிசிதான் தேவைப்படும். ஆனால் அந்த அளவிலே யாரும் அரிசி உட்கொள்ளுவதில்லை. எல்லா மக்களுக்கும் அரிசி வேண்டுவதுமில்லை. ஆகவே தேவைக்கு அதிகப்படியான தான்யம் விளைந்திருப்பதால், விலை ஏற்றத்துக்குக் காரணம் இல்லையாம்.

அதுமட்டுமல்ல; கேரளாவுக்கு அனுப்பப்பட்ட அரிசியும் மிகவும் கொஞ்சம் தான். நமது ராஜ்யத்திலுள்ள கையிருப்பை அது பாதிக்கவில்லை. இதை ஒரு சாக்கு என்று வைத்துப் பேச முடியாது.

கொள்முதல் கடவடிக்கைகளினால் ஒருகால் இரண்டு லக்ஷம் டன் சர்க்கார் கிடங்குகளில் அடைபட்டுவிட்டதோ என்றால் அதுவும் இல்லை. அதில் நான்கில் ஒரு பங்குதானே இதுவரையில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இதையும் ஒரு சாக்காகக் கூற முடியாது.

விலைவாசிகள் குறைவதற்கு மட்டுமே ஏற்ற முறையில் நிலைமை இருக்கும் போது, அந்த உணர்ச்சிகெட்ட விலைகள் மட்டும் இறங்கிவர மறுக்கின்றன. நெல், அரிசி மட்டுமல்ல; இதர தானியங்கள் கூட இப்படியே உச்சத்தில் நிற்கின்றன. ஏன் இப்படி இருக்கிறது என்பதற்கு மக்களும் வர்த்தக சமூகமும் கூறும் காரணம் ஒன்று. அரசாங்கக் கொள்முதல் கடவடிக்கையும் விலை நிர்ணயமுந் தான் காரணம். இவ்விரண்டையும் கைவிட்டால் பொருளாதார ரீதியில் இருப்புக்கும் தேவைக்கும் ஏற்றவாறு விலை சமநிலைக்கு வரும் என்பதை அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் சர்க்கார் சொல்லுவது வேறு. கொள் முதல் கடவடிக்கைகளும் விலை வரம்புகளும் இருப்பதால்தான் நிலைமை இந்த அளவிலாவது இருக்கிறது; இல்லா விட்டால் விலைகள் இன்னும் உயர்ந்து விட்டிருக்கும்; ஆகவே கொள்முதல் கடவடிக்கையைக் கைவிட முடியாது என்பது அவர்கள் கூற்று.

இந்த இரண்டு மாறுபட்ட கருத்துக்களுக்கிடையில் விலைவாசிகள் ஓதுங்கி நிற்கின்றன. அவற்றைக் கீழே இறங்க விடாமல் தாங்கி நிற்பது சர்க்காரின் விலை வரம்புகள். மேலே உயருவதற்கு ஊக்கி விடுவது சர்க்காரின் 'ப்ரொக்யூர்மெண்ட்' கடவடிக்கை. தத்தளிப்பது சாதாரண மக்கள். வார்த்தைகளுக்குப் பஞ்சமில்லை. விவாதங்களுக்குக் குறைவில்லை. அனுதாபம் ஏராளம். ஆனால் விலைகள் மட்டும் உயர்ந்தே நிற்கின்றன!

எல்லாம் மக்கள் தலையில்

உணவு தான்யம் காட்டில் குறைந்து வரும் காலத்தில் விலை ஏறத் தொடங்கும். அதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இரண்டு லட்சம் டன் அரிசி விவசாயிகளிடமிருந்தும் வியாபாரிகளிடமிருந்தும் கொள்முதல் செய்து சேமித்து வைக்கத்

திட்டமிட்டிருக்கின்றனர். இம்முறையில் சர்க்கார் கொள்முதல் செய்யத் தொடங்கியதிலிருந்து தான்யங்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டன. வியாபாரிகளும் விவசாயிகளும் பதுக்கி விட்டனர் என்று புகார் செய்கிறார்கள்.

ஒரு விஷயம். எந்தத் தான்யத்தையும் நீடித்த நாள் பதுக்கி வைக்க முடியாது. சில நாட்களில் அரிசியோ, நெல்லோ மக்கத் தொடங்கிவிடும், பூச்சி அரிக்க ஆரம்பித்து விடும். இந்த நிலை சீக்கிரம் வரும்போல் தெரிந்தால், எந்த வியாபாரியும் எந்த நிலச்சுவான்தாரும் தங்களிடம் வைத்துக் கொண்டிருக்கும் நெல்லை மக்க விடமாட்டார்கள். விற்று விடவே பார்ப்பார்கள்.

ஆனால் சர்க்கார் கொள்முதலில் இந்த விஷயம் எல்லாம் கிடையாது. சர்க்கார், தான்யம் நன்றாக இருக்கிறதா என்பதைக் கூடக் கவனிக்க மாட்டார்கள். அது ஒரு நாள் வெளியில் வியாபாரத்துக்கு வரும் போது, புழு புழுத்து மக்கி மிகவும் சீர் கெட்ட நிலையில் இருக்கும்! அதைத்தான் மக்கள் வாங்க வேண்டியிருக்கும். இது தான் சர்க்கார் 'ப்ரொக்யூர்மெண்டு' கொள்கையிலுள்ள விசேஷம்.

சங்கீத மும்மூர்த்திகளின் ஜனன விழா

டாக்டர் வே. ராகவன்

கர்நாடக சங்கீதத்துக்குப் புத்துயிர் அளித்து அதன் ஜீவனெனத் திகழ்ந்த தியாகப் பிரம்மம், சாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகிய மும்மூர்த்திகளின் ஜனன விழா அவர்கள் வாழ்ந்து வந்த திருவாரூர் தலத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுச் சென்ற ஏப்ரல் 17-ந் தேதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் மதுரகானத்துடன் முடிவுற்றது.

விழாவுக்கென்று பிரத்தியேகமான அலங்காரப் பந்தல், திருவாரூர் மேட்டுத் தெருவில் சாமா சாஸ்திரிகள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த அவர் இல்லத்துக்கு எதிரில் அமைக்கப்பட்டிருந்தது. அந்தத் தெரு முழுவதையும் இரு கோடியையும் வியாபித்திருந்த அப்பந்தல் முழுதும் விழாவின் கடைசித் தினத்தன்று கண் கொள்ளாக் காட்சியாகத் தோற்றமளித்தது. தஞ்சை மாவட்டத்திலுள்ள மிராசுதார்களும், பண்ணையார்களும், பண்டிதர்களும் பாமரர்களும், வித்துவான்களும், ரசிகர்களும் ஆண்களும் பெண்களும் திருவாரூர் தேர் விழாவுக்கு வருவது போல வந்து குழுமியிருந்தனர்.

தியாகேசப் பெருமானுக்கு விசேஷ ஆராதனையாக முசுகுந்த அர்ச்சனை வழிபாட்டுக்குப் பின் மறுதினம் மாலை ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் தேவகானம் நான்கு மணி காலம் தேன்மாரியெனப் பொழிந்தது. தலத்தின் மகிமையுடன், சந்தர்ப்ப விசேஷமும், தியாகேசன் கருணையும் கலந்து அன்றையக் கச்சேரிக்குத் தெய்விகத் தன்மையை உண்டாக்கி விட்டிருந்தன. மும்மூர்த்திகளின் சாகித்தியங்களை அன்று ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பாடியதை அந்த மும்மணிகளும் நாதப்பிரம்ம வடிவமாக அப்பந்தலில் நிலைத்து நின்று கேட்டு ஆனந்தித்தனர் என்றால் மிகவும் பொருந்தும். அவர்களுக்கே அர்ப்பணம் என்று அன்றைய தினம் பாடப்பட்ட கீர்த்தனைகளும் ஆரூரான் பேரிலேயே பாடப்பட்ட சுந்தரரின் தேவாரமும் இதர துதிப் பாடல்கள் அனைத்துமே விசேஷ மெருகு பெற்று ஜொலித்தன. தன்னை மறந்து பரவசத்திலாழ்ந்து வழங்கிய அன்றைய நான்கு மணி நேர மதுர கானத்தைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் மெய் மறந்து அனுபவித்தனர். உண்மையிலேயே ஏப்ரல் 17ந் தேதி திருவாரூர் மக்களுக்கு மறக்க முடியாத நாள்.

சங்கீத மும்மூர்த்திகள் திருவாரூரில் பிறந்த இல்லங்களை வாங்கி அவர்கள் ஞாபகார்த்தமாக மண்டபங்கள் எழுப்ப வேண்டுமென்ற ஒரு இயக்கம் ஐந்தாண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப் பட்டது. சாமா சாஸ்திரியார் பிறந்த வீட்டை ஏற்கனவே விலைக்கு வாங்கி அங்கே ஒரு சங்கீதப் பள்ளியும் நடந்து வருகிறது. அதே போல் முத்துஸ்வாமி தீக்ஷிதர் பிறந்த மனையில் ஒரு ஞாபகார்த்த மணி மண்டபமும் பூஜை கிரஹமும் எழுப்பத் திட்டமிட்டு வேலையும் துவங்கி ஆயிற்று. தியாகப்பிரம்மம் பிறந்த வீட்டை வாங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன; சீக்கிரமே முடிந்து விடும் என்று எதிர் பார்க்கலாம்.

கச்சேரிக்குப் பின் மும்மூர்த்திகளின் திருவுருவப் படங்கள் முத்துப் பல்லக்கில் வைக்கப்பட்டு ஊர்வலம் வந்ததும் விழா முடிவடைந்தது.



மே 1-ந் தேதி முதல்

சென்னை கெயிட்டி, மஹாராணி, மஹாலக்ஷ்மி



Elegant



"...என் பெருமை, என் இன்பம்" என்றெல்லாம் கூறுகிறாள், தன் மகன் பச்சிளம் பாலகனிலிருந்து உயரமான வாலிபனாக வளர்ந்ததை அவள் கவனித்திருக்கிறாள்.

உங்கள் பிள்ளைகள், உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகள், அனைவருக்குமே நவீன வைத்திய சாஸ்திர வளர்ச்சியின் மூலம் தேவையான பராமரிப்பும், பாதுகாப்பும் கிட்டியுள்ளன. அற்பமான நோய் என்று அலட்சியமாக இருக்காமல், விவேகமுள்ள நோயாளிபோல் உங்கள் வைத்தியரைக் கலந்தாலோசியுங்கள். அவர் மூலம் உலக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள அற்புதங்களின் பலனை நீங்கள் அடைவீர்கள். உங்கள் வைத்தியரின் தொழில் நுட்ப அறிவும், நடைமுறை அனுபவமும் உங்களுக்கு உதவும். நீங்கள் பின்பற்றவேண்டியதொரு நல்ல வழக்கம்—

உங்கள் வைத்தியரைக் கலந்தாலோசியுங்கள்.

அலெம்பிக் கெமிகல்
வொர்க்ஸ் கம்பெனி லிமிடெட்,
பரோடா-3

ACW 58-1A TM

ஆதாரக் கல்வி

எல்லோருக்கும் மூன்று 'R' கள்—(Reading, Writing, Arithmetic) படிப்பு, எழுத்து, கணக்கு தெரிந்திருக்க வேண்டும். ஆனால் தற்காலத்தில் படித்தவர்கள் நிலைமையையும் படிக்காதவர்கள் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், பொதுவாகப் படித்தவர்களின் நிலைமை பரிதாபத்துக்குரியதாக இருக்கிறது.

படித்தவர்களுக்கு வாழ்க்கையில் சுதந்திரம் (Freedom of action) போய் விடுகிறது. படிப்பின் இலட்சியம் வேலையும், பணமுமாக அமைவதால், பணம் யார் அதிகமாகக் கொடுக்கிறார்களோ, அவர்களுக்குப் படித்தவர்கள் தங்கள் வாழ்க்கையை அடிமைப்படுத்தி விடுகிறார்கள். ஒப்பந்தங்கள் (Service Contracts) மூலமாகவும் இவ்வடிமைத் தனத்தை உறுதிப்படுத்தி விடுகிறார்கள்! ஆனால் கொத்தர், தச்சர், பால்காரர் போன்ற படிக்காத மக்களோ தங்கள் வாழ்க்கையை இம்மாதிரி அடிமைப் படுத்தாமலே பணம் சம்பாதித்துக் கொள்ளும் திறமைபெற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே உத்தியோகத்தில் இருக்கும் படித்தவர்கள் உத்தியோகத்தோடு சுதந்திரமாகச் சம்பாதிக்கும் வழியையும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டுவது இன்றியமையாதது. இவ்வாறு செய்தால், அவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய பயம் இல்லாமற்போகும். அவர்களுடைய வாழ்க்கையும் டாம்பீகமற்று எளியதாக அமைந்து விடும்.

இவ்வாறு படித்து வேலை பார்க்கும் நடுத்தர வகுப்பினருக்கு மற்றொரு சுதந்திரமும் பறி போகிறது. அதுதான் சாப்பாடு சுதந்திரம். தங்களுக்கு வேண்டிய காலங்களில் உணவு கொள்ள முடியாததோடு பக்கத்திலுள்ள ஓட்டல்காரர்களுடைய தயவில் அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது. பலவகையான அசுத்தங்களும் கலப்புகளும் ஏற்பட்டு, உடலும் கெட்டு விடுகிறது. வட இந்தியர்கள் தென்னிந்தியப் பிரதேசங்களுக்கு வரும்போது, அவரவர்கள் தரத்துக்குத் தக்கது போல் தாமே ரொட்டி செய்து சாப்பிட்டு விடுகிறார்கள். எந்த ஹோட்டலையும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. தங்களுடைய உணவைத் தாங்களே தயார் செய்துகொள்ள அவர்களுக்குத் தெரியும். நம்மில் அப்படிச் செய்யப் பெரும்பான்மையினருக்குத் தெரியாது.

மூன்றாவதாக, படித்த, நடுத்தர வகுப்பினருக்கு, வீட்டுச் சுதந்திரமும் போய் விடுகிறது. நடுத்தர வகுப்பினரில் அநேகர் வாடகைவீட்டிலேயே வசிப்பவர்கள். ஆனால் இவர்களைவிடப் பண வசதியில் கீழ் நிலையில் இருக்கும் பாமரமக்களோ, தங்களுக்கென ஒரு குடிசை வீட்டையாவது போட்டுக் கொள்ளுகின்றனர்!

இப்படி எல்லாச் சுதந்திரங்களையும் மக்கள் இழந்து வாழ நேரிட்டால், அவர்கள் வாழ்க்கையின் பிரயோசனத்தை அடைய முடியாது. இந்த வகையில் படிக்காதவர்களே மேலாக இருக்கிறார்கள். அவர்கள் சுதந்திரத்தைப் பறி கொடுப்பதில்லை. ஆகவே எல்லாருக்கும் ஆதாரக் கல்வி (Basic Education) தேவை. ஆனால் நமக்குத் தேவையானது இப்பொழுது அரசாங்கத்தார் வகுத்திருக்கும் ஆதாரக் கல்வியல்ல. இக் கல்வியின் மூலம் ஒவ்வொருவரும் தம் உணவைத் தாமே சமைக்கத் தெரிந்து கொண்டு தன் கையைத் தவிர வேறு கையால் சமைத்த உணவை உட்கொள்வதில்லை என்ற தீவிரமானபழக்கத்தை வைத்துக் கொள்ள வேணும். வடநாட்டில் 'பத்து' தேய்க்கும் பணியாளர்கள்கூட அப் பாத்திரத்தில் மிகுந்திருக்கும் அன்னத்தைத் தாங்கள் உட்கொள்ளார். பத்துப் பாத்திரம் போடுகிறவர்கள் உயர்ஜாதியினராய் இருந்தாலும் அவர்கள் அன்னத்தைவிட, தேய்ப்பவர்கள் தங்கள் கைகளால் சமைத்த அன்னமே உயர்ந்தது என்ற எண்ணம் இன்றும் நிலைத்திருக்கிறது.

அவர்கள் தாங்கள் செய்து கொள்ளும் சமையலுக்கு அதிக நாழிகையே வேண்டியதில்லை. மாவைப் பிசைந்து நான்கு ரொட்டி தட்டினால் வயிற்றில் பாதி நிறைந்து விடும். நாம் அநேகவித பதார்த்தங்களைப் பழக்கிக் கொண்டு திணறுகிறோம். அரிசி உண்ணும் நாம் தாமதமின்றி சுயம் பாகம் செய்து கொள்ளும் தகுந்த பக்குவம், வெண் பொங்கல். கொஞ்சம் தயிரும்கூட வைத்துக் கொண்டுவிட்டால் போதும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையுமாவது இந்தக் கைச் சமையல் என்னும் ஆதாரக் கல்வியைக்கற்றுக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக எப்பொழுதுமே எவ்வூருக்குச் சென்றாலும் நம் கைப்பாகமே நமக்கு உதவும் முறையைக்கையாண்டுகொள்ள வேண்டும். இந்த நியமத்தின் பயனாக, இனப் சாப்பாடு, கலப்புச் சாப்பாடு முதலியவற்றால் குன்றி வரும் நாட்டுக்குச் சிறப்பான கொல்லாமை விரதத்துடன் கூடிய சைவஉணவு முறை சற்றேனும் மிஞ்சும். வாழ்க்கையை மற்றவருக்கு அடிமைப் படுத்தாமல், பணம் சம்பாதிக்கும் வழியைக் கற்றுக் கொள்ள வேண்டும். தனக்கென்று சொந்தமாக ஒரு குடிசை வீட்டையாவது அமைத்துக் கொள்ள வேண்டும். இதுவும் அடிப்படைக் கல்வியின் ஒரு முக்கியமான முறையாகும். இவ்வாறு ஒருவன் தன் சுதந்திரத்தைப் பறி கொடுக்காமல் தன் வாழ்க்கையைவகுத்துநடந்துகொள்ளத் தெரிந்துகொண்டால் அவனை அறியாமலேயே அவனுக்கு ஒருதைரியம்பிறக்கும்.

ஸ்ரீசங்கராச்சாரியார்-காஞ்சிகாமகோடி பீடம்

கொழும்பில் ஸ்ரீ ராமநவமி

கொழும்பு, ஏப்ரல் 20உ

கொழும்பில் பிரதி வருடமும் ஸ்ரீ ராம நவமி உற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாடி வரும் ஸ்ரீ ராமகான சபையினர் வழக்கம் போல் இவ்வருடமும் ஸ்ரீ ராம நவமி உற்சவத்தைச் சென்ற ஏப்ரல் 17, 18, 19ம் தேதிகளில் கொண்டாடினார்கள். விசேஷ பூஜை, ஆராதனை, இசை நிகழ்ச்சிகள், கதாப்பிரசங்கம் முதலியவை வழக்கம் போல் நடந்தன. ஆஸ்திகர்கள் இந்த வைபவத்தில் ஏராளமாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். பிரபல ஆடிட்டரான திரு கே. எஸ். வைத்தியநாத அய்யர் சபைக்கு மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தச் சபையினர் நிரந்தரமாகச் சபையில் ஒரு புரோகிதரை வைத்திருப்பதும் வைதிகக் காரியங்களுக்கு அவரது உதவி கிடைக்கச் செய்வதும் குறிப்பிடத் தகுந்தது.

ரஸிக ரஞ்சன சபையில் பிளவு

யாழ்ப்பாணத்தில் சென்ற ஏழு ஆண்டுகளாக இசை விழாக்களை நடத்திச் சிறந்த முறையில் இசை வளர்த்து வந்த ரஸிக ரஞ்சன சபாவில் துரதிர்ஷ்டவசமாக இவ்வருடம் பிளவு ஏற்பட்டு விழாவையே ஒத்திவைக்க வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது. ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மைதானத்தில் நடைபெறும் இவ்விழாவில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சில வித்வான்களுக்கும் இடமளிப்பதென்று நிர்வாகக் குழுவிலுள்ள அங்கத்தினர்களில் பெரும்பாலோர் தீர்மானித்தார்கள். அதன்படி அந்த வித்வான்களின் பெயர்களும் விழா நிகழ்ச்சி நிரலில் சேர்ந்து அச்சிடப்பட்ட பின் தாழ்த்தப்பட்ட வகுப்பு வித்துவான்களை அனுமதிக்கக் கூடாதென்றும் அவர்களை அனுமதித்தால் "உயர் வகுப்பு" வித்வான்கள் கச்சேரி செய்ய வரமாட்டார்களென்றும் ஒரு கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. இக்கிளர்ச்சிக்கு நிர்வாகக்குழுவில் பெரும்பான்மை அங்கத்தினர்கள் இசைவதாயில்லை.

புதிய குழு தெரிவு செய்யப்பட்டுத் தாழ்த்தப்பட்ட வகுப்பு வித்துவான்கள் இல்லாமலே விழாவை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இதில் ஒரு முக்கியமான விஷயம் கவனிக்கத் தகுந்தது. ரஸிக ரஞ்சன சபா அரசாங்க மான்யம் பெற்று இசைவிழா நடத்துகிறது. சாதி சமய அடிப்படையில் வேற்றுமைகளைப் பாராட்டுவது அரசாங்கச் சட்டப்படி குற்றமாகும். இந்த நிலைமையில் தாழ்த்தப்பட்ட வகுப்பு வித்துவான்களைச் சாதி அடிப்படையில் ஒதுக்கிவிட்டு, இசை விழா நடக்கும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தவிர, சபையின் இந்த வகுப்புபேத நடவடிக்கை முற்போக்கானவர்களுக்கு மிகுந்த மனக் கொதிப்பையும் கொடுத்திருக்கிறது. இதுமாதிரியான பல காரணங்களையும் முன்னிட்டு இசை விழா ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

மலைநாட்டு எழுத்தாளர் முன்னணி

ரப்பர் தேயிலைத் தோட்டங்களிலிருக்கும் மலைநாட்டுப் பகுதியில் எவ்வளவோ அருமையான சிறுகதைகளையும் எழுத்தோவியங்களையும் படைக்கும் இளம் எழுத்தாளர்கள் அமோகமாக இருக்கிறார்கள். ஆனால் ஆதரிப்பார்களின்றி அவர்கள் முன்னுக்கு வர வழியில்லாமல் இருக்கிறது. போதிய ஆதரவு மட்டுமிருந்தால் இவர்களது படைப்புகள் இலங்கையில் மிகப் பெரிய இலக்கியப் புரட்சியை ஏற்படுத்தலாம். இத்தகைய எழுத்தாளர்களை முன்னுக்குக் கொண்டுவரவும் அவர்களது படைப்புகளைத் திரட்டி ஒரு சிறு கதைத் தொகுதியை வெளியிடவும் திரு ஸி. வி. வேலுப் பிள்ளை என்பவரது முயற்சியினால் மலைநாட்டு எழுத்தாளர் முன்னணியொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் பார்லிமெண்ட் அங்கத்தினரும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்தவருமான திரு வேலுப் பிள்ளை இலங்கையின் தாகூர் என்று பெயரெடுத்தவர். அவரது ஆங்கிலக் கவிதைகள் இங்கும் மேனாடுகளிலும் வெகுவாகப் போற்றப்பட்டவை. —ரஜனி



மணங்கமழும் வாசனைத் திரவியங்கள் செய்து புகழ் நாட்டிய டி. எஸ். ஆர். கம்பெனியின் அதிபர் ஸ்ரீ டி. எஸ். ராஜகோபாலய்யங்கார் குடந்தை நகரசபையின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

கல்கி

மாவட்டச் சிறுகதைப்போட்டி

முதற் பரிசு ரூ. 200. இரண்டாவது பரிசு ரூ. 100

★

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக்கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும், எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவது போட்டி

நெல்லை மாவட்டம்

விதிகள்

1. கதைகள் நெல்லை மாவட்டத்தின் சூழ்நிலை எல்லா வகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். நெல்லைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊர்கள், பழக்க வழக்கம், தொழில், பாபநாசம், குற்றாலம் அருவிக் கரை, தாம்பிரவர்ணி நதிதீர வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப் போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசு பெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதியுடையவை, உரிய சன்மானம் அளித்துக் 'கல்கி'யில் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப்பெற விரும்புவோர் கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. நெல்லை மாவட்டப் போட்டிக்கான கதைகள் மே மாதம் 31-ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும்.

9. போட்டி முடிவு ஜூன் மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், கதைகளின் தலைப்புக்களிலும் "கல்கி நெல்லை மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு: நெல்லை மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியானதும், அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி



வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

80

அறிவு இரு வகையாக அடையலாம். ஒன்று நூலைப் படித்து அடையும் முறை. மற்றொன்று பெரியோர் சொல்லக் கேட்டு அடையும் முறை. ஒன்று கல்வி, மற்றொன்று கேள்வி. இவ்விரண்டிலும் கேள்வியே மேலானது என்று கூடச் சிலர் சொல்லுவார்கள். தானே படித்தறிந்ததை விடப் பண்பட்ட ஆசாரியன் சொல்லக் கேட்டது நன்றாக மனத்தில் பதியும் என்கிற காரணத்தால் கல்வியைவிடக் கேள்வி மேலானது என்பார்கள். தானே படித்தறிந்த அறிவில் குற்றங்கள் புகுந்திருக்கலாம். கேள்வியில் அது கிடையாது. அது இருமுறை வடிகட்டிய அறிவு. ஆனபடியால் அதில் குற்றம் மிகக்குறைவு என்பது நிச்சயம்.

செல்வத்துள் செல்வம்
  செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம்
  தலை.

செவிச் செல்வம் - செவியால் வந்த செல்வம், கேள்வி.

* * *

அறிந்த பெரியோர் வாய் வரும் கேள்வியை அனுபவித்துச் சுவை கண்டவர்கள் வயிற்றுப் பசியைக்கூட மறந்து விடுவார்கள். பசி தீர்க்க வேண்டியதை இரண்டாம் பட்சமாகக் கருதுவார்கள்.

செவிக்குணவு இல்லாத
  போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்
  படும்.

* * *

உபதேசம் செய்வது ஒரு யாகம். செவியை ஓமாக்கினி குண்டமாக வைத்து அக்கினியில் சொரியும் அவியைப் போன்றது பெரியோர் சீடர்களுக்கு அவர்களுடைய செவி மூலம் தரும் அறிவு என்கிறார் முனிவர். சொல்லும் ஆசாரியன் ஒரு பெரிய வேள்வியைச் செய்யும் பயனை அடைவான். அறிவைப் பெறும் சீடன் அவியைப் பெற்றுத் திருப்தி யடையும் தேவர்களைப் போல் ஆவான்.

செவிஉணவின் கேள்வி
  உடையார் அவிஉணவின்
ஆன்றாரோடு ஒப்பர்
  நிலத்து.

செவி உணவின் கேள்வி உடையார் - பெரியோர்கள் சொல்லக் கேட்டுப் பெற்ற அறிவு அதாவது கேள்வியை அடைந்தவர். அவியுணவின் ஆன்றோர் - அவியை உணவாக உடைய தேவர்கள்.

கேள்வி யறிவை அடைந்தவர்கள் இந்த மண்ணுலகத்தில் நின்றே தேவர்கள் ஆவார்கள்.

கற்றிலன் ஆயினும்
கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம்
துணை.

ஒற்கம் - தளர்ச்சி. ஊற்று - ஊன்றுகோல்.

கல்வியும் ஒழுக்கமும் நிறைந்த பெரியோர்களின் உபதேசத்தைக் கேட்கும்போது உடனே அதன் நற்பயன் தெரிய மாட்டாது. தளர்ச்சி வந்தபோது அது ஊன்றுகோல் போல் உதவும். அப்போது அதன் பயனை உணர்வோம். கற்றவன் ஆயினும் கேட்க - நூல்கள் படித்து அறிவு அடைய வழியில்லாது போனாலும் பெரியோர் வழியாவது அறிவை அடைவது நலம்.

* * *

கல்வியும் ஒழுக்கமும் நிறைந்த பெரியோர்களின் பிரவசனங்களைக் கேட்காதவர் செவிடர்களே ஆவர். அவர்களுக்குக் காது இருந்தும் இல்லாததைப் போலவே!

கேட்பினும் கேளாத்
தகையவே கேள்வியால்
தோட்கப் படாத
செவி.

நல்லோர் கூறும் சொற்களால் துளைக்கப்படாத செவி, ஓசை மாத்திரம் கேட்கலாம். ஆனால் செவிட்டுக் காதுக்குச் சமானமே.

* * *

கல்வி கற்றவர்கள் அகங்காரத்துக்கு இரையாகக் கூடும். அப்படி ஆகாமல் தப்புவதற்கு வழி நல்லவர்களிடம் கேள்வி அடைய வேண்டும். கேள்வியால் வந்த அறிவு பணிவும் அடக்கமும் தரும்.

நுணங்கிய கேள்வியர்
அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல்
அரிது.

வணங்கிய வாயினர் - வினயத்தோடு கலந்த பேச்சுப் பேசுபவர்கள்.

நுட்பமான விஷயங்கள் கேள்வியாலேதான் அடைய முடியும். அவை மனிதனுக்கு அறிவோடு அடக்கமும் தரும்.

பாகவதமாகிய

பக்திவயல்

பௌராணிகர்

35. கண்ணன் திருஅவதாரம்

பரீக்ஷித்து மன்னன் சுகரிடம் பின்வருமாறு வினவினார் :— "உங்களால் சூரிய சந்திரவம்ச வரலாறுகள் கூறப்பட்டன. இப்பொழுது யதுவம்சத்தில் அவதரித்த விஷ்ணுவின் வீரச்செயல்களை எனக்கு விவரமாக உரைக்க வேண்டும். கண்ணன் என்ற படகில் ஏறிக் கௌரவ சேனை என்ற கடலை எனது பாட்டன்மார் துயரின்றித் தாண்டினார்கள். குருமகன் கொடுமையினின்று என்னைக் கருவிலே 'காத்த கருணாநிதியின் கதை யமுதைப் பருகும் எனக்கு நீரும் அருந்தா திருந்தும் பசி என்பதே தெரியவில்லை" என்றான்.

இக்கேள்வியைக் கேட்ட சுகர் மனம் குளிர்ந்தது. கண்ணன் கதையைச் சொல்லலானார் :—

செருக்கடைந்த அரசராய் வந்த அசுரர்களின் பரிவாரங்கள் பூமாதேவியை வருத்தின. அந்த பாரம் தாங்காது அவள் ஒரு பசு வேடம் பூண்டு பிரமதேவனிடம் சென்று தன் குறையை முறையிட்டாள். பிரமன் தேவியையும் முக்கண்ணனையும் மற்ற தேவர்களையும் அழைத்துக் கொண்டு பாற்கடலை அடைந்தார். அங்கு சென்று அனந்தனைப் "புருஷஸூக்தம்" என்ற மந்திரத்தால் துதித்தார். அப்பொழுது பிரமனுக்கு ஒரு அசரீரி வாக்குக் கேட்டது. அதன் சாரத்தை அவர் தேவருக்கு எடுத்துரைத்தார். "கேளுங்கள், தேவர்களே ! பரமன் எனக்குச் சொன்ன சொல் இதுவே. பூமியின் துயரத்தை நான் அறிவேன். நீங்கள் யதுகுலத்தில் பிறந்து என் வரவை நோக்கிக் காத்திருங்கள். தாமதம் வேண்டாம். தேவமாதரும் அங்கு கோபிகளாய்ப் பிறக்கட்டும். எனது அம்சமாகிய ஆதிசேஷன் எனக்கு முதல்வனாய் அங்கு பிறப்பான்" என்றார். தேவருக்கு இவ்வாறு கட்டளையிட்டு விட்டுப் பிரமன் தமது லோகத்துக்குச் சென்றார்.

சூரஸேனன் என்ற அரசன் மதுரையை ஆண்டு வந்தான். மதுரை (மத்ரா) என்பது அவர் தலைநகரம். வசுதேவன் என்ற பிரபுவுக்கும் தேவகி என்ற அரசகுமாரிக்கும் அங்கு திருமணம் நடந்தது. சடங்குகள் முடிந்ததும் வசுதேவன் தன் வீடு செல்வதற்கு (மனைவியுடன்) தேரில் ஏறினான். தேவகியின் அண்ணனான கம்ஸன் (சூரஸேனன் உடன் பிறந்தோனான உக்ரஸேனனின் புதல்வன்) தானே அந்த ரதத்தை ஓட்ட முன் வந்து குதிரைகளின் கடிவாளத்தைக் கையில் பிடித்தான். ஊர்வலச் சீரோடு மணமகனும் மணமகளும் ஏறிய தேர் செல்ல ஆரம்பித்தது. சங்கமும் பேரிகையும் மங்களமாக ஒலித்தன. அப்பொழுது தேரோட்டும் கம்ஸனுக்கு ஒரு அசரீரி வாக்குக் கேட்டது. "மதியற்ற மானிடனே! இந்தத் தேவகியின் எட்டாவது குழந்தை உன் உயிரை வாங்கப் போகிறது" என்று அவன் காதில் சொல் விழுந்தது. உடனே சீறினான் கம்ஸன். தங்கையின் தலைமயிரைக் கையில் பிடித்தான். வாளை உருவினான். 'இதோ கொன்று விடுகிறேன் இவளை' என்று துணிந்தான். அப்பொழுது வசுதேவர் அவனை நல்வாக்கால் தணிய வைத்தார். "வீரத்தில் சிறந்த சிற்றரசனே ! ஒரு பெண்ணை அதுவும் உன் உடன்பிறந்தவளை, அதுவும் மணக்கோலம் கலையாது துலங்கும் கன்னிகையைக் கொல்வது உனக்குப் பொருந்துமா? பிறந்தவர் இறப்பது மாருத மர்மம். இன்றைக்கும் இறப்பர். நூறாண்டு வாழ்ந்தும் இறப்பர். நடந்து செல்பவன் ஒரு காலை ஊன்றி மறுகாலைத் தூக்கி முன் வைப்பது போலவும், அட்டை ஒரு இலையில் ஒட்டிக்கொண்டு முன் இருந்த இலையை விடுவது போலவும், மறு பிறவியை அடைந்து இப்பிறவியை ஜீவன் விடுகிறது. ஆகவே, தனக்கு முடிவுண்டு என்று அறிந்தவன் பிறருக்குத் தீங்கு இழைக்க மாட்டான். இப்பெண் கதியற்றவள். உனக்கு மகள் போன்றவள். அனாதைக்கு ஆதரவு செய்வது உனது கடமை" என்றார்.

ஆனால் கம்சனுக்கு இந்த உபதேசம் ஏறவில்லை. தன் எண்ணத்தை நிறைவேற்றவே சித்தமானான். சாவைத் தடுப்பது எவ்விதத்திலும் தர்மம் என்று அறிந்த வசுதேவர் திரும்பவும் கம்சனிடம் பேசலானார். "இப்பெண்ணிடம் நேராக உனக்குப் பயம் உண்டு என்று அசரீரி கூறவில்லை. இவளுக்குப் பிறக்கும்

மைந்தரிடம்தானே உனக்குப் பயம். பிறந்ததுமே இவள் சிசுக்களை உன்னிடம் கொடுத்து விடுகிறேன்'' என்றார். வசுதேவர் இவ்வாறு தீர்மானித்ததற்கு அநேக காரணங்கள். நெருங்கிய ஆபத்தை நீக்கவேண்டும் என்பது ஒன்று. பிள்ளை பிறந்தால் பார்ப்போம் என்பது மற்றொன்று. யார் யாரைக் கொல்லப் போகிறார்கள் என்று நாம் அறியோம். என் சிசுவே இவளைக் கொல்லக் கூடாதா என்பதும் ஒரு காரணம்.

கம்சன் சினம் தணிந்தான். தேவகியை விட்டு விட்டான். களிப்புடன் வசுதேவர் வீடு சென்றார். அவர் சொன்ன வார்த்தை தவறாதவர். ஆகவே தமக்கு முதல் குழந்தை பிறந்ததுமே அதை எடுத்துக்கொண்டு கம்சனிடம் சென்றார். சாதுக்களுக்குப் பொறுக்க முடியாத தென்பதும் உண்டோ? அறிந்தவருக்கு அருமைப் பொருள் ஏது? இவரது நேர்மையைக் கண்ட கம்சனே கசிந்தான். ''இக் குழந்தையை எடுத்துச் செல்லுங்கள். எட்டாவது மகனிடம்தான் எனக்குப் பயம்'' என்றான். வசுதேவர் மகனோடு வீடு திரும்பினார்.

இந்நிலையில் நாரதர் கம்சனைச் சந்தித்தார். ''ஆயர்பாடியில் வசித்துவரும் இடையரும் அவர் தலைவன் நந்தனும் யாதவர் அனைவருமே தேவர்கள். உனக்குப் பகைவர்'' என்று சொன்னார் கம்சனிடம். புவியின் பாரத்தைத் தீர்க்கப் பிரமன் முதலியோர் செய்த சூழ்ச்சியையும் அவனுக்குக் கூறினார். கம்சனுக்குப் பயம் அதிகரித்தது. வசுதேவரையும் தேவகியையும் விலங்கிட்டுச் சிறைப் படுத்தினான். அவ்விருவருக்கும் பிறந்த ஒவ்வொரு சிசுவையும் கொன்றான். தன் தகப்பன் உக்ரஸேனனையே சிறையில் வைத்துத் தானே நாட்டை ஆளலானான். தனது தோழர்களான அசுர மன்னரோடு கலந்துகொண்டு யதுகுலத்தை அழிக்கத் துணிந்தான். யதுக்கள் வேறு நாடுகளுக்குச் சென்று புகலிடம் தேடினார்கள். சிலர் வழியின்றிப் பின் தங்கினார்கள்.

தேவகி ஏழாவது கருத்தரித்தாள். கருவின் உருவாகியது ஆதிசேஷனே. அச்சமயம் விஷ்ணு தனது யோகமாயையை விளித்து, ''தேவியே! ஆனினம் நிறைந்த ஆயர்பாடியை அடைவாய். தேவகியின் கருவை எடுத்து ரோகிணியிடம் சேர்ப்பாய். பிறகு நானே தேவகியினிடம் மகனாய்ப் பிறப்பேன். யசோதையின் மகளாய் நீ பிறப்பாய். உன்னைத் துர்க்கை என்றும் காளிஎன்றும் வைஷ்ணவி என்றும், மாயை என்றும் மனிதர்கள் பலவாறு துதிப்பார்கள். ரோகிணியின் மைந்தனை, அனைவரையும் ரமிக்கச் செய்வதினால் 'ராமன்' என்றும் பலம் பொருந்தியதால் 'பலராமன்' என்றும் அழைப்பார்கள்'' என்றார்.

அவதாரம் செய்ய வேண்டிய வேளை நெருங்கியது. கிழக்குத் திசையில் தோன்றும் இளம் பிறையென நாராயணன் தேவகியின் உள்ளத்திலே தோன்றினார். தேவகியோ குடத்தில் அடைத்த சுடர் போலவும், பிறருக்குப் பகராத அறிவைப் போலவும் சிறைச் சுவரால் கட்டுண்டு, ஆண்டவனைத் தரித்திருந்தும் முழு ஒளி பரவாது சற்றே மங்கி நின்றாள். ஆனால் கம்ஸன் அவளது புது அழகையும் மாறாப் புன்னகையையும் கண்டு வியந்தான். ''இதென்ன காந்தி! நிச்சயமாய் ஹரி இவள் கருவில், குகையில் புகும் சிங்கமெனப் புகுந்திருக்கிறார். பிறந்ததும் ஹரியைக் கொல்லுவது எவ்விதம்? இல்லை



யேல் இப்பொழுதே தேவகியை மாய்ப்பதா? கருத்தரித்திருக்கும் பெண்ணைக் கொன்ருல் எனது புகழ் குன்றி ஊர் சிரிக்குமே. மேலும், இறந்ததும் நரகம் ஏக வேண்டுமே. என்ன செய்வது?'' என்று பலவாறு திகைத்தான் கம்ஸன்.

அச்சமயம் நாரதரும் பிரமனும் முக்கண்ணனும் தேவரோடு அங்கு சென்று முகுந்தனைத் தோத்திரம் செய்தனர். ''அண்ணலே! உனது பேரைக் கேட்ப வரும் கூறுவோரும் மறு பிறப்பெய்த மாட்டார். உன்னுடைய சுந்தரப் பாதங்கள் புவிமீது படுவதை ஆவலுடன் எதிர்நோக்கி நிற்கிறோம். மீனுக, பரியாக, பயங்கரச் சிங்கமாக ஆழியில் ஆமையாக, அந்தணனுய், அரும் குறளனுய் வந்திங்கு காத்தவனே! யது குலத்து மாமணியே! இப்போது பூமியின் பாரத்தைப் போக்குவாய்!

''அம்மையே! அனந்தனே உன்றனுள் வீற்றிருக்கிறுன். கம்ஸனுக்குஅஞ்சவேண்டாம். தன் முடிவைத் தானுகக் கோருகிறுன். உன் மகனே யது குலத்தைக் காப்பாற்றுவான்'' என்று புகழ்ந்தனர்.

அவதாரத்தின் அழகிய தருணம் வந்தது. சோபனங்கள் சொரிந்தன. மங்களங்கள் மலிந்தன. ரோகிணி நக்ஷத்திரம் உதயமாயிற்று. திசைகள் ஒளியோடு திகழ்ந்தன. வானத்தில் நட்சத்திரங்கள் பழுதின்றிப் பிரகாசித்தன. ஆற்று நீர் தெளிந்தோடிற்று. ஏரிகள் நீர் நிரம்பித் தாமரை மலருடன் மனத்தைக் கவர்ந்தன. தென்றலும் நறுமணத்துடன் கலந்து மெதுவாக வீசியது. அந்தணர் வளர்க்கும் அக்னியும் மங்கல் மாறிச் சுடர் விட்டெரிந்தது. நல்லோர் மனம் மலர்ந்தது. பிறப்பில்லாப் பரமன் பிறந்தபொழுது விண்ணவர் துந்துபி வாசித்தனர். கந்தர்வர் பாடினர். அப்ஸரர் ஆடினர். நள்ளிரவில் தோன்றிய நாராயணனுக்கு வானவர் மலர்மாரி பொழிந்தனர். கடற்கரை ஓரத்தில் முகில் கூட்டம் மெல்லமெல்லக் கர்ஜித்தது. கீழ்வானத்துப் பிறையெனக் கண்ணன் தேவகியினிடம் தோன்றினுர்.

அற்புதப் பாலனைக் கண்ணுற்ற வசுதேவர் மெய்மறந்தார். தாமரைக் கண்ணிரண்டும், கை நான்கினில் ஏந்திய சங்கு சக்கர கதையும், மார்பிலே ஸ்ரீவத்ஸம் என்ற மருவும், கழுத்திலே கௌஸ்துப மணியும், மஞ்சள் பட்டாடையும், கருமுகிலின் அழகும், குண்டலத்தின் ஒளி பரவும் முன் குழலும், அணிந்த பல ஆபரணங்களும் ஒருங்கே அவர் மனத்தைக் கவர்ந்தன. களிப்பால் கண் மலரத் திருமாலைத் தனயனுய் அடைந்த வசுதேவர் அப்பொழுதே மனத்தினுல் பதினுயிரம் பசுக்களை அந்தணருக்கு தானம் செய்தார்.

பரீக்ஷித்து மன்னனே! பிறகு பாலகனைப்பரமனென்று அறிந்த வசுதேவர் பயமின்றி மனம் தெளிந்து புகழலானுர். ''இவ்வுலகைக் காக்கவே தேவரீர் என் இல்லத்தில் அவதாரம் செய்திருக்கிறீர். அசுரரை அழிக்கவே வந்தவருக்கு வந்தனம். ஆயினும் தேவனே! கொடியவனை கம்ஸன் இங்கு நீர் பிறப்பீர் எனக் கேட்டு உமக்கு முன்பிறந்தோரைக் கொன்று விட்டான். நீர் பிறந்ததைக் கேட்டதும் ஆயுதபாணியாய் விரைந்தோடி வருவான். இதற்கு என்ன செய்வது?'' என்று கூறித் தம் துதியை முடித்தார். தேவகியும் கண்ணனைப் புகழ்ந்தாள். ''பக்தரின் பயத்தைப் பறக்கடிக்கும் பரந்தாமனே கம்ஸனிடமிருந்து எங்களைக் காப்பாற்றவேண்டும்.



மேலும், மனத்திலே தியானம் செய்ய வேண்டிய இவ்வுருவை அனைவருக்கும் தோற்றம் அளிக்காதீர். தேவரீர் என்னிடம் பிறந்ததாய்க் கம்ஸன் அறிய வேண்டாம். இவ் வுருமாறி அருள வேண்டும்'' என்ருள்.

பகவான் பேசலுற்ருர்: "தாயே! முன்ஞெரு பிறவியில் "பிருச்னி" என்ற பெருடன் வாழ்ந்தனை. வசுதேவர் "சுதபஸ்" என்று பேருடன் விளங்கினுர். இருவரும் என்னைக் குறித்துப் பெரும் தவம் செய்தீர்கள். மழையால் நனைந்து வெய்யிலால் வாடி மூச்சை அடக்கி என்னிடம் வரங்களை விரும்பினீர்கள். அச்சமயம் நான் இவ்வுருவோடு தரிசனம் அளித்தேன். என்னைப் போல் ஒரு மகன் வேண்டும் என்று வேண்டிக் கொண்டீர்கள். முக்தியைக் கேட்கவில்லை. உங்கள் எண்ணம் கைகூடிற்று. எனக்கு இணையில்லாமையால் நானே மகனுகப் பிறந்தேன். அப்பொழுது எனக்கு "பிருச்னி கர்பன்" என்று பெயர். மற்றெரு பிறவியில் உங்களுக்கு நான் "வாமன"னுகப் பிறந்தேன். இப்பொழுது உங்களுக்கு நான் மூன்ருவது தடவையாகப் பிறந்திருக்கிறேன். எனது முன் அவதாரத்தை அறிவிக்கவே இவ்வுருவோடு தோன்றினேன்'' என்ருர்.

அவர் பேசிமுடிந்ததும், அந்த உருமாறி இளம் குழந்தையாகத் தோன்றினுர்.

கல்கத்தாவில் கலைவிழா

சுப்புடு

கல்கத்தாவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள பைன் ஆர்ட்ஸ் கிளப்பானது அதன் அரங்கேற்று விழாவைச் சென்ற பத்தாம் தேதி மாலை நடத்தியது. கட்டுக்கடங்காத கூட்டம் விழாப் பந்தலை நிரப்பியதிலிருந்து அரங்கேற்றம் செய்தவர் யார் என்று ஒருவாறு ஊகித்தறியலாம். அந்த நாதோபாசினி கொட்டகையையே நாத வெள்ளத்தினால் நிரப்பி விட்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

மறுநாள் நடந்த குமாரி வி. வி. எஸ். வசந்தாவின் பரத நாட்டியக் கச்சேரி பல அம்சங்களில் பழைமையை வழுவிய புதுமையாய் அமைந்தது.

வஸந்தாவின் நாட்டியத்திலே உசேனி ஸ்வரஜதி உசத்தி. உசேனியைப் பைரவியாக அடித்து ரணம் பண்ணி விடாமல் உசேனியை ஊறுகாய் போட்டு ருசிக்கச் செய்ததைக் குறிப்பிட வேண்டும்.

சொல்லுக் கட்டுகளெல்லாம் ரொம்ப விவரமாகவும், தாளப் பின்னல்களுடனும் அமைந்திருந்தன. வழக்கத்துக்கு விரோதமாக அலாரிப்பு சங்கீர்ணத்திலும், தில்லானா மிஸ்ரஜாதி ஜம்பையிலும் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தன. கணக்கு விஷயங்களைச் சுணக்கமில்லாமல் தன் வயப்படுத்திக் கொண்டு அடவுகளை அவைக்கேற்ப அலங்காரமாயும் அனுயாசமாயும் செய்து முடிக்கும் வன்மை வசந்தாவுக்கு இருக்கிறது. சங்கீர்ண அலாரிப்பைப் பற்றிக் கல்கத்தாவில் முதிர்ந்த சங்கீத அபிமானி ஒருவரின் அபிப்பிராயத்தை இங்கு கூற விரும்புகிறேன். அதை நல்ல முறையில் எடுத்துக்கொண்டு தம் முறையை மாற்றிக் கொள்ளுவதுதானே கலைஞர்களுக்கு அழகு? இந்த நல்ல குணத்தை வசந்தாவிடம் எதிர்பார்க்கிறேன். அலாரிப்பின் தாத்பரியமே அதனுடைய வேகமும், விறுவிறுப்பும்தான். திஸ்ரம் அழகு. சதுஸ்ரம் சௌக்கியம், கண்டம் தவிப்பு, மிஸ்ரம் பிராண சங்கடம் என்பது அவர் துணிபு. மூன்றை ஒன்பதாக்கும் போது அளவு இழுக்கப்படுகிறது. சங்கீதபரிபாஷையில் 'இழுவை' என்று அழைக்கப்படும் இந்த அம்சம் சங்கீர்ண அலாரிப்பில் தாம் கண்டதாக அம்முதியவர் தெரிவித்தார். மேலும் தாளச் சிலம்பங்களில் ரொம்பவும் புகுந்து விட்டால் ஜனங்கள் ரஸிக்கக் கூடிய அம்சம் பாதிக்கும்படி ஆகி விடுகிறது. குமாரி வசந்தாவின் அன்றைய நாட்டியத்தில் இடைநேரத்துக்குப் பிறகு ஆடிய பதங்களுக்குள் "இடது பாத"மும் "ஆனிப் பொன்னம்பலத்தே"யும் மிகவும் ரஸமாக இருந்தன.




நாட்டியங்களிலே, ஒன்று அமைந்தால் ஒன்றமையாது. இங்கே பாட்டு, பக்க வாத்தியம் எல்லாம் அளவுக்கு மீறாமல் கச்சிதமாய் அமைந்தன. தஞ்சாவூர் மகாலிங்கம், திரு தியாகராஜனின் சிஷ்யர். சாரீரம் ரொம்பச் சௌகர்யமானது. உச்சரிப்பு கச்சிதம். பாவம் பரிபூர்ணம். நாட்டியத்துக்கு வேறென்ன வேண்டும்?

கடைசியாக, திருமெய்ஞானம்/திருவெண்காடு சுப்ரமண்யபிள்ளையவர்கள் நாதஸ்வரக்கச்சேரி செய்தார்கள், பிடிலும் மிருதங்கமும்வைத்துக்கொண்டு. பிடில் இளைஞன் சிக்கல் ஜெயராமனுக்கு நல்ல ஞானம்; லகுவான விரல்கள்; வீச்சுகள் சுநாதம். அநாவசிய அபஸ்வரப் பிடிகள் காளடையில் அடிபட்டுப்போய்விடும். தைரியம் இருக்கிறது. ஆனால் கொஞ்சம் ஜாஸ்தி. முன்னுக்கு வரவேண்டியவர்தான். நிற்க, ஒருகாலத்தில் சுப்பிரமணிய பிள்ளையவர்களின் வாசிப்பைக் கேட்டு மயங்கியவர்களில் அடியேனும் ஒருவன். "அந்த நாளும் வந்திடாதோ" என்ற நிலைமையில் இருந்தது அன்றையக் கச்சேரி.

இந்தச் சிறிய விமர்சனத்தை முடிப்பதற்கு முன்னால் கல்கத்தாவில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் இந்தக் கலை ஸ்தாபனத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லவேண்டும்.

இருபத்தைந்து உத்ஸாகிகள் சேர்ந்து நிறுவிய ஸ்தாபனம் பைன் ஆர்ட்ஸ் கிளப். பலமான அஸ்திவாரம் போல் விளங்கும் ஆசாமி ஸ்ரீ வி. டி. சாமி. உழைத்துப் பாடுபடக் காரியதரிசி ஸ்ரீ ஸ்ரீநிவாசன். குறைந்த கட்டணத்தில் காது நிறைந்து சங்கீதம் பரிமாற, நோக்கம் ஈடேற ஈச்வரன் கிருபை வேண்டும். மனித யத்தனத்துக்குத் திரு வி. டி. சாமி வேறு இருக்கிறார். வேறு என்ன வேண்டும்? பைன் ஆர்ட்ஸ் கிளப் மேலும் மேலும் சிறப்புற்று ஆயிரக்கணக்கான ரசிகர்களின் பாராட்டுதலையும் நன்றியையும் பெறும் என்று நிச்சயமாக நம்பலாம்.



தாமரைக் குளம்

காந்தன்

சமஸ்தான மன்னர்களும், ஜமீன்தார்களும் ஜனநாயக அரசியலுக்குத் தேவையில்லை என்று தீர்மானமாகி ஒருவாறு அவர்களைத் தீர்த்துக் கட்டியாகி விட்டது. ஆனால் அவர்கள் தேவைப்படும் இடங்களும் இருக்கத்தான் செய்கின்றன. சினிமா உலகில் அவர்களுக்கு நிரந்தரமான இடம் நிச்சயம் உண்டு.

சில நடிகர்களுக்காக மன்னர்களையும், வாள் யுத்தம், குதிரைப் படை, யானைப் படை முதலியவைகளையும் நாம் படத்தில் பார்த்துத் தானாகவேண்டும். சில அநுபவம் முதிர்ந்த பழம் பெரும் நடிகைகள் தங்களுக்கேற்ற கதையாகத் தேர்ந்தெடுத்துப் படம் தயாரிப்பது போல், நடிகர்களிலும் பலர் தங்கள் நடிப்புத் திறமை அதிகமாகப் பிரகாசிக்கும் கதைகளையே தேர்ந்தெடுக்கிறார்கள். இதன் காரணமாக, நிஜ வாழ்க்கைக்குத் தேவைப்படாத கதாபாத்திரங்கள் சினிமா உலகில் சிரஞ்சீவியாக வாழ்கிறார்கள்.

அட்டகாச அதிர்வேட்டுச் சிரிப்பு, ஆரவார அடுக்கு மொழி வசனங்கள், வீரதீரப் பார்வைகள், ஆணவ நடை ஆகியவைகளைச் சமூகக் கதைகளில் சௌகரியம் போல் புகுத்த முடியாது. திரைக் கதையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காத நம் படாதிபதிகள் கூட, இது விஷயத்தில் கூடிய வரையில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள்.

ராஜபார்ட்டுக்கு ஏற்ற 'இருதா கிராப்' வைத்துக் கொண்டிருக்கும் ஒரு நடிகர், அந்த வேஷம் தவிர, வேறு சாதாரண வேஷங்களில் வந்தால், இருதாவைத் துறக்க வேண்டியிருக்குமே என்று வேறு வேஷம் ஏற்பதில்லை. ஆனால் ராஜபார்ட் அவரைத் தேடி வருகிற வழியாயில்லை. அவர் சிறிதும் தளரவில்லை. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாதல்லவா?


இதைப் பற்றி என் நண்பர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவருக்குக் கோபம் வந்து விட்டது.

"நம் நாட்டு மக்கள் வாழ்க்கையில் சுவாரஸ்யமான சம்பவங்களே இல்லை. காதல் நிகழ வேண்டுமானால், கோவில்களிலோ, கல்லூரிகளிலோ, காரியாலயங்களிலோ, பஸ், ரயில்களிலோதான் நிகழ வேண்டியிருக்கிறது; ராஜகுமாரன் வாழ்வில்தான் காதல் கொஞ்சம் சுலபமாக நுழைய முடிகிறது. அதனால்தான் அநேக நடிகர்கள் ராஜகுமாரனாக வருவதற்குத் தயாராகக் 'இருதா கிராப்'புடன் காத்திருக்கிறார்கள். கல்யாணமான பெண்ணின் வாழ்வில் காதல் குறுக்கிட முடியாது. மேல்நாட்டினர் வாழ்வில் அப்படியில்லை. அவர்கள் வாழ்வு வளமும் வசதியும் கொண்டு விரிந்து பரந்திருக்கிறது. இதை யெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்" என்று ஒரு சொற்பொழிவே செய்து விட்டார்.

நண்பர் கூறியதில் உண்மை இருந்தாலும், சினிமாப் படங்கள் தயாரிப்பதற்காக நம் சமூக வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ள முடியுமா? நம் நாட்டுப் பண்

புக்கு ஏற்ற முறையில்தான் நாம் படம் தயாரிக்க முடியும். அதுதான் நமக்குப் பெருமை. பாரதப் பண்பு பாழாகாத கதைப் பகுதியை நம் நாட்டில் டைரக்டர் சாந்தாராம் எத்தனையோ முறை கையாண்டு வெற்றி பெற்று உலகப் பிரசித்தியும் பெற்று விடவில்லையா? எதிலும் மனம் இருந்தால் மார்க்கமுண்டு.

கல்யாணி பிக்சர்ஸின் தயாரிப்பான "தாமரைக்குளம்" பழைய காலத்து ஜமீன்தார் கதைதான். புதிய கதை அம்சமோ, கருத்தோ எதுவும் இல்லை. பாண்டு வாத்தியமும் பெட்ரோமாக்ஸ் விளக்குகளும் பிரமாதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், கல்யாணப் பெண்—மாப்பிள்ளையைப் பற்றிய குறை எதுவும் தெரியாது. அதுமாதிரிதான் இந்தப் படமும்.



திரைக் கதையைப் பற்றி விசேஷமாகச் சொல்ல எதுவும் இல்லை. ரங்கதுரை ஒரு முரட்டு ஜமீன்தார். அவன் தங்கை கல்யாணி நல்ல பெண். ஜமீன்தார் ஏழை மக்களைக் கொடுமைப்படுத்தினான். செங்குளம் பண்ணையார் மகன் சேகர் ஏழை பங்காளன். அத்துடன் கல்யாணியின் கரம்' பற்றும் உரிமை கொண்ட முறைப்பையனும்கூட. அவன் கல்யாணிக்கும் தனக்கும் நடக்க இருக்கும் திருமணத்தை நிறுத்தி விடுகிறான். அதிலிருந்து ஜமீன்தாரின் ' அட்டகாசம் அதிகமாகிறது. கிராமமக்களின் குடி தண்ணீர்க் குளமான தாமரைக் குளத்துக்குக் காவல் போட்டு விடுகிறான். அப்புறம் என்ன? தீயவன் பல தீச் செயல்கள் செய்து விட்டு அழிகிறான். நல்லவன் வாழ்கிறான்.

தீயவனான ஜமீன் ரங்கதுரையின் பாகத்தை எம். ஆர். ராதா ஏற்று மிகவும் பொருத்தமாக நடிக்கிறார். அவர் வசனம் பேசுவதிலிருந்து, நடிப்பு, நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் தமக்கென்று ஒரு தனி வழி வகுத்துக் கொண்டிருக்கிறார். அது நன்றாகவே இருக்கிறது. பரம்பரை ஜமீன்தார் மாதிரி பார்வை, பேச்சு எல்லாமே அலட்சியமும், அகம்பாவமும், மிடுக்கும் நிறைந்து, பல இடங்களில் பாராட்டும்படி அமைந்திருக்கின்றன. முரடனான ரங்கதுரை, தங்கை கல்யாணியிடம் அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறான். அந்த அன்பை எம். ஆர். ராதாவின் நடிப்பில் நன்கு காண முடிகிறது. தங்கையின் கல்யாணம் தடைப்பட்டுப் போனதும் ரங்கதுரை அடைந்த மனவேதனையை ராதா அற்புதமாக வித்து நடிக்கிறார். ஒரு கணப் பொழுதே யானாலும் எல்லோரையும் கலங்க வைத்து விடுகிறது, அவர் நடிப்பு. ரங்கதுரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது ராதா மிக நன்றாக நடித்திருக்கிறார்.

ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிட்டாக வேண்டும். ஜமீன்தார் வீட்டுக் கல்யாணத்தில் நடனமாட வந்த ஜயாவிடம் ரங்கதுரை பேசிய பேச்சைக் கேட்டதும் எனக்கு மிகவும் வேதனையா யிருந்தது. ஜமீன்தாரின் வாழ்க்கையில் அதெல்லாம் சகஜமா யிருக்கலாம் ஆனால் படம் பார்ப்பவர்கள் அந்தப் பண்பு கெட்ட பேச்சைக் கேட்டுத்தானாக வேண்டுமா?

"மாடிக்கு வா" என்று ரங்கதுரை நடனப் பெண்ணை அழைப்பதும், அவள் தாயாரை "வெளியே போ" என்று விரட்டுவதும் பார்க்க மிகவும் அருவருப்பா யிருக்கிறது. இதெல்லாம் சென்ஸார் போர்டின் கண்ணை உறுத்தாதது அதிசயம்தான்!

ராதாவுக்கு அடுத்த படியாக இந்தப் படத்தில் நடிப்பைப் பற்றிச் சொல்லக் கூடியவர் கல்யாணியாக வரும் சௌகார் ஜானகிதான்.

வி. கோபால கிருஷ்ணன் செங்குளம் பண்ணையார் மகன் சேகராக நடிக்கிறார். ரங்கதுரையின் தங்கையை மணக்க மறுத்ததிலிருந்து, அவர் நடிப்பில் களைகட்டி விடுகிறது. அவருக்கு நல்ல வருங்காலம் இருக்கிறது.

சேகரின் தந்தை செங்குளம் பண்ணையாராக கே. சாரங்கபாணி வருகிறார். தம் சிரிப்பு, ஹாஸ்ய நடிப்பு எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு மிகவும் 'ஸீரியஸாக' நடிக்கிறார். கடைசியில், மகன் வழிக்குத் தந்தை திரும்பி விடுகிறார். இது மிகப் பழைய பல்லவியா யிருப்பதால் அவர் நடிப்பிலும் புதிதாகச் சொல்ல ஒன்றும் இல்லை.

மூலக் கதையை எஸ். ஆர். நடராஜன் தயாரித்திருக்கிறார். வசனம், பாடல் தயாரித்தவர்: முகவை ராஜமாணிக்கம். வசனம் நன்றாயிருக்கிறது. "நல்லவர் மனத்தை நடுங்கச் செய்தேனே" என்ற பாட்டு நன்றாயிருக்கிறது.

வி. ஸ்ரீனிவாசன் படத்தை நன்றாய் 'டைரக்ட்' செய்திருக்கிறார்.

ஜமீன்தாரின் கொடுமைகளையே அதிகமாகச் சித்திரித்திருப்பதால் பழைய படம் பார்ப்பதுபோலிருக்கிறது.

எம். ஆர். ராதாவின் நடிப்புக்காக வேண்டுமானால் "தாமரைக் குள"த்தை ஒரு தடவை பார்க்கலாம்.

வட்டமேஜை

மணிமொழிகள்

கல்கி பிரதி வார இதழில் ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார் அவர்களின் "அருள் வாக்கு"களைக் கண்டு ஆனந்தமடைந்தேன். இதன் மூலம் தாங்கள் பெரிய சேவையை மனித சமூகத்துக்குச் செய்து வருகிறீர்கள். விசேஷமாக என்போன்ற வெகு தூரத்தில் இருக்கும் அன்பர்களுக்கு உயர்ந்த தொண்டு செய்திருக்கிறீர்கள்.

நம் லோக குருவின் மணி மொழிகளை அகில இந்திய ரேடியோவில் சில விசேஷ தினங்களில் ஒலி பரப்பினால் வெகு தூரத்தில் இருக்கும் அன்பர்களுக்குச் சௌகர்யமாக இருக்கும். மேலும் அப்படி ஒலிப்பதிவு செய்யப்பட்ட மணிமொழிகள் சாசுவதமான அறிவு ஏடுகள் அல்லவா?

பம்பாய்
14-4-59 — சு. வெங்கட்டரமணி

மண்டி வியாபாரிகளின் திண்டாட்டம்.

மதுரையில் மூன்று பேட்டைகளில் நெல் கமிஷன் வியாபாரம் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. விவசாயிகளிடமிருந்து கமிஷனுக்கு விற்றுக் கொடுக்கும்படி நெல், மண்டிகளுக்கு வரும். மூட்டைக்கு 80 நயா பைசா லாபத்துக்கு கமிஷன் மூலம் வியாபாரம் நடப்பது வழக்கம். அரசாங்கக் கொள்முதல் அமுலுக்கு வந்ததிலிருந்து கிராமங்களில் நெல்விலை கூடுதலான காரணத்தினால் மண்டிகளுக்கு நெல் வருவது நின்று விட்டது. இப்போது எங்கள் நெல் பேட்டைகள் மூன்றிலும் வேலை செய்யும் குமாஸ்தாக்கள், மூட்டை தூக்குகிறவர்கள், கை வண்டிக்காரர்கள், தூப்புக்கார ஹரிஜனப் பெண்கள், இதர பெண்கள், சாக்குத்தையல்காரர்கள் ஆகிய சுமார் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

அரசாங்கக் கொள்முதல் அரிசியும் நெல்லும் கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொஸைட்டி மூலமாய் இங்கு கொள்முதல் நடக்கிறது. இவ்வாறு ஸ்டாக் செய்கிற காரணத்தாலும், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று ஜில்லாக்களும் சேர்ந்து பற்றாக்குறை ஜில்லாவானதாலும் ரைஸ்மில்களிலும் நெல் பேட்டைகளிலும் அரசாங்கத்துக்குத்தான் விற்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டின் உத்தரவினாலும் அரிசி விலை உயர்ந்து விட்டது. இக் கட்டுப்பாட்டை எடுத்து உபரி ஜில்லாவில் அரசாங்கக் கொள்முதல் செய்து ஸ்டாக் செய்யவும் பற்றாக்குறை ஜில்லாக்களில் அரசாங்கம் கொள்முதல் செய்திருக்கிற அரிசியையும் நெல்லையும் விற்பனை செய்யவும் உத்தரவு செய்தால் அரிசி விலையும் மலியும். ஸ்டாக் செய்திருக்கிற அரிசியும் கெட்டுப்போகாமல் பொது மக்கள் நல்ல விதமாகச் சாப்பிடவும் உதவும்.

நாங்கள் விரும்புவதும் விலை மலிய வேண்டும் என்பதுதான். மதுரையில் அரிசி விலை கூடுதலாக விற்பதை மலிய வைப்பதற்கு அரசாங்கம் கொள்முதல் செய்துள்ள அரிசி எங்கிருந்தாலும் அதை உடனே கொண்டுவந்து விற்பனை செய்ய வேண்டும்.

மதுரை
12-4-59 — கே. நாராயண பிள்ளை



கல்கத்தாப் பிரமுகர் ஸ்ரீ டி. எஸ். சேதுபதி அவர்கள் கரூருக்கு அருகிலுள்ள திருமாநிலையூரிலுள்ள தமது சொந்த இல்லத்தில் சிருங்கேரி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளை வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

சிறு நிலச்சுவான்தார் படும் அவதி

"குடியானவர் பாதுகாப்பு மசோதா" 1955-ல் சட்டமாக்கப்பட்டது. 1956-ல் "நியாயவார மசோதா" சட்டமாக்கப்பட்டது. இவ்விரண்டு சட்டங்களினால் "சிறுநிலச்சுவான்தார்கள்" படும் அவதியைப் பத்திரிகை மூலமாகவும், நேரிலும், இன்னும் பல முறைகளிலும் சர்க்காருக்குத் தெரியப்படுத்தியும் இன்னும் சிறு நிலச்சுவான்தாரர்களின் விஷயத்தில் அக்கறை பிறக்கவில்லை. இப்பொழுது கூடியிருக்கும் சட்டசபையிலாவது 4, 5 ஏக்கருக்குக் குறைவாக உள்ள சிறுநிலச்சுவான்தாரர்களுக்கு மேலே கண்டுள்ள இரண்டு சட்டங்களிலிருந்தும் பூர்ண விலக்கு அளிக்க ஆவன செய்ய வேண்டும்.

திருமாநிலையூர்
21-4-59 — எஸ். நாகராஜன்



உங்கள்
வேலையை
இலகுவா
க்குவதற்
கென்றே
தயாரிக்
கப்பட்டுள்ள
அற்புத
சோப்பவுடர்



வெட்டவெளிச்சமான உண்மை...

ரின்ஸோ வெளுப்பது அதிவெண்மை

ரின்ஸோ-வெண்மை யென்றால் உண்மையான வெண்மை! சக்தி வாய்ந்த ரின்ஸோவின் நுரை, நூலிழைகளில் மறைந்துள்ள அழுக்குகளையும் அறவே அகற்றிவிடுகிறது. அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ வேண்டாம். வெள்ளைத் துணிகள் வெள்ளைவெளேரென்றும், வர்ணத் துணிகள் அதிகப் பிரகாசமாகவும் ஆகிவிடும். புடவைகள் முதல் கைக்குட்டை வரை, குடும்பத்தின் சகல துணிகளுக்கும் உகந்தது ரின்ஸோ!

R. 24-30 TM



வாழைக்காட்டு ராஜா

1. 'அரைக்காசு மதகு'

வீரசோழனாற்றுப் பாலத்தின் இறக்கத்தில் நுகத்தடி எழும்ப வேகமாக ஓடிய அந்த வில் வண்டி அணைக்கரைக் கப்பி ரஸ்தாவில் திரும்பியது. வண்டியினுள்ளே திருமங்கலக்குடி மிராசுதார் காசாம்புவும், அவர் மகன் திருமேனியும் அமர்ந்திருந்தார்கள்.

சாலையின் ஓரங்களிலே குடை விரித்திருந்தன நிழல் தரும் மாந்தருக்கள்: அவற்றை யடுத்து அடர்ந்த வாழைக் கொல்லைகளும் செறுகையில், சாலையே சற்று இருண்டுதான் இருந்தது. ஆனால் இலைகளின் அடர்த்தியையும் துளைத்துக் கொண்டு அங்கங்கே சிதறிப் பாய்ந்த மாலைக் கதிரொளி ஓடும் வண்டிக் கூட்டின்மீது ஒளிர்கையில், அதன் மீது படிந்திருந்த சாலையின் செப்புக் காவி மண் செந்தூரம்போல் மின்னியது: அதே மாதிரி வண்டியில் பூட்டியிருந்த புரவியை யொத்த நீலத்தநல்லூர் மயிலைக் காளைகளின் நீண்டு குவிந்த கொம்புகளிலும் அக்கதிரொளி தவழ்கையில், அவற்றின் வெள்ளிக் கொப்பிகள் தாரகையென ஒளி சிந்திச் சிரித்தன.

மற்றப்படி அமைதி தவழ்ந்தபாதையில் காளைகளின் கழுத்துமணிகள் 'ஜல்......ஜல்' என்று ஒலி செய்தன; அங்கங்கே தோட்டத்து மூலைகளில் மண்டிக் கிடந்த ஓங்கிய மூங்கில் மரங்கள் ஒன்றோடொன்று உரசி விளையாடுகையில் 'டக...டர்ர்' என்று கருதி கூட்டின. வண்டி வரும் சத்தம் கேட்டு மரம் விட்டு மரம் தாவும் புள்ளினங்கள் சிறகடித்து ஆர்க்கும் சப்த ஜாலங்கள் வேறு!

மௌனமாக வண்டியில் அமர்ந்திருந்த திருமேனி அடிக்கொருதடவை முன்னே தொலையில் தெரியும் காவிரியாற்றுப் பாலத்தையும், பின்னால் ஓடி நின்ற வீரசோழனாற்று வாராவதியையும் திரும்பத் திரும்பக் கண்களால் விழுங்கிக் கொண்டிருந்தான்.

காசாம்புவின் திருஷ்டியோ சாலையின் வலது. இடப் பக்கங்களில் பம்மியிருந்த வாழைக் காடுகளில்தான் மாறி, மாறி லயித்தது. இடது பக்கம் இருந்த ஒரு வேலித் தோட்டங்களும் காசாம்புவுக்கு உரியவை; வலது பக்கம் இருந்த ஒரு வேலித்தோட்டம் ஊரின் மற்றொரு மிராசுதாரான 'ராவன்னா' என்ற ராமலிங்கத்தினுடையது.

''எசமான்! ராவன்னா வர்ரூரு...!''என்றான் வண்டிக்காரக் கோவாலு.

''ராவன்னாவா...? நடந்தா வர்ரான்...?''

''இல்லீங்க...வண்டியிலேதான்!''

காசாம்பு எதிரே உறுத்து நோக்கி விட்டு, ''புது வண்டி வாங்கியிருக்கிறானா, என்ன?'' என்று கேட்டார்.

''இல்லீங்க, வண்டி பழசுதான்; வில்லு மாத்திக் கூடு அடிச்சிருக்காரு. வர்ணம் வேறே பூசி, ஒரு பக்கத்திலே ராவன்னான்னு

தஞ்சை மாவட்டச் சிறுகதைப் போட்டி:
இரண்டாவது பரிசு பெற்ற கதை

பேரும், மறு புறத்திலே ஒரு வாளை மரச் சித்திரமும் போட்டிருக்காரு!''

''போடு தெப்பல்! வாழைக்காட்டு ராசா ஆகிவிட்டாப்பலே இருக்கு! ஆனா அவன் ஏன் போட்டுக்க மாட்டான்? கோவாலு, சோத்துக் கைப்பக்கம் பாத்தியல்ல? அவன் கொல்லை



யிலே வாழைங்கன்னாம் மெதப்பாக் குலை போட்டுப் பாரம் தாங்காமே நிறைப் புள்ளத்தாச்சி கணக்கால்ல நிக்கிறது! ஹூம்...!''

அதற்குள் வண்டிகள் ஒன்றையொன்று தாண்டுகையில், கம்பிமீது கையை வைத்துக் கொண்டு கம்பீரமாக அமர்ந்திருந்த காசாம்பு பார்வையை அலட்சியமாகச் சாலையின்மீது பதித்தார். ராவன்னாவின் வண்டிக்காரன் சாட்டைக்குச்சியைச் சக்கரத்தில் கொடுத்துக் 'கட கட'வென்று சப்திக்க, அவ்வண்டி இவர்களைப் படுவேகத்தில் தாண்டித் தூள் பறக்க ஓடி விட்டது.

''என்னமோ ஏரோப்பிளேனிலே பறக்கறாப் போல நெனைப்பு! கெடக்கறான் பிசினாறி! நீ அரைக்காக மதகண்டை நிறுத்து—''
—காசாம்பு வெடித்தார்.

வண்டி நின்றதும், கோவாலு குதித்து இறங்கிக் கம்பியைத் திறந்து விட்டான். வண்டியிலே தேங்காய் நார் மெத்தைக்குக் கீழ் இருந்த செருப்பை எடுத்துக் கீழே போட்ட திருமேனி, தானும் இறங்கிக் காலில் அதை மாட்டிக் கொண்டே மீண்டும் கம்பியைப் போட்டான்.

''அப்ப நான் வாரேன்; நீ கொல்லைக்குள்ளார போய்ச் சருகெல்லாம் கிள்ளி விட்டானுகளான்னு பாரு. அத்தோட கெடங்கெல்லாம் மேடிட்டுக் கெடக்குது; கவனி'' என்ற காசாம்பு பார்வையைச் சாலையின் வலப் பக்கம் திருப்பினார்.

''இதோ ராவன்னாவோட கொல்லைங்களும் இருக்குதே, பாத்தியா? என்ன செழிப்பு, வாளிப்பு! இந்த ஊரிலே நெல்லு பயிர்ச் செலவு பண்ணறதிலே மன்னன் ஒரு சர்மா ஐயருதான்; அதேபோல் வெத்திலைக் கொடிக்காலுக்கு ஒரே ஹமீம்சாதான்; இந்த வாழைக்காட்டுக்கு மட்டும் ராசா நானு. ராவன்னாவாங்கற கேள்வி தலைமுறையாச் 'சக்கி'யிலே நிக்குது! ஆனா இப்போ அவன்

எஸ். விஜயராகவன்

தான் செயிப்பாம்போலத் தோணுது. அவன் ஏன் நம்ம வண்டியைத் தாண்டச்சே சக்கரத்திலே சாட்டையைக் கொடுத்துக்கிட்டு 'ஜமா'விலே போகமாட்டான்னு, கேக்கறேன்!''

காசாம்புவின் அடிவயிற்றிலிருந்து புரண்டு வந்த அருவை வார்த்தைகளாக உருப்பெற்ற கோரத்தைத் திருமேனியினால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

''அப்பா! இப்ப அவுங்க பேச்சு என்னத்துக்கு? நம்ம வேலையைப் பாப்பமா?''

''சரி...சரி...கொட்டிக் கொட்டி அளந்தாலும் குருணி பதக்காயிருமா? நீ ஆள் படைங்ககிட்டே சொல்லு, கிடங்குகளை ஆழமா வெட்டித் தருவெடுக்கணும். நீயும்கூட நின்னு கவனிச்சுக்கிட்டு, விளக்கோட வூட்டுக்கு வந்திரு! ம்ம்...கோவாலு, ஓட்டு!''

மூக்கனையைக் கையிலே எடுத்துக் கொண்டு ஏர்க்காலுக்குத் தாவிய கோவாலு, ஓடிவந்த காளைகள் நீரைப் பெருக்கிக் கொண்டிருந்ததால் சற்றே நிதானித்து அவற்றின் முதுகில் தட்டிக் கொடுத்தான். பிறகு மூக்கனை தளர்ந்ததும் காளைகள் பறந்தன.

2. ஓட்டும் இரு உள்ளங்கள்

சாலையையொட்டிய இறக்கத்திலே, இரு நெட்டிலிங்க மரங்களுக் கிடையில் கதவு போலிருந்த வேலி அடைப்பைத் திறந்து கொண்டு, ஒற்றையடிப் பாதை வழியே உள்ளே சென்றான் திருமேனி. வாழைக் கொல்லைகளுக்கே உரிய தனித்த அபூர்வ மணம் அவன் நாசியை நிறைத்தது.

முன் வரிசையிலிருந்த மொந்தன் கன்றுகள், பிறகு ரஸ்தாளி, பூவன், பூவில்லா வாழை, இனிப்பான தேன்வாழை, பச்சை நாடன், பேயன் கன்றுகள் முதலியவற்றையெல்லாம் பெருமையுடன் பார்த்துக் கொண்டு செல்கையில், அவன் உள்ளம் பாற்குடம்போல் நிறைந்தது. ஆனால் அதனுள்ளே ஒரு சிறு துரும்பு கிடந்து அலைப்பதுபோல், அவன் அப்பாவுக்கும் இந்த ராவன்னாவுக்குமிடையே பொங்கி வரும் பெரும் பகையை நினைக்கையில் அவனது இளம் முகம் இருண்டது.

இவ்விரு பெரியவர்களும் அநுபவசாலிகளே யானாலும், பள்ளிக்கூட நிழலில்கூட ஒதுங்காதவர்கள். அவர்களுடைய இத்தீராப் பகைக்குக் காரணம் யாதென்று வினவினால், அவர்களுக்கே கூடச் சொல்வதற்கு எதுவுமில்லை. ஆனால் தலைமுறையாக வந்த போராட்டம் அது: வற்றாத பொறாமையால் பிறந்த பேயாட்டம்! இதனால் ஊரிலே நல்லதோ, கெட்டதோ எது வந்தாலும் இருவரும் இரு துருவங்கள் தாம்! இவர்கள் மட்டும் ஒன்று சேர்ந்து உழைத்தால், ஊரின் வளத்தையே எவ்வளவு பெருக்கலாம்?

நீண்டதோர் பெருமூச்சு அவன் நெஞ்சிலிருந்து கழன்று அரவுபோல் சுழன்று விழுந்தது. அதற்குள் அவன் கால்கள் வாழைக் கொல்லையையொட்டிய தென்னந்தோப்பை அடைந்தன. அங்கு வேலையில் ஈடுபட்டிருந்த பழநி, கட்டைப் பயல் முதலிய பண்ணையாட்கள், ''வா குழந்தே! கும்மாணம் போயிருந்தீங்களாமே. எப்ப வந்தீங்க? ஐயா வரலியா?'' என்று வினவியவாறே அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்போது நெடிய தென்னை ஒன்றின் மீது ஏறி மட்டைகள் பிடுங்கிக் கொண்டிருந்த மூக்கன் ஒரு இளநீரைப் பிடுங்கிப் போட்டான். கட்டைப் பயல் கணத்தில் அதைச் சீவி, 'கண்' திறந்து, ஒரு ஓலை நறுக்குடன் திருமேனியின் கையில் கொடுத்தான். அப்பப்பா! ஓலை நறுக்கைத் தேங்காய்க் கண்ணில் வைத்து, அலாக்காகத் தலை கீழே சாய்த்து, வாயில் அவ்வமுத நீரைப் பருகும் இன்பத்துக்கு ஈடேது, இணையேது?

உள்ளம் குளிர்ந்ததும், ''கட்டையா. நீங்களெல்லாம் கொல்லையைச் சரிவரக் கவனிக்கிறதில்லேன்னு அப்பாருக்கு ஒரே கோவம்! இந்த வருசம் இருபது வண்டி வாழையாவது ஆடுதுறை ஸ்டேஷனிலே ரயிலேத்தியாகணும். ராவன்னா போன பொங்கலுக்கு வாழை வித்து ஐந்நூறு குழி நெலமே வாங்கிட்டாரு; நீங்க இப்படிச் சோம்பேறியாக் கடனுக்கு அழுதா, நம்ம வாழைங்கெள்ளாம் கண்டு விரல் பருமன் கூடப் பருக்காது! அதை எவன் வாங்குவான்?'' என்று சமத்காரமாகப் பேசி, வேண்டிய வேலைகளையும் இட்டபின் அங்கிருந்து புறப்பட்டான், திருமேனி.

கால்நடையாகவே அவன் காவிரிப் பாலத்தை அடைவதற்கும் அந்தி மங்குவதற்கும் சரியாக இருந்தது. பாலத்தின் வடக்கே நதியின் இரு கரைகளிலும் கண்ணுக்கு இனிமையான வாழைக்கொல்லைகள் பசந்து, பரந்து கிடந்தது போலவே, இங்கே தெற்கில் இருபுறமும் பொன்னான நெற்கதிர்கள்! இங்கும் சாலையின் எதிரெதிரே இவ்விரு குடும்பங்களினுடைய பூமிதான். ராவன்னாவுக்கு இரு வேலிகளும், காசாம்புக்கு இரு வேலிகளும்; போட்டி போட்டுக் கொண்டு வாங்கப்பட்ட நிலங்கள். அவைகளில் 'தாளடி'க் கதிர்கள் தளதளவென்று வளர்ந்து, தலை சாய்ந்து வரப்பை முத்தமிட்டுக் கொண்டிருந்தன!

இரு கரைகளிலும் இப்படிச் செழிப்பை வாரி வழங்கிய தன் சிறப்பை அறிந்த பெருமிதத்தாலோ என்னவோ, கம்பீரமாக, ஆனால் அமைதியுடன் ஓடிக் கொண்டிருந்தாள் பொன்னியெனும் நதி நங்கை. நடுப் பாலத்தில் தனியாக நின்று, கீழே சுழித்தோடும் அந்த நங்கை நல்லாளைக் கவனித்த திருமேனி மெய்சிலிர்த்துப் போனான். அந்தி இறங்கும் வேளையிலே கதிரவனின் இளம் பொன் கதிர்கள் திட்டுத் திட்டாக நதிப் பரப்பின் மீது படுகையில், அங்கங்கே ஒரு சுவர்ணத் தகடு பளிச்சிட்டது. அவ்விடங்களில் துள்ளி விழும் வெள்ளிக் கயல்கள் தாம் எப்படிக் காந்தியுடன் மின்னி மறைந்தன!

ஊரின் எல்லையிலிருந்த 'ஊர் காக்கும்' ஐயனார் கோயில் காட்சி தந்தது. அது சின்னஞ் சிறு கோயிலேயானாலும், வாசலிலே மட்டும் கம்பீரமான ஒரு வெண் புரவியின் பெரிய சிலை! ஊரைக் காக்கும் ஐயனார் இரவில் ரோந்து செல்லவோ, என்னவோ?

பிறகு ஊரினுள்ளே முதலில் எதிர்ப்பட்டது கிராமத்தின் பிரசித்தி பெற்ற காளி கோயில். வரப்போகும் காளி ஆட்டத்துக்காக எங்கணும் அடைத்த பந்தல்; அதில் மாவிலைத் தோரணங்களும், தேர்ச் சீலைகளும், ஈச்சங்குலைகளும் அழகாகத் தொங்கின. பந்தலுக்குள்



புகுந்த திருமேனி அங்குமிங்கும் விழிகளைச் சுழற்றினான்.

முதலில் பிரதானமாக இருந்த காளியம்மன் சந்நிதிக்குப் பக்கலில். வாசலில் அரவான் தலையுடன் கூடிய திரௌபதியம்மன் கோயில்; அதற்கும் அடுத்து மாரியம்மன், அங்காளம்மன் சந்நிதானங்கள்! காளிகோயிலிலே விழுந்து கும்பிட்டுப் பூசாரி அருச்சகனிடம் 'துண்ணூறு' வாங்கிப் பூசிக்கொண்ட திருமேனி, சட்டென்று யாரையோ கண்டுவிட்ட குதூகலத்துடன் வேகமாகத் திரௌபதி கோயிலை நோக்கி ஓடினான்.

அங்கே குவிந்த மலர்க் கரங்களும், கூடிய விழிகளுமாகத் தியானத்தில் இருந்தாள் ஒரு வாலைப் பெண். வயசு பதினெட்டு இருக்கும். சற்றுக் கருத்த மேனியேயானாலும், களையான இன்முகம்; ஒல்லிய வடிவினள்; இடுப்பிலே துயிலிப் புடவையும், மேலே திரிபுவனத்துப் பட்டுக்கரை ரவிக்கையுமாக, விளக்குப் பாவையென மோனத் தவநிலையில் நின்றாள் அவள்!

அருகில் யாரும் இல்லாததைக் கண்ட திருமேனி ஆசையுடன் அவளைப் பின்புறமாக நெருங்கி நின்று கொண்டு, "திரௌபதித் தாயே! நீ ஐந்து கணவன்மார்களைக் கட்டிக்கொண்டு பெரு வாழ்வு வாழ்ந்தாயே, எனக்கு ஆசைக்கு ஒருவனை..." என்று இழுத்தான் கேலியாக.

ஆண் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு, விழி மலர்ந்த அப்பெண்ணை நாணம் கவ்வியது. ஆனால் அவன் யாரென்று தெரிந்ததும் 'களீர்' என்று சிரித்தபடியே—

"ஓஹோ! வாழைக் காட்டு ராசாவா? நல்லாயிருக்குதே விளையாட்டு! நான் எப்படி நடுங்கி விட்டேன் தெரியுமா?" என்று அந்தப் பெண் சிலிர்ப்பினாள்.

"மங்களம்! நீ பயந்தா நானென்ன செய்ய? கண்ணை மூடிக்கிட்டு ஆத்தாகிட்டே நீ வரம் கேட்டுக்கிட்டிருந்தே; பாவம், அது அம்மன் காதிலே விழாம போய்விடப் போவுதேன்னு அதை உனக்காக நான் உரக்க அஞ்சல் செய்தது தப்பா?"

"க்குங்...நான் இந்த வரம்தான் கேட்டேனுங்காட்டியும்?"

"பின்னே? வேறென்ன நீ கேட்டிருக்க முடியும்? எவ்வளவுதான் நாம பின்னு ஒட்டிக்கிட்டிருந்தாலும், எங்க அப்பாரு போற போக்கைப் பார்த்தா, நானும்கூட இந்த ஆத்தாகிட்டத்தான் வந்துவேண்டிக் கொள்ளணும்னு தோணுது!"

இதைக் கேட்ட மங்களத்தின் மலர்ந்த முகத்திலே ஏமாற்றத்தின் இருள் நிழலிட்டது. "அப்படீன்னு?" என்று கேட்டாள் தொண்டை கரகரக்க.

"கவலைப்படாதே மங்களம்! இங்கிருக்கிற தெய்வங்களெல்லாம் வெறும் கல்லாகவா நின்னுடும்......?"

"அது இருக்கட்டும், நீங்க இன்னைக்கு எங்கே போயிருந்தீங்க? காலமேயிருந்து நூறு தடவையாவது தெருப் பக்கம் பார்த்திருப்பேன்; அங்கே, இங்கே இந்த ராசாவைக் கண்டால்தானே? வாழைக்காட்டு ராசா எங்கே கொல்லைக்கே குடி போயி, அங்கே முனி, கினி எதுனாச்சியும் அடிச்சிருச்சோன்னு எனக்கு ஒரே பயம்!"

பேச்சைப் போலவே, அவள் அதற்குப் பிடித்த அபிநயமும் தேனென இனித்தது.

"அடி தகிடுதோன்னாலும்! மங்களம் வர வர நீ, ஐயோ, என்ன இனிப்பாப் பேசறே, தேன்வாழை கணக்கா? நான் கும்மாணம் தான் போயிருந்தேன்; இந்தாப் பாரு, உனக்கு என்ன வாங்கியாந்திருக்கேன்னு?"

சட்டைப் பையிலிருந்து ஒரு ஜோடி தங்கப் பூப் போட்ட எனமல் வளையல்களையும், ஒரு பட்டு ரவிக்கைத் துண்டையும் எடுத்து நீட்டினான் திருமேனி. அதைக் கைகளில் வாங்கிய மங்களத்தின் உள்ளக் கிண்ணம் குதூகலத்தால் நிரம்பி வழிந்தது.

"இது என் கைக்குச் சரியாக இருக்குமா?"

"பின்னே? அளவு பார்த்தல்ல நான் வாங்கியாந்திருக்கேன்?"

"அளவு எடுத்தீங்களா? அதெப்போ? அம்மாடீ? அப்படீன்னு அதுக்குள்ளார என் கையை வேறே நீங்க தொட்டுட்டீங்களா? சொல்லுங்க!" என்று சிலிர்ப்பினாள் மங்களம் போலிக் கோபத்துடன்.

"கையை மட்டுமா? உன் மனசையே தொட்டு ரொம்ப நாட்களாச்சே, மங்—"

'க்குங்...' என்று பலத்ததோர் கனைப்பு! இருவரும் சட்டென்று விலகித் திரும்பினர். பின்னால் கட்டிய கையினால் தட்டுச் சுற்று

இக்கதையில் வரும் காட்சியைத்தான் இவ்வார அட்டைப்படமாகச் சித்திரித்திருக்கிறார் ஓவியர் லதா

வேஷ்டியைப் பின்புறம் சிறிதே தூக்கிப் பிடித்துக் கொண்டு, கண்களிலே அனல் பறக்க எதிரே நின்றார் ராவன்னு.

''அப்பா! அதுக்குள்ளார...'' என்று குரல் தடுமாறினாள் மங்களம்.

''ஆமாம். அதுக்குள்ளாரவே வந்துட்டேன், உன் களவாணி நாடகத்தைப் பார்க்க. தூ...வெக்கமில்லே, என்னை அப்பான்னு கூப்பிட? போ, இங்கிருந்து! வெளியே நிக்கிற வண்டியிலே ஏறிக் குந்து!''

மங்களம் விசித்துக் கொண்டே நடுக்கத்துடன் வெளியேறினாள். திருமேனி உடனே, ''மாமா! கோபப்படாதிங்க: அநியாயம் எதுவும் நடந்திடல்லே. உங்களுக்கும் என் அப்பாருக்கும் ஒறவு எப்படியோ? ஆனால் சிறிசுகளான எங்கள் மனசிலே கல்மஷமில்லே. வெறுமே பேசிக்கிட்டிருந்தோம்!'' என்று கூறிவிட்டு நகரலானான்.

''டேய், திருமேனி! நில்லுடா!'' என்று கூறினார் ராவன்னு. ''இந்தாப் பாரு, இனியும் ஒருவாட்டி அந்தக் குளந்தைப் பெண்ணோடே பேசி, அவ மனசைக் கெடுத்தே, இந்த ராவன்னு ஒன்னே உசிரோட வைக்க மாட்டான், சாக்ரதை!''

''அடேயப்பா! பூச்சியல்ல காட்டறீங்க? ஆனா ஞாவகம் வச்சிக்குங்க...இந்தத் திருமேனி தப்புத் தண்டா எதுவும் செய்யல்லே; இனியும் செய்ய மாட்டான்!''

திருமேனி சாரையைப்போல் 'விர்' என்று வெளியே வேகமாகச் சென்றான்; ராவன்னு அப்படியே அடிபட்ட புலிபோல் உறுமிக் கொண்டு நின்றார்.

3. காளி ஆட்டம்

அன்று காளியாட்டம்! ஊரே திமிலோகப் பட்டுக் கொண்டிருக்கையில், தெருக்களெங்கும் எல்லையற்ற சனக்கூட்டம் அலைமோதியது. உள்ளூர்ச் சனம் போதாதென்று, சுற்று வட்டாரங்களிலிருந்தெல்லாம் சாரி சாரியாகக் கூட்டம் வந்தவண்ணம் இருந்தது.

காலை எட்டு மணிக்கெல்லாம் அதிர்வேட்டுக்கள் வானைத் துளைக்க, சூரியனார்கோயில் சருகுப் பிள்ளையின் இரட்டை நாயனம் 'மல்லாரி' முழங்க, கோயிலை விட்டுப் புறப்பட்டாள் மாகாளி.

உலாவப் புறப்பட்ட காளி, கோயிலை விட்டு நகரும் வரை அங்கிருந்த காசாம்புவும் ராவன்னுவும் வழக்கம்போல் ஒருவரையொருவர் முகம் நோக்கிப் பார்த்துக் கொள்ளவில்லை. ஆனால் தம் தம் பெற்றோர்களுடன் நின்று கொண்டிருந்த திருமேனியும், மங்களமும் ரகசியமாகப் பார்த்துப் புன்முறுவல் பூத்துக் கொண்டதை மட்டும் இருவருமே உணரவில்லை.

• • •

வடக்கு வீதியிலே ராவன்னு, காசாம்பு இவர்களுடைய வீடுகளைப் பிரிப்பது ஒரு சிறிய எலுமிச்சங் கொல்லைதான். அன்றிரவு காளியின் வருகையை முன்னிட்டு இருவரது இல்லங்களின் முகப்பிலும் பெரிய பந்தல்கள் போட்டிருந்தார்கள்; அவற்றில் காளி வந்து அமருவதற்காக ஊஞ்சல்களும் தொங்கின.

பொழுது சாய்ந்தது முதல் தெருவில் கூட்டம் நெரிந்தது. பத்தடிக்கு ஒரு 'காந்த' விளக்கு இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. காளி தெருக்கோடியில் வரும்போதே ராவன்னுவின் வீட்டு வாசலில் பூக்கரகங்கள் ஆடின. பிறகு தஞ்சாவூர்ப் பொய்க்கால் குதிரை விளையாட்டு; இறுதியில் கைகளிலே எரியும் தீப்பந்தங்களுடன் பேச்சியாத்தாவின் கோரத் தாண்டவம். பிறகு காளியே வந்து கால்களில் சதங்கை அதிர, மேளக் கொட்டுக்கு ஏற்ப, ஆனந்த நடனம் ஆடி விட்டுப் பந்தலிலிருந்த ஊஞ்சலில் அமர்ந்தாள். உடனே காளியின் உருவ முகட்டைச் சற்றே அகற்றித் திரை மறைவில் பொங்கல். பானகங்களுடன் 'பூசை' நடந்தது.

இதே சமயம் காசாம்பு வீட்டு வாசலில் பூக்கரகங்களும், மற்ற ஆட்டங்களும் ஜதி போட்டன. பிறகு ராவன்னுவின் வீட்டை விட்டுப் புறப்பட்ட காளிதேவி காசாம்புவின் பந்தலுக்குள்ளும் ஆடியவாறே அடியெடுத்து வைத்தாள்!

கோலாகலமான ஆட்டங்கள் ஓய்ந்து அன்றிரவு அம்மன் கோயிலுக்குத் திரும்புவதற்குள் கிழக்கே வெள்ளி முளைத்து விட்டது. பிறகுதான் காசாம்பு உறக்கம் கண்களை அழுத்தப் படுக்கைக்குச் சென்றார். ஆனால் அவர் ஒரு கோழித் தூக்கமாவது போட்டிருப்பாரா என்பது சந்தேகம்தான். அதற்குள்—

'அப்பா...! அப்பா!' என்று அலறியபடி ஓடி வந்தான் திருமேனி.

'' என்னடாது...?'' என்று கேட்டுத் துள்ளி எழுந்தார் காசாம்பு.

உடனேயே திருமேனியுடன் கூட வந்த கட்டைப்பயல் இடைமறித்தான். ''எசமான்! என்ன அநியாயமுங்க? காளியாட்ட மும்முரத்திலே ஊரே இங்கே யிருந்த சமயம் பார்த்து, யாரோ படுபாவி ராவுக்கு ராவே நம்ம வாழைக்கொல்லைங்களை யெல்லாம் அத்துவானமா அழிச்சுட்டான், எசமான்! இதைக் காளியாத்தா பொறுப்பாளா ?''

'' என்னடா உளர்றே? சரி...சரி...ஓடு; வண்டியைக் கட்டு!'' என்றார் காசாம்பு. மறுகணமே காசாம்புவையும் திருமேனியையும் ஏற்றிக் கொண்ட வண்டி அரைக் காசு மதகை நோக்கிக் காற்றாய்ப் பறந்தது!

4. வழக்கு

வண்டி படுகையை அடைவதற்குள் பொழுது நன்கு புலர்ந்து விட்டிருந்ததால், முன்பே அங்கு ஒரு தேர்க் கூட்டம் கூடியிருந்தது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன் சென்ற காசாம்புவின் இதயமே ஒரு கணம் 'பட்'டென்று நின்று விடும் போலிருந்தது. அங்கேதான் என்ன கோரக் காட்சி!

அவருடைய ஒரு வேலிக் கொல்லைகளிலும் ஒரு வாழை மரம் பாக்கியில்லாமல் குலை போடும் தருணத்திலிருந்த அத்தனை மரங்களும் அடியோடு வெட்டிச் சாய்க்கப் பட்டிருந்தன.

'' என்ன அக்கிரமம்! இவ்வளவு தாய் மரங்களை வெட்டிச் சாய்க்க எந்தப் பாவிக்கு மனசு வந்தது? அதுவும் ஒரே ராவையில் வெட்டி விழ்த்துவதென்பது ஒரு மனிதன் செய்கிற காரியமா? இது மனித உருக் கொண்ட ஒரு பேய் செய்த வேலைதான்!'' என்று ஊரே அங்கலாய்த்தது; சுகறிக் கண்ணீர் விட்டது.


மௌனமாக வீடு திரும்பிய காசாம்புவுக்கு இது ராவன்னாவின் காரியந்தான் என்று ஊகிக்க அதிக நேரம் பிடிக்கவில்லை. கொல்லைகளெல்லாம் அழிந்ததைக் கண்ட துயரத்தில் திருமேனியும் அன்று காளி கோயிலில் நடந்த சம்பவத்தைக் கூறி விடுகையில், அவர் சந்தேகம் உறுதியாயிற்று.

பிறகு என்ன? வெகுண்டு எழுந்தார் காசாம்பு. எல்லையற்ற குரோதத்துடன் ஊரிலே அங்குமிங்கும் அலைந்தார். காசை வாரி இறைத்து, வேண்டிய பொய்ச் சாட்சிகளைத் தயார் செய்து கொண்டு, திருவிடைமருதூர் கோர்ட்டிலே ராவன்னாவின் மீது 'கிரிமினல்' வழக்கும் தொடுத்து விட்டார் காசாம்பு!

இரண்டு மூன்று 'ஈரங்கி'கள் நடந்து, முக்கியமான சாட்சியங்கள் பதிவாயின. அடுத்த 'ஈரங்கி' பத்து நாட்களுக்கு ஒத்திப் போடப் பட்டது. அன்று திருமேனியையே விசாரிக்க வேண்டுமென்ற வக்கீல் ஐயாவின் யோசனைக்கு இணங்கி விட்டு வந்தார் காசாம்பு.

ஆனால் வீட்டுக்கு வந்து விஷயத்தைச் சொன்னதும், '' நான் சாட்சி சொல்லணுமா? எதுக்கு அப்பா ?'' என்றான் மகன் திகிலுடன்.

'' எதுக்கா? இந்த வழக்கோடு எங்கள் இருவரது பெருமைகளுள்ளே ஒண்ணு அழிஞ்சாகணும்; இந்தச் 'சக்தி'யோட ஊரின்



வாழைக்காட்டு ராசா யாருன்னும் ஊர்சிதமாகணும்! அதுக்காகத்தான்! அன்னைக்கு ஒன்னைக் காளி கோயில்லே ஒரு கை பாத்துக்கிறதா அந்தப் பய சொன்னானல்ல? அந்த உண்மையை மட்டும் நீ சொன்னாப் போதும்!'' என்று மருள் வந்தவர் போல் ஆர்ப்பரித்த காசாம்பு வேகமாக எழுந்து போனார்.

'' அப்பா...! அப்பா...!'' என்ற அவன் அலறல் அவர் காதுகளில் விழவில்லை.

5. வாழைக்காட்டு ராஜா

அதற்குப் பிறகு தந்தையும் மகனும் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை. ஆனால் நாட்கள் மட்டும் தம் போக்கில் நகர்ந்து கொண்டிருந்தன. விடிந்தால் 'ஈரங்கி!'

அதற்காக இன்றே கும்பகோணம் சென்று, வக்கீலைக் கலந்துகொள்வதற்காகக் காசாம்பு புறப்பட்டுக் கொண்டிருக்கையில், ''எசமான்! உங்களை ஹஜிப்சா அவசரமாக் கையோட இட்டாரச் சொன்னாரு; கர்ணம் ஐயா ஊட்டிலே இருக்காங்க!'' என்று ஓடி வந்தான் ஊர்த் தலையாரி நாதமுனி.

'' சரி...போ, வாரேன்!'' என்று விடை யிறுத்த அவர், பின்னாலேயே புறப்பட்டுச் சென்றார். அங்கே கர்ணம் கிட்டாவையர் வீட்டுத் திண்ணையிலே விரித்திருந்த பிரப்பம் பாயின் மீது, கிட்டா, ஹஜிப்சா இவர்களுடன் மற்றும் இருவரும் அமர்ந்திருந்தார்கள்.

நடுவில் ஒரு பித்தளை வெற்றிலைப் பெட்டி திறந்து கிடந்தது; பக்கத்திலே பளபள வென்ற ஒரு தாம்பரச் செம்பிலே தண்ணீர்!

அருகில் வந்த காசாம்பு அப்படியே அடித்த சிலையானார். இதென்ன கூத்து? அங்கே திருமேனியும், ராவன்னாவும்கூட அல்லவா அமர்ந்திருக்கிறார்கள்! இப்படிப் பகையாளிகளைச் சேர்த்து வைத்து என்ன பேச்சு இது?

முகம் சுளிக்கத் தயங்கி நின்ற காசாம்புவைக் கண்ட ஹமீம்சா தம் வெல்வெட் குல்லாவைக் கழற்றி மடியின் மீது வைத்துக் கொண்டார்; பிறகு தம் இரு விரல்களை விரித்து உதடுகள் மீது வைத்து, அவற்றின் இடுக்கு வழியே வாயிலிருந்த புகையிலைச் சாற்றை ஆளோடியில் துப்பி விட்டு, "சும்மா வாங்க, காசாம்பு! இப்படி உட்காருங்க!" என்று கூறினார்.

ஊரிலே மதிப்புள்ள ஹமீம்சாவின் பேச்சைத் தட்ட முடியாமல், அவர் திண்ணையின் ஒரு ஓரத்தில் அமர்ந்தார். ஒரு கணம் எங்கும் ஒரு பேரமைதி. பிறகு அம்மோனத் திரையைக் கிழித்துக் கொண்டு, "காசாம்பு! அல்லாவின் பேரிலே சொல்லறேன்; கொஞ்சம் நெதானமா என்னன்னு கேளுங்க. இங்கே ராவன்னாவைக் கண்டதுமே உங்களுக்கு விசயம் புரிஞ்சிருக்கும்" என்றார் ஹமீம்சா.

"எங்க வழக்கைப் பத்தின பேச்சின்னா, அதிலே நீங்க எல்லாம் பட்டுக்க வாணாம்; திருவிடமருதூர்க் கோர்ட்டிலே எங்க ரெண்டு பேருக்கும் ஞாயம் கிடைக்கப் போவுது!" என்று வெகுண்டார் காசாம்பு.

"இது ஒங்க ரெண்டு பேரை மட்டுமே பத்தின விஷயமின்னா நான் தலையிட மாட்டேன், காசாம்பு! என்னன்னு கேளுங்க: தம் பொண்ணு மங்களத்தோட திருமேனி விளையாடினதைக் கண்டிட்ட ராவன்னா, கோவத்திலே ஆத்திரமா என்னமோ செஞ்சிட்டாரு. ஆனா அதை அவரே இப்ப ஒப்புக்கிட்டாரு. நாயம்டு ஒண்ணு இருக்கு பாருங்க, அதனாலேதான் நீங்களும் எப்படியெல்லாம் தயார் செஞ்சிட்டீங்க. இதுலே நீங்க செயிக்கப் பிடுவீங்க. ராவன்னாவோட வக்கீலே சொல்லிப் பிட்டாராம்!"

காசாம்பு பெருமிதத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தபடி, "அதுக்காக நான் முன்னே வச்ச காலைப் பின்னுக்கு இழுக்கச் சொல்றீகளா? அது சொப்பனத்திலேகூட நடக்காது! அன்னைக்கு என் ஒரு வேலித் தோட்டமும் அழிஞ்சு கெடந்ததைக் கண்ணாலே கண்ட என் வயிறு எப்படிப் பத்தி எரிஞ்சிது, தெரியுங்களா?" என்று சீறினார்.

"நியாயம்! பின்னே இருக்காதுங்களா? ஆனா இத்தனைக்கும் காரணம் ராவன்னாதான்னு நீங்க நினைக்கிறீங்க. ஆனா அவரோட பச்சைப் புள்ளே, மங்களம் இருக்குதே, அது என்னன்னு நினைக்கிது தெரியுங்களா? நெனச்சு என்ன செய்தது தெரியுங்களா?"

"பல்லு முளைக்காத புள்ளைங்களெல்லாம் என்ன நெனச்சா எனக்கு என்ன?" என்று உறுமினார் காசாம்பு.

அவ்வளவுதான்; இதுவரையில் மௌனமாக இருந்த ராவன்னா, முதல் தடவையாக, "காசாம்பு!" என்று தம் எதிரியை உரக்க, ஆனால் தீனமான விளித்தார். தொடர்ந்து, "அப்படிப் பேசாதீங்க காசாம்பு! கேசிலே நீங்க செயிச்சா அதனாலே எனக்கு வர்ற அவமானத்துக்கெல்லாம் தானேதான் காரணம்னு நெனச்சு அழுத என் மங்களம், கடுதாசி எழுதி வைச்சிட்டுக் காவேரியிலே போய் விழுந்திட்டா, காசாம்பு!" என்று பிரலாபித்தார்.

"என்னது! நிசமாகவா?" காசாம்புவின் குரல் துடித்தது. ஆனால் பதில் கூற முடியாமல் ராவன்னா குலுங்கக் குலுங்கக் கண்ணீர் விட்டு அழுதார்.

உடனே ஹமீம்சா குறுக்கிட்டு, "நல்லவேளையாக அந்தக் குழந்தையை அல்லா காப்பாத்திருச்சு. தண்ணியிலே விழுந்ததை அங்கே யதேச்சையா வந்த உங்கள் பண்ணையாள் கட்டைப் பயல் பார்த்திட்டு, தானும் தறுக்குனு குதிச்சுக் கரையிலே இழுத்துப் போட்டான்! எல்லாம் ஒரு மணிக்கு முன்னாலேதான் நடந்தது; மங்களம் இப்போ மெள்ளக் கண்ணைத் திறந்ததும்தான் சூட்டோட சூடா இதுக்கு ஒரு முடிவு பண்ணிடணும்னு வந்திருக்கேன்!" என்றார் உணர்ச்சியுடன்.

காசாம்பு ஒரு விநாடி வாயடைத்துப் போனார். பிறகு, "இந்த மட்டுக்கும் விசயம் போகுமின்னு யாரு கண்டா? நம்ம போட்டியும் பூசலும் ஒரு இளம் உசிரையல்லவா பலி வாங்க இருந்திருக்கு?" என்றார் தம் 'எதிரி'யிடம் நேரிடையாக.

"உங்க ஆறுதலைக் கேட்க இந்த நிலைமையிலும் எனக்குச் சந்தோஷமாகவே இருக்குது. ஆனா வம்புன்னும், வழக்குன்னும் இனிமே சண்டை போட எனக்குத் தெம்பில்லே! என் கண் திறந்திருச்சு. உங்கள் ஒரு வேலித் தோட்டமும் அழிஞ்சதல்லே? அதுக்குப் பார்த்தியா என் தோட்டங்களை நீங்க எவ்வளவு நான் வேணுமானாலும் ஆண்டுக்குங்க. இந்த ஊருக்கு வாழைக்காட்டு ராசா வேணுமின்னா அது நீங்களாகவே இருக்கட்டும். நல்ல மனசு பண்ணி, வழக்கை மட்டும் வாபஸ் வாங்கிக்கிட்டு என்னை நிம்மதியா விட்டிடுங்க!" என்றார் ராவன்னா கெஞ்சலாக.

"இனிமே வழக்கைப் பத்தி மறந்திரு, ராவன்னா! உன் கண்ணைத் திறந்த வெளிச்சம் என்னை மட்டும் இன்னமும் குருடாவக்கல்லே" என்று உண்மையாக உரைத்தார் காசாம்பு.


"இப்ப அல்ல நல்லாயிருக்கு!" என்று தம் தங்கப் பற்கள் தெரிய நகைத்தார் ஹமீம்சா. தொடர்ந்து, "காசாம்பு, ராவன்னா! இந்த மாதிரி ஒரு வழக்கிலே இரண்டுபேருமே ஜெயிச்சதை நான் இதுவரை கண்டதில்லே. ஆனா நீங்கள் ரெண்டுபேரும் உதறித் தள்ளின வாழைக்காட்டு ராசாப் பதவிக்கு வாரிசில்லேன்னு நினைக்காதீங்க! இதோ திருமேனி இருக்கிறான்! அவன் மங்களத்தோட விளையாடினததான் ஊரறிஞ்ச ரகசியமாயிருச்சு. அவுங்களையும் ஒண்ணாச் சேர்த்துப்பிட்டா..." என்று குறும்பாக இழுத்தார்.

"காளியாத்தா விருப்பம் அதுதான்னா, நானா தடுக்கப் போறேன்?" என்று காசாம்பு வெற்றிலைப் பெட்டியை அருகே இழுத்துக் கொண்டார்.

அனைவரது முகங்களும் மலருகையில், ராவன்னா ஆனந்தம் மேலிடக் குழைந்து போனார். மகிழ்ச்சியே உருவாக ஒரு கணம் ஸ்தம்பித்துவிட்ட திருமேனி மெல்ல எழுந்து வெளியே துள்ளி ஓடினான். இந்த மங்களச் செதியைச் சொல்ல மங்களத்திடம் தான் பறந்தானோ என்னவோ, அந்த வாழைக் காட்டு ராசா?

NOVAK

பெல்ஜியம் தேசத்து புகழ்பெற்ற ரேடியோ. இதில் இருக்கும் இரண்டு ஒலிபெருக்கிகள் நாதத்தை உண்மையான ஜீவனுடன் நேரிடையாகக் கேட்பதுபோல் கொண்டு வருகிறது. நோவாக் விற்பனையாளரைக் காட்டச் சொல்லித் திருப்தி அடையுங்கள்



மாடல் 684-T. Hi-Fi   ரூ. 550/-

சக்தி வாய்ந்த 6 வால்வுகள், 4 பாண்டுகள்—
13.4 - 572m

பியானோ-கீ கண்ட்ரோல்கள்

இரண்டு ஸோனோராமிக் ஒலிபெருக்கிகள்

உச்சஸ்தாயிக்கும், கீழ் ஸ்தாயிக்கும் இரண்டு ட்ரிபிள்-பாஸ் கண்ட்ரோல்கள்

மத்திய அலைகளுக்கும் தனி ஏரியல்

அழகான வினீர் மரத்தாலான பெரிய காபினெட்

Hi-Fi NOVAK

தென்னிந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்

ஓபுல் ரெட்டி (மதராஸ்) பிரைவேட் லிட்.

31, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

சென்னை ராஜ்ய ஜில்லா விற்பனையாளர்கள்

டி. எஸ். என். சுந்தரராஜ பாகவதர் அண்டு சன்ஸ், பாண்டிச்சேரி ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (சவுத் இந்தியா) லிமிடெட், கோயமுத்தூர் ஏ. சுப்பன் அண்டு கம்பெனி, வேலூர் - ஜார்ஜ் ஓக்ஸ் பிரைவேட் லிட். உதகமண்டலம் - நேஷனல் ரேடியோ ஸானிக்ஸ், கும்பகோணம் பிபின்ஸ் ரேடியோ கம்பெனி, காஞ்சீபுரம் - ஸ்ரீ நடராஜா ரேடியோ ஹௌஸ், சிதம்பரம் - ஜெர்மன் ரேடியோ ஹவுஸ், திருச்சி - பாலு ரேடியோ சர்வீஸ், மதுரை - ஆர். சுந்தரேசன் அண்டு கோ., சேலம், கிருஷ்ணகிரி

விற்பனையாளர்

ஜே.எல்.பதி அண்டு பிரதர்ஸ், 62, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17

TELERAD PVT. LTD., Bombay-10.


கண்கள் உறங்காவோ?

அத்தியாயம் 4

இரண்டு பொற்கொடிகள்

மாலாவின் வெட்கத்தைக் கண்டு வீணா, அப்பாவை நோக்கி ஒரு முறுவல் பூத்து விட்டு அவளிடம் சென்றாள். அன்புடன் அவள் இடுப்பைச் சுற்றி வளைத்துக் கொண்டு, "சுகமா மாலா? அம்மா சுகமா? எங்கே அவங்களைக் காணோம்?" என்று அன்புடன் கேட்டாள்.

இரண்டு பொற்கொடிகள் ஒன்றை ஒன்று தழுவி நிற்பது போன்றிருந்தது அந்தக் காட்சி. உண்மையிலேயே இரண்டும் இரண்டு பொற்கொடிகள்தாம். கொடி என்ற சொல்லுக்கு உதாரணமான தோற்றம் வீணாவுக்கு. ஒடிசலான, ஆனால் ஆரோக்கியமான உடற்கட்டு. சற்றே நீண்ட முகம். நீளக் கண்கள். அதன் கருவிழிகளிலே ஒரு தனிக் கவர்ச்சி.




குவிந்த உதடுகளில் சதா புன்சிரிப்பின் மலர்ச்சி. மகாராஜா ஒருவரால் வளர்க்கப்பட்டவளாக இருந்தபோதிலும் அப்படி ஒன்றும் ஆடம்பரமான ஆடை அலங்காரங்கள் அவளிடம் காணப்படவில்லை. கல்லூரிப் படிப்பு, நகரவாசம் ஆகியவற்றின் மணம் அவள் உடைகளில் வீசிய போதிலும், அவை மிதமிஞ்சிப் போய் விடாமல் கிராமாந்தரச் சூழ்நிலைக்குப் பொருந்தும் வண்ணமே இருந்தன. ஒன்றே ஒன்றுதான் அந்தச் சூழ்நிலைக்கு ஒவ்வாததாக இருந்தது. அவள் உடலில் ஒரு நகை கூட இல்லை, காதில் மின்னிய முத்துத் தோட்டையும், கையில் கட்டிக் கொண்டிருந்த 'ரிஸ்ட் வாச்'சையும் தவிர. அவள் அணிந்திருந்த நீலநிற பனாரஸ் பட்டு 'ஸாரி'யும், மஞ்சள் நிற 'கிரேப் ஸில்க்' சோளியும் அவளுடைய எலுமிச்சம் பழ மேனிக்கு எடுப்பாக அமைந்திருந்தன. நெற்றியும் மூக்கும் வெறுமையாகக் காட்சி அளித்த போதிலும் முகத்தின் பொலிவு அதை ஈடு செய்து அவளுடைய தோற்றத்துக்கு ஒரு நிறைவு அளித்தது.

மாலா உருவத்தில் சிறிது மாறுபட்டவள். அப்பொழுதுதான் மொட்டவிழ்ந்த ரோஜா மலரின் அழகும் செழுமையும் அவள் தோற்றத்தில் காணப்பட்டன. ரோஜா நிற மேனி. நடுத்தர உயரம். அதிலும் பாவாடையும் தாவணியும் அணிந்திருந்தது அவளுடைய வயதைப் பதினெட்டுக்கு இரண்டு—மூன்று குறைந்தே காட்?பது. வட்ட முகம், அந்த முகத்தில் ஒரு குறுகுறுப்பு. குறும்பும் குழந்தைத்தனமும் மாறாத சிறுமித் தோற்றம் இன்னும் அம் முகத்தில் பிரதிபலித்தது. அகன்ற பெரு விழிகளில் ஆளையே விழுங்கி விடுவது போன்ற கவர்ச்சி. கிராமாந்தரப் பாணியில் கைநிறைய வளையல்கள்; கழுத்து நிறையச் சங்கிலிகள். காதில் வைரங்கள் ஜொலித்தன.

காலையில் மாமாவுடன் ரயிலடிக்குச் சென்றபோது உடுத்திக்கொண்ட ஆடைகள் அப்படியே இருந்ததால், பாவாடையும் தாவணியும் பட்டு மயமாகவே இருந்தன. மொத்தத்தில் இருவரும் இரண்டு அழகுச் சிருஷ்டிகளின் மாதிரிகள்.

அறிவு வந்தபிறகு மாலா இப்பொழுது தான் வீணாவைச் சந்திக்கிறாள். ஆகையால் என்னதான் உறவு முறையும் உள்ளூற வாஞ்சையும் இருந்தாலும் ஆளைக் கண்டதும் அவளை அறியாமலே ஒரு சங்கோஜம் ஏற்பட்டு விட்

மாயாவி



டது. அவள் பேச முயன்றாள். ஆனால் வெட்கத்தில் வார்த்தைகள் வெளிவர மறுத்தன. "அம்மா......! அம்மா......!" என்று தடுமாறினாள்.

"தைலம்மாள் உள்ளே இருக்கா அம்மா! போங்க உள்ளே" என்று அவர் கலை உள்ளே செல்ல விடுத்து, சச்சிதானந்தம் பிள்ளை சுந்தரத்துடன் வீட்டுக் கூடத்துக்கு வந்தார். ஊஞ்சலைக் காட்டி, "உட்காரு, சுந்தரம்! வீட்டுக்குக் கூடப் போகாமல் இங்கே வந்திருக்கிறே. உன்னை நிறுத்தி வைச்சா தம்பி கோவிச்சுக்கிடுவார். இருந்தாலும் வந்தவன் ஒரு வாய் காப்பியாவது குடிச்சிட்டுப் போ" என்றார் அவர். பிறகு வீணாவுடன் அடுக்களையில் நுழைந்துகொண்டிருந்த மாலாவை நோக்கி, "அத்தானுக்குச் சட்டுனு ஒரு காப்பி கொண்டு வருகிறாயா, மாலா!" என்றார் சச்சிதானந்தம்.

சுந்தரம் ஊஞ்சலில் உட்கார்ந்தான். அவன் அருகில் அமர்ந்தார் சச்சிதானந்தம். "உள்ளூரிலேயே உனக்கு இன்ஜினீயர் வேலை ஆயுடுத்தாமே. அப்பா சொன்னார். ரொம்ப சந்தோஷம்" என்றார் மிகுந்த மகிழ்ச்சியுடன்.

"எல்லாம் உங்களைப் போன்ற பெரியவங்க ஆசீர்வாதம்'' என்று மிருந்த அடக்கத்துடன் கூறினான் சுந்தரம்.


''நீ அதிர்ஷ்டக்காரன் சுந்தரம். எனக்கு அன்றைக்கே தெரியும். ஆமாம், வீணாவைப் பட்டணத்திலே எங்கே பார்த்தாய்? எப்படித் தெரிந்து கொண்டாய்?''

சுந்தரம் அதை விவரமாகக் கூறினான்.

*　　　*　　　*

சுந்தரம் மாம்பலத்தில் புஷ்பவனம் பிள்ளையின் தூரத்து உறவான வேலாயுதம் பிள்ளை என்பவரின் பங்களாவில் ஜாகை வைத்துக் கொண்டிருந்தான். வேலாயுதம் பிள்ளை போர்ட் டிரஸ்டில் பெரிய பதவி வகித்து வந்தார். அவருடைய கடைசி மகன் ராகவனும் சுந்தரமும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். இப்பொழுது ராகவன் பம்பாய்க்குச் சென்று அங்குள்ள அணுசக்திக் கமிஷனில் விஞ்ஞானியாகப் பணியாற்றி வந்தான்.

நண்பன் பம்பாய்க்குப் போனதும் சுந்தரம் வேறு இடம் பார்த்துக் கொண்டு போய் விடத் தீர்மானித்தான். ஆனால் அச்சமயத்தில் அவனுக்கு இந்த வாக்ஸால் கார் லாட்டரியில் விழுந்தது. கார் கிடைத்ததும் சுந்தரத்துக்கு அதை நிறுத்த ஒரு 'ஷெட்' தேவை ஆயிற்று. வேலாயுதம் பிள்ளையிடம் கார் கிடையாது; ஆயினும் பங்களாவில் அவர் ஒரு 'ஷெட்' கட்டிப் போட்டிருந்தார். ஆகையால் முக்கியமாக இந்த ஷெட்டுக்காகவே அவன் வேலாயுதம் பிள்ளையின் பங்களாவிலே தொடர்ந்து தங்கியாக வேண்டியதாயிற்று.



கார் கிடைத்த பிறகு சுந்தரம் அதை ஓட்டக் கற்றுக் கொண்டான். கால் தரையிலே படாதபடி எப்பொழுதும், எங்கும் அதிலே சுற்றித் திரிந்தான். மாதம் தவறாமல் முந்நூறு மைல்களுக்கு அப்பாலிருந்த கேசவபுரத்துக்கு ஒரு 'டிரிப்'பாவது போகாமல் இருக்கவே மாட்டான். புஷ்பவனம் பிள்ளையின் வாக்குப்படி, அந்தக் கார், 'குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை'யாக அவதிப்பட்டுக் கொண்டிருந்தது அவன் கையில்.

ஆனால் சுந்தரத்துக்குத் தாராள மனசு. சிலரைப் போல் காரில் ஏறியதும் கண் தெரியாமல் போய்விடும் பிறவியல்ல அவன். சுந்தரம் மட்டும் காரில் போய் யாரும் கண்டிருக்கவே முடியாது. எங்கே போனாலும் சரி, வழியிலுள்ள எந்தப் பஸ் ஸ்டாண்டில் யார் காத்திருந்தாலும் சரி, காரை நிறுத்தி, அவர்கள் போக வேண்டிய இடம் தான் செல்லும் வழியில் இருந்தால் கட்டாயம் ஏற்றிக் கொண்டுதான் போவான். வயோதிகர்களாகவோ, ஸ்திரீகளாகவோ, தெரிந்தவர்களாகவோ இருந்தால், அவர்கள் செல்ல வேண்டிய இடம் தன் வழிக்கு அப்பால் இருந்தால் கூடச் சிலசமயம் அங்கே கொண்டு இறக்கி விட்டுப் போவதும் உண்டு. வேலாயுதம் பிள்ளையின் குடும்பத்தாருக்குச் சுந்தரத்தின் கார் சொந்தக்காராகவே பயன் பட்டது. அதிலும் தன் நண்பன் ராகவன் வந்துவிட்டால் அவனை நடந்து போகவே விடமாட்டான் சுந்தரம்.

நேற்று, ஒரு வார விடுமுறையில் வந்திருந்த ராகவனைப் பம்பாய் எக்ஸ்பிரஸில் ஏற்றி விட்டு விட்டுத் தனது காரை நிறுத்தியிருந்த இடத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தான் அவன். அப்பொழுது கல்கத்தா மெயில் வந்து சிறிது நேரமாகி யிருந்தது. வெளியே ஒரே கும்பல். டாக்சிக்கு ஒரே அடிபிடி. மாம்பலம் பக்கம் போகிற



வர்கள் யாரேனும் இருந்தால் ஏற்றிக் கொண்டு போகலாமென்று இருபுறமும் பார்த்துக் கொண்டு வந்தான் சுந்தரம்.

ஓரிடத்தில் ஒரு டாக்சிக்காரனுக்கும் கூலிக்காரனுக்கும் பெரிய சண்டை நடந்து கொண்டிருந்தது. அருகில் ஓர் இளம் பெண் நின்று கொண்டிருந்தாள். ''ன்னு ஐயா, எத்தி வைச்ச சாமானை இறக்கச் சொல்லுறே? எங்கேயானு ஒனக்கு என்னு ஐயா. ஓட்டின தூரத்துக்குத் துட்டுத் தாராங்களா இல்லையா?'' என்று கத்தினான் கூலிக்காரன்.

''நீ என்னடா, ஆர்டர் பண்ணுறது? இத்துனூண்டு தூரத்துக்கு டாக்சி அடிச்சிட்டு என்னைக் காத்தைக் குடிச்சுக்கிட்டிருக்கச் சொல்றியா; இறக்குன்னு இறக்குடா சாமானை'' என்று அவனுக்கு மேலே கத்தினான் டிரைவர்.

''அவர் விடமாட்டேனென்றால் சாமான்களை இறக்கி விடு போர்ட்டர். எதற்கு வீண் தகராறு?'' என்றாள் அந்தப் பெண்.

''இவனுக்கு என்னம்மா இத்தனை ராங்கி? இருங்க, அதோ ஸார்ஜெண்ட் தொரை நிற்கிறாரு; இட்டுக்கிட்டு வரேன். விடறானா இல்லையா, பார்க்கலாம்'' என்று கிளம்பினான் கூலிக்காரன்.

சுந்தரம் அந்தக் கூலிக்காரனைக் கையமர்த்தி நிறுத்தி விட்டு, அப்பெண்ணிடம், ''நீங்கள் எங்கே போகணும் அம்மா?'' என்று கேட்டான்.

''ஹோட்டல் தாஸப்பிரகாஷுக்கு.''

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால், அதோ என் கார் இருக்கிறது; வாருங்கள். கொண்டு போய் இறக்கி விடுகிறேன்'' என்றான் அவன்.

''நன்றி. உங்களுக்கு எதற்கு வீண் சிரமம். நீங்கள் எங்கே போகணுமோ?''

''நான் மாம்பலத்துக்குப் போகிறவன் தான். அவ்வழியாகப் போய்க் கொள்ளுகிறேன்'' என்றான் சுந்தரம்.

''போங்க, அம்மா! காலை நேரத்திலே இங்கே டாக்சி கொஞ்சத்திலே கிடைச்சுக்கிடாது'' என்றான் கூலிக்காரன். அப்பெண்ணின் பதிலைக்கூட எதிர்பாராமல் அவன் அவளுடைய பெட்டி படுக்கைகளை டாக்சியிலிருந்து எடுத்துக் கொண்டு, ''வாங்க, சார்! வாங்க, அம்மா!'' என்றான்.

அந்தப் பெண்ணும் சுந்தரமும் சிரித்துக்கொண்டே அவனைப் பின்பற்றினர்.

காரில் சென்று கொண்டிருக்கையில், ''நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டான் சுந்தரம்.

''காசிப்பூரிலிருந்து.''

சுந்தரம் வியப்புடன் அவளைத் திரும்பிப் பார்த்து, ''நீங்கள் தமிழர்தானே?'' என்று வினவினான்.

''ஆமாம்; என்னைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையா?'' என்று கேட்டுவிட்டுத் தனது வெண் பற்கள் வெளித் தெரியச் சிரித்தாள் அவள்.

''அதற்காக இல்லை. காசிப்பூர் வட நாட்டில் எங்கோ இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் அங்கேயிருந்து வருகிறீர்கள் என்றதும் சட்டென்று ஒரு சந்தேகம்...''


''சந்தேகமா?''

''ஆமாம்; எங்கள் ஊர்க்காரர் ஒருவர் அங்கே சிலகாலம் திவானாக இருந்தார். அவர் மகள் அங்கேதான் படித்துக் கொண்டிருக்கிறாள். ஒருவேளை......''

''உங்களுக்குக் கேசவபுரமா?''

''பேஷ்! பேஷ்! அப்படியானால் நீங்கள் சச்சிதானந்தம் பிள்ளையின் மகள்தான். வீணாதானே உங்கள் பெயர்?''

''ஆமாம்; உங்கள் பெயர்?''





மேட்டூர் கெமிக்கல்ஸ் மாதர் சங்கம் அமரர் கல்கியின் 'மோகினித் தீவு' என்னும் கதையை நாடகமாக்கி ஆண்டு விழாவன்று வெகு சிறப்பாக நடித்தார்கள். மாதர் சங்கத் தலைவர் திருமதி அகிலா ராமனும் மற்றச் சங்க அங்கத்தினர்களும் ஒத்துழைத்து நாடகத்தை வெற்றிகரமாக நடத்தினார்கள்.

''சுந்தரம். உங்கள் அப்பாவும் என் அப்பாவும் நெருங்கிய நண்பர்கள்.''

''தற்செயலான சந்திப்பானாலும் ஆச்சரியமான சந்திப்பு. இல்லையா? நீங்கள் இங்கே வேலையாக இருக்கிறீர்களா?''

''இல்லை; இன்ஜினீயரிங் படித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதுதான் வேலையாகி யிருக்கிறது. ஊர்ப் பக்கத்திலேயே. நம் ஊரை அடுத்து ஓடும் புங்கனாற்றில் ஒரு பாசன அணை கட்டுகிறார்கள். அங்கே சூப்பர்வைசிங் இன்ஜினீயராகப் போட்டிருக்கிறார்கள். நீங்கள் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லி யிருக்கிறார் அப்பா. படிப்பு முடிந்து விட்டதா?''

''ஆமாம்; எம். பி. பி. எஸ். பாஸ் பண்ணி விட்டேன்.''

''சந்தோஷம். மேலே என்ன செய்யப் போகிறீர்களோ? சொந்தப் பிராக்டீசா? அல்லது ஏதாவது ஆஸ்பத்திரியில் சேர்ந்துவிடும் உத்தேசமா?''

''சொந்தப் பிராக்டீஸ்தான் செய்யப் போகிறேன். ஆனால் பிராக்டீசை எங்கே ஆரம்பிப்பது என்பதைத்தான் இன்னும் தீர்மானிக்கவில்லை. ஊரோடு ஊராகவே இருந்துகொண்டு பிராக்டீசு செய்யலாம் என்பதுதான் என் எண்ணம். ஆனால் அங்கே எத்தனை டாக்டர்கள் இருக்கிறார்களோ? அப்பாவையும் கலந்து கொண்டுதான் அதை முடிவு செய்ய வேண்டும்.''

''கேசவபுரத்திலே 'பிராக்டீசு' பண்ணலாம். அங்கே டாக்டரும் கிடையாது; ஓர் இழவும் கிடையாது. காலைத் தலையை வலித்தால் பாட்டிலைத் தூக்கிக் கொண்டு எட்டு மைல் தூரத்திலுள்ள சேரவாய் மலைக்குத்தான் ஓட வேண்டும். நம் ஊர் என்னவோ சின்ன ஊர்தான். இருந்தாலும் இப்பொழுது பெரிய பாசன அணை வேலை ஒன்று நடக்கிறது. இரண்டாயிரம் மூவாயிரம் ஆட்கள் வேலை செய்கிறார்கள். சரியான சமயத்தில்தான் நீங்கள் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். அது சரி; நீங்கள் எப்பொழுது ஊருக்குப் புறப்படப் போகிறீர்கள்? ராத்திரி ஒன்பது மணி பாஸெஞ்சரில்தானே?''

''ஆமாம்; அது ஒன்றுதான் நம் ஊருக்கு நேரே செல்லும் வண்டி என்று கேள்விப் பட்டேன்.''

''இல்லை; இரவு பத்தரைக்கு ஒரு மெயில் கூட இருக்கிறது. ஆனால் அதில் போனாலும் இதில் போனாலும் நமக்கு ஒன்றுதான். கோயிலூர் ஜங்ஷனில் இறங்கி இந்தப் பாஸெஞ்ஜர் வரும்வரை காத்திருந்து ஏறிக்கொள்ள வேண்டும். மெயில் நம் ஊரில் நிற்காது.''

''ஓ! அதெல்லாம் என்னால் முடியாது. இடைவழியில் இரவு நேரத்தில் தன்னந் தனியாக இந்தச் சாமான்களுடன் இறங்கி ஏறுவது பெரிய தொல்லையாக முடியும். ஆமாம், பாஸெஞ்ஜரில் பஸ்ட்கிளாஸ் உண்டு, இல்லையோ?''

''உண்டு, உண்டு. ஒரு முழுப் பெட்டியே சேர்க்கிறார்கள். ஆனால் அது கோயிலூர் போகும் வரையில் அநேகமாகக் காலியாகவே இருக்கும். நீங்கள் தனியாகச் செல்வதால்......''

''அந்தப்பயம் ஒன்றும் இல்லை எனக்கு.''

''அது சரிதான். இரண்டு சீட்டுள்ள 'கூபே'யாகப் பார்த்து ஏறிக் கதவை உள்ளே பூட்டிக் கொண்டு விட்டால் ஒரு பயமும் இல்லை. இருந்தாலும்...'' சுந்தரம் சற்றுத் தயங்கிக் கொண்டே அவளுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.



புரசை சர் எம். சிடி. எம். முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் இருபத்தைந்து ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிய புலவர் பி. சொ. சண்முகம் பிள்ளை அவர்களின் வெள்ளிவிழா டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் அ. சிதம்பரநாதன், மயிலை வெறுத்து, திரு வி. எஸ். கோபாலகிருஷ்ணன் மற்றும் பலரும் விழாவில் கலந்து கொண்டு திரு சண்முகம் பிள்ளையின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டிப் பேசினர்.

"இருந்தாலும்......?" என்று வீணாவும் அவனை நோக்கினள்.

"பாஸெஞ்ஜர் எப்படியும் காலைக் காலை எட்டரைக்குத்தான் ஊர் போய்ச் சேரப் போகிறது. கிட்டத்தட்ட அதே சமயத்தில் நானும் ஊருக்கு வந்து விடுவேன்."

"ஓ! நீங்கள் காரில் வருகிறீர்களா?"

"ஆமாம். எப்பொழுதும் நான் காரில்தான் ஊருக்குப் போய்வருவது வழக்கம். அதிகாலையில் நாலு மணிக்குப் புறப்படுவேன். ஒன்பது, ஒன்பதரைக்கெல்லாம் போய் விடுவேன். அருமையான ரோடு. காலை நேரத்தில் போக்குவரத்தும் அதிகம் இராது. பிரயாணம் ரொம்ப உல்லாசமாக இருக்கும்."

வீணை அவன் மனத்தைப் புரிந்து கொண்டாள். "ஓ! நானும் உங்களுடன் வரலாம் என்கிறீர்களா? சந்தோஷம். நான் கூட நெடுந்தூரக் கார் சவாரி செய்ததே யில்லை."

அவனுடைய வெளிப்படையான பேச்சும், சகஜமான சுபாவமும் சுந்தரத்தைப் பெரிதும் கவர்ந்தன. "அப்படியானால்..." என்று ஏதோ பேச ஆரம்பித்தவன் சட்டென்று காரை 'ஸடன் பிரேக்' போட்டு நிறுத்திவிட்டு, "அடடா! பேச்சுச் சுவாரசியத்தில் மாம்பலத்துக்கே வந்து விட்டோமே!" என்றான்.

"பரவாயில்லை. அதனால் என்ன? ஒரு டாக்சி பிடித்துக் கொண்டு நான் ஹோட்டலுக்குப் போய்க் கொள்ளுகிறேன். டாக்சி ஸ்டாண்டில் என்னை இறக்கி விட்டு நீங்கள் போங்கள்" என்றாள் வீணை.

"வேண்டாம். அதோ தெரிகிறதே, சிவப்பு வர்ணமடித்த பங்களா, அது தான் நான் தங்கியிருப்பது; உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால்...?"

"அங்கே வந்துவிட்டுப் போகச் சொல்லுகிறீர்களா? வருகிறேனே."

"இல்லை. அங்கேயே நீங்கள் தங்கலாம். பங்களா என் அப்பாவின் நண்பர் ஒருவருடையதுதான். அவர் உங்கள் அப்பாவையும் நன்கு அறிவார். உங்களைக் கண்டால் அவரும் அவருடைய மனைவியும் மிகவும் சந்தோஷப் படுவார்கள்."

"அவர்களுக்கு இடையூறாக இரா தென்றால் எனக்கு என்ன? ஹோட்டலில் தன்னந் தனியே இருப்பதை விட வீட்டில் நாலு பேரோடு இருப்பதில் எனக்கு மகிழ்ச்சிதான்."


* * *

வீணையைத் தன்னுடன் வேலாயுதம் பிள்ளையின் பங்களாவிலே தங்கச் செய்ததையும் அவளைக் காரில் ஏற்றிக்கொண்டு கேசவபுரத்துக்கு வந்து சேர்ந்த கதையையும் விவரித்தான் சுந்தரம். பிறகு, மாலா கொண்டு தந்த காப்பியைப் பருகி விட்டு, சச்சிதானந்தத்திடமும் வீணாவிடமும் விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

அவன் போய்ச் சிறிது நேரமான பிறகு கூடத்து ஊஞ்சலில் அமர்ந்து அப்பாவும் மகளும் காசிப்பூர் சமஸ்தானத்து விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது, "மாமா! சச்சிதானந்த மாமா! மகள் டாக்டர் அம்மாவாகி வந்திருக்கிறாங்களாமே? எங்கிட்டே சொல்லவே இல்லையே நீங்க" என்று இடி முழங்குவது போன்ற குரலில் முழக்கியவாறு உள்ளே வந்தான் அசல் பட்டிக்காட்டானைத் தோற்றமளித்த ஒருவன்.

அவனுக்கு இரட்டை நாடி உடம்பு. அதை இன்னும் பெரிதாக்கிக் காட்டிற்று குள்ளமான உருவம். நல்ல அண்டங்காகத்தின் நிறம். வரம்பின்றி வளர்ந்திருந்த செல்லத் தொந்தி. அதைப் பட்டை பட்டையாகச் சிவப்பிலும் வெள்ளையிலும் கோடுகளிட்ட காலர் வைத்த அரைக்கைப் பனியன் மூடியிருந்தது. வட்ட முகம். அதில் இரண்டு கோழி முட்டைக் கண்கள். அரும்பு மீசை. காதிலே புது வைரக் கடுக்கன், கழுத்தில் ஒரு மைனர்ச் செயின். கையில் பவுன் தோடாவுடன் கூடிய மற்றொரு செயின். வரும்போது தலையில் முண்டாசாகச் சுற்றப்பட்டிருந்த துண்டு இப்பொழுது தோளில் கிடந்தது. கிராப்புத் தலைதான். ஆயினும் முன்புறம் ஓர் அங்குலம் அகலத்துக்குக் குடுமி. காதின் கீழ்ப் பாகம் வரையில் இறக்கிவிடப் பட்டிருந்த 'கிர்தா'. நெற்றியில் ஒரு சந்தனப் பொட்டு. குண்டுக் கத்திரிக்காய்க்குக் கையும் காலும் முளைத்தாற்போல் இருந்த அவனைக் கண்டதும் வீணை திடுக்கிட்டாள்.

அவனைப் போலவே அவனும் அவளைக் கண்டதும் அதிர்ந்து நின்றான். (தொடரும்)


மேலும்
மலிவானது!
குடும்பம்
முழுவதற்கும்
ஒரே டால்க்
PROTEX
All Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லட் பவுடர்
ஜயண்ட் சைஸ் அழகிய
பப்புடன் கிடைக்கும்!


வழக்கமாக 2-நிமிஷம் பிரஷால் தேய்த்தால்
கால்கேட்
டூத் பவுடர்
மூன்று நன்மைகளையும் அளிக்கிறது!
வாயில் நறுமணம்!
ஒளிவீசும் பற்கள்! சொத்தை குறையும்!
வாய்க்குப் பாதுகாப்பும், சுத்தமான ஒளிப் பற்களும் பெற, பல் டாக்டர் அங்கீகரிக்கும் இந்த முறையில் தினசரி கால்கேட் டூத் பவுடரை உபயோகியுங்கள் :
★ சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பற்களை 2 நிமிஷம் பிரஷ் கொண்டு தேய்க்கவும்.
★ பல்லின் நுனி, முன்புறம், பின்புறம் எல்லாவற்றையும் தேய்க்கவும்.
★ எப்போதும் ஈற்றிலிருந்து பல் நுனி நோக்கித் தேய்க்கவும்.
கைகண்ட முறையை இன்றே கையாளுங்கள்!
COLGATE
TOOTH
POWDER
ஜயண்ட் சைஸ்
வாங்கி பணத்தை
மிச்சப்படுத்துக
பல் டாக்டர் அங்கீகரித்த சிறந்த பலன்தரும் முறை!



பாத்திரங்கள் :

பெர்னாந்தோ—காஸ்டில் தேசத்து அரசன்.
உராகா — அரசகுமாரி
தியேகோ—ரோடரிகோவின் தந்தை (பிரபு)
கோமேக—ஷிமேனாவின் தந்தை. (பிரபு)
ரோடரிகோ—கதாநாயகன் (பிரபு)
சாஞ்சோ — ஷிமேனாமேல் காதல் கொண்டவன். (பிரபு)
அரியாசோ, அலான்சோ — பிரபுக்கள்.
ஷிமேனா—கதாநாயகி, கோமேசின் புத்திரி.
லேயனோரா — அரசகுமாரியின் தாதி.
எல்வீரா — ஷிமேனாவின் தாதி.

அங்கம் 5

காட்சி 1

(ரோடரிகோ, ஷிமேனா)

ஷி: ஆ! ரோடரிகோவா! பட்டப் பகலில் எப்படி வந்தது, இந்தத் துணிச்சல்

தனிப்பெருந் தலைவன்

உனக்கு? என் மானத்தை இழக்கச் செய்யாதே. போய் விடு.

ரோ: நான் இறக்கப் போகிறேன், அம்மணி! அதற்கு முன் இறுதி விடைபெற்றுக் கொள்ளவே வந்தேன். அன்பின் கடமையைச் செலுத்தாமல் இறக்க என் மனம் சம்மதிக்கவில்லை.

ஷி: இறக்கப் போகிறாயா?

ரோ: ஆம்! உங்கள் கோபத்தினின்று விடுதலை பெறச் சாவைத் தேடி விரைந்து செல்கிறேன்.

ஷி: இறப்பதா! உனக்கு மரண பயம் பிறக்கும்படி ஸாஞ்சோ என்ன அவ்வளவு சூரனா? இந்தத் திமை உனக்கு எப்படி வந்தது, இந்த பலம் அவனுக்கு எப்படி வந்தது? யுத்தம் இன்னும் நடக்க இருக்கிறது. அதற்குள் ரோடரிகோ இறந்ததாகவே நினைக்கிறானா? மோரர்களுக்கு அஞ்சாதவன், என் தந்தைக்கு அஞ்சாதவன், ஸாஞ்சோவை நினைத்துக் கிலி பிடித்து நிற்கிறானா? காரியம் வரும்போது இப்படித்தான் உன் தைரியம் உன்னைக் கைவிடும் போலிருக்கிறது!

ரோ: நான் என் தண்டனையைத் தேடிச் செல்கிறேன், அம்மணி! வெறும் யுத்தத்தையல்ல, நீங்கள் என் மரணத்தைக் கேட்கும் போது என் உயிரைப் பாதுகாக்கச் சற்றும் நான் இடம் கொடுக்க விரும்ப வில்லை. உங்கள் மேல் வைத்த அன்பும், என் தைரியமும் எப்பொழுதும் போலவேதான் இருக்கின்றன. ஆனால் உங்களுக்கு விருப்பமில்லாத விஷயத்தில் என் தோள்கள் செயலற்றவையாகின்றன. சண்டை என்னுடையது மட்டுமாயிருந்திருந்தால் நேற்றிரவே உயிரை விட்டிருப்பேன். ஆனால் அது அரசருக்கும், பிரஜைகளுக்கும், தேசத்துக்கும் இயற்ற வேண்டிய சேவையாதலால் அதில் என் முழுப் பலத்தைச் செலுத்தாமல் இருப்பது துரோகம் செய்ததேயாகும். அந்த இழிவான முறையில் உயிரை விட்டுவிட நான் என் உயிரை அவ்வளவு தூரம் வெறுக்க வில்லை. இப்பொழுது என் சொந்தக் காரியம்தான். நீங்கள் என் மரணத்தை வேண்டினீர்கள். நான் அத்தண்டனையை அங்கீகரிக்கிறேன். உங்கள் கையாலேயே நான் கோரின மரணம் எனக்குக் கிடைக்க வில்லை. இன்னொருவன் மூலமாக அதைத் தேடுகிறீர்கள். அவன் செய்யும் யுத்தத்துக்குப் பிரதி யுத்தம் செய்யப் போவதில்லை. உங்களுக்காக யுத்தம் செய்பவனுக்கு அப்படி அகௌரவம் செய்ய மாட்டேன். நீங்கள் அனுப்பியவன், உங்கள் கௌரவத்தை

எம். வி. சுப்பிரமணியம் ஐ. ஸி. எஸ் (ரிடையர்ட்)

ஸ்தாபிக்க வருபவன் என்றே மகிழ்ந்து உங்கள் கைப்பிடிக்கக் கொடுத்து வைக்காத நான் உங்கள் கைப்பிடிக்கக் கொடுத்து வைத்த அவன் கை வாளை மார்பைத் திறந்து ஏற்றுக் கொள்வேன்.

ஷி: என் அன்பமான கடமையின் ஏவுதலாலேயே நியாயமாய் உன்மேல் கேஸ் தொடர்ந்து கொண்டே இருக்கிறேன். எனக்காக யுத்தம் செய்பவனை எதிர்ப்பதில்லை ; என்னுமளவுக்கு உன் அன்பு உன்னைத் தூண்டிற்றென்றால், இந்த விஷயத்தில் உன் புகழும் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை முற்றிலும் மறந்த செயலாகும் அது. அன்றியும் குருட்டுத்தனமுமாகும். எவ்வளவு வைபவத்துடன் வாழ்ந்திருந்தும் நீ அப்படி இறந்தாயானால் நீ தோல்வியடைந்து கொல்லப்பட்டாய் என்றே மக்கள் சொல்வார்கள். என்னை இழக்க வேண்டி வரும் என்று தெரிந்தும் என் தந்தையை நீ தாக்கியதால் என்னைவிட உன் கௌரவத்தை அப்போது மேலாக மதித்தாய். இப்பொழுது ஏன் சண்டையின்றி ஒருவன் உன்னை வெல்லுமாறு உன் கௌரவத்தின் மதிப்பை நீயே தாழ்த்தி வைக்கிறாய்? ஏன் இந்த முரண்பாடு? முன்னிருந்த மனோ திடம் இப்பொழுது ஏன் இல்லை? ஓஹோ! ஒருவேளை உன் தைரியம் உனக்குத் தீங்கிழைக்கும்போது முன் வருவதும், அதற்கு அவகாசம் இல்லாத போது குன்றுவதுமாயிருக்கலாம்! தவிரவும், என் தந்தையை வென்ற பிறகு நீ இன்னொருவன் உன்னை வெல்லவிடுவது என் தந்தைக்கு அவமரியாதை செய்ததாயும் ஆகாதா? ஆகையால், மரணத்தைத் தேடியிழுத்துக் கொள்ளாதே; என் நியாயமார்க்கத்தை ஒழுங்காகவே செல்லவிடு; உயிர் தரிக்க மனமில்லையெனினும் உன் கௌரவத்துக்காகப் போராடு.

ரோ: கோமேசைக் கொன்ற பிறகும், மோரர்களை முறியடித்தபிறகும், என் கீர்த்திக்கு இன்னும் வேறு சின்னங்கள் வேண்டியதில்லை; இப்பொழுது நான் வெற்றியை அலட்சியம் செய்தாலும் அதற்குப் பாதகமில்லை. என் தைரியமும் பராக்கிரமமும் எல்லோரும் அறிந்தவை; என் கௌரவத்துக்கு மேலாக நான் எதையும் மதிக்கவில்லை என்பதும் எல்லோரும் அறிந்தது. நான் தேடும் மார்க்கத்தால் என் புகழுக்குப் பழுதொன்றும் வராது; நான் தைரியமிழந்தேன் என்றாவது, நான் வெல்லப்பட்டேன் என்றாவது ஒருவரும் சொல்லத் துணியார்கள். அவர்கள் ஒன்றுமாத்திரம் சொல்வார்கள். 'அவன் ஷிமேனாவைக் காதலித்தான்; அவளுடைய துவேஷத்துக்குப் பாத்திரனாகவும் உயிர் தரிக்க விரும்பவில்லை. தன் காதலி தன் மரணத்தைத் தேடி நீதி கோருமாறு விதி சூழ்நிலையை உண்டாக்கியதும் தானே அந்தத் தண்டனையை விதித்துக் கொண்டான். அவள் அவன் தலையை வாங்க நிச்சயித்த பின் அதை மறுத்தல் குற்றமாகும் என்று அவன் பெருந்தன்மையுடன் கருதினான். கௌரவத்துக்குப் பழி வாங்கக் காதலியைத் துறந்தான். காதலியின் பழி வாங்கலுக்குத் தன் உயிரைத் துறந்தான்; கௌரவத்தை ஷிமேனாவுக்கும் மேலாக வைத்தான். ஷிமேனாவை உயிருக்கும் மேலாக வைத்தான்.' இவ்வாறு சொல்லும் பொழுது என் பெருமையைப் பார்ப்பார்கள். என் கீர்த்தி மங்குவதையல்ல. இன்னும் பிரகாசத்துடன் விளங்குவதைப் பார்ப்பார்கள். வேறொருவரும் எனக்கு மரணத்தைக் கொடுத்து உங்களைத் திருப்திசெய்வது இயலாது; நானே என் மரணத்தை உண்டாக்கிக் கொண்டு உங்களுக்கு அந்தத் திருப்தியை அளித்தது எனக்குக் கௌரவமேயாகும்.

ஷி: சரி, உன் உயிரையும் கௌரவத்தையும் பொருட்படுத்தாமல் மரணத்தைத் தேட நிச்சயித்தாய். ஆனால் நான் சொல்ல வேண்டியது இன்னும் ஒன்று இருக்கிறது. ரோடரிகோ! நான் உன் மேல் வைத்திருந்த அன்புக்காக, இப்பொழுது என்னை சாஞ்சோவிடமிருந்து விடுவிக்க யுத்தம் செய்ய வேண்டும்; இன்றேல் நான் ஒப்புக் கொண்ட நிபந்தனைப்படி எனக்கு அருவருப்பாயிருந்தாலும் அவனை நான் மணக்க வேண்டி வரும். இன்னும் தெளிவாய்ச் சொல்ல வேண்டுமா? என் கடமையைப் பலவந்தத்தால் நீக்கி என்னை மௌனமாக்குமாறு யுத்தம் செய். என் மேல் அன்பு உனக்கு இன்னும் இருக்குமானால், ஷிமேனாவே வெகுமானமாயிருக்கும் இந்த யுத்தத்தில் வெற்றியுடன் வெளியேறு. போய் வா. வெட்ட வெளிச்சமாய்ச் சொன்ன எனக்கு வெட்கம் தாங்கவில்லை. (போகிறாள்.)

ரோ: ஆகா! இப்பொழுது யாரடா என்னை எதிர்த்து நிற்கக் கூடியவன்? வாருங்கள், நவரை தேசத்தோர், மோரர்கள், காஸ்டிலர்கள், ஸ்பெயின் தேசம் முழுதிலும் உள்ள வீரர்கள் எல்லோரும் சேர்ந்தே வாருங்கள். பெரும்படையாகத் திரண்டு வாருங்கள். இப்பொழுது எனக்குக் கொடுக்கப்பட்ட உற்சாகத்தாலும் இனிய நம்பிக்கையினாலும் நான் ஒருவனே உங்கள் அனைவரையும் வெல்ல வல்லவன்.

காட்சி 2

[அரசகுமாரி தனக்குள் நினைந்துக் கொள்கிறாள்.]

அரச: என் காதலைக் குற்றமாக்கி வைக்கும் உயர் பிறப்பே, நீ சொல்வதைக் கேட்பதா? பிறப்புப்பண்பைத் தகர்க்கத் தூண்டும் இனிய வலிமையுடைய காதலே, நீ சொல்வதைக் கேட்பதா? இந்த இரண்டு சொல்லில் எதைக் கேட்க வேண்டும்? ரோடரிகோ! உன் பராக்கிரமத்தால் நீ எனக்குத் தகுதியானவன், ஆனால் அரசகுமாரனல்லவே.

என் கௌரவத்தையும் ஆசையையும் பிரித்து வைத்திருக்கிறதே கொடிய விதி. அன்பும் தணியாது, காதலனையும் அடையமுடியாது. இந்த இரண்டுங் கெட்டான் நிலை நீடித்துக் கொண்டேயிருந்தால் என் துயரத்துக்கு எல்லையேது?

ஆனால் நான் இப்படித் தயங்க வேண்டியதுதான் ஏன்? அரசனை மணப்பதே பண்பென்றிருந்தாலும், ரோடரிகோவின் ஆணைத்துக்குச் செல்வது எனக்கு எவ்வாறு குறையாகும்? அரசர்கள் இருவரை வென்ற அவனுக்கு அரச பதவி கிடைப்பது ஒரு பெரிய காரியமா? "தனிப்பெருந் தலைவன் (ஸெய்யது)" என்ற பெரிய பட்டமே அவனுடைய அரசாளும் தகுதியைக் காட்டவில்லையா?

எனக்குத் தகுதியானவன்தான்; ஆனால் ஸிமேனுவுக்கு உரியவனாயிற்றே! நான் கொடுத்த அந்தத் தானமே எனக்குப் பகையாயிற்று. அவன் தந்தையின் மரணம் கூட அவர்களுக்குள் வேற்றுமை ஏற்படுத்தவில்லையென்றால் என் ஆசைக்கு எவ்வாறு பலன் இருக்க முடியும்? நான் அவன் மேல் ஆசைப்பட்டுத்தான் என்ன பயன் விளையப் போகிறது?

காட்சி 3

[அரசகுமாரி—லேயனோரா]

அர: எங்கு வந்தாய், லேயனோரா?

லே: உங்கள் மனத்துக்குச் சாந்தி ஏற்பட்டதைப் பாராட்ட.

அர: நான் துயரத்திலேயே இருக்கிறேன், சாந்தி எங்கிருந்து எனக்குக் கிடைக்கும்?

லே: நம்பிக்கை தீர்ந்தால் காதலும் தீர்ந்தது. ரோடரிகோ இனிமேல் உங்கள் புத்தியை மயக்குவதற்குச் சிறிதளவும் இடமில்லை. ஸிமேனு ஏற்படுத்திய யுத்தம் உங்களுக்குத் தெரியுமே. அதில் ரோடரிகோ தோற்றால் இறப்பார், ஜயித்தால் ஸிமேனுவின் கணவனாவார். எதானாலும் உங்களுக்கு அவர் இல்லை; அதனால் உங்கள் மனமும் சாந்தியை அடையும்.

அர: ஒருபோதும் அப்படி ஆகப் போவதில்லை.

லே: அதென்ன? இன்னும் உங்களுக்கு எப்படி நம்பிக்கை?

அர: ஏன் கூடாது? இந்த நிபந்தனையில் ரோடரிகோ சண்டை செய்வதாயிருந்தால் அதனின்றும் அவனை விடுவிக்க ஏதாவது யோசனை செய்வேன். காதலர்களுக்கு இது போன்ற சந்தர்ப்பங்களில் எப்படியாவது யுக்திகள் தோன்றும்.

லே: அழகாயிருக்கிறது! ஸிமேனுவின் தந்தை இறந்ததுகூட அவர்களுக்குள் மனஸ்தாபத்தை உண்டுபண்ணவில்லையே நீங்கள் என்ன செய்துவிடப் போகிறீர்கள்? இப்பொழுது ஸிமேனுவின் நடத்தையைப் பார்த்தால், வழக்குத் தொடரும் முயற்சி வைராக்கியத்தால் அல்ல என்பது தெரிகிறது. யுத்தத்துக்கு ஏற்பாடு செய்தாள், ஆனால் தன் பக்கம் யாரை நியமித்தாள்? செயலாற்றிப் புகழுடைந்த எத்தனையோ வீரர்கள் இருக்க, பரிச்சயமில்லாதவனும், இப்பொழுதே தான் ஆயுதம் எடுப்பவனுமாகிய உள்ள ஸாஞ்சோவை ரோடரிகோவோடு போரிடத் தேர்ந்தெடுத்தாள். ஏன்? அப்படி வலிமையற்ற ஆள்தான் அவளுக்கு வேண்டும். அதனால்தான் ரோடரிகோ வெற்றியடைவதைப் பற்றிச் சந்தேகமே யிராது. தன் கடமை முடிவடையும். ரோடரிகோவும் எண்ணியதைப் பெறுவான்.

அர: அப்படித்தான் தோன்றுகிறது. ஆனாலும் என் மனம் அவன்மீதே சென்று கொண்டிருக்கிறது. அவனை மறக்க முயன்றாலும் என்னால் முடியவில்லை. நான் என்னதான் செய்வது, இந்தத் துன்பம் நிறைந்த சமயத்தில்?

லே: இன்னும் கொஞ்சம் பலமாய்த் தாங்கள் யார் புதல்வி என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அரசர்கள் உங்களை மணப்பதற்காகப் போட்டியிட்டுக் கொண்டு காத்து நிற்கும் போது சாதாரணமான ஒரு வீரனைப் போய் அரசகுமாரியாகிய தாங்கள் காதலிப்பதா?



அர: நான் இப்பொழுது காதலிப்பது வெறும் ரோடரிகோவை அல்ல; காஸ்டில் தேசத்துக்கே கீர்த்தியை யளிக்கக் கூடிய பராக்கிரமச் செயல்களியற்றியவன்; இரு அரசர்களை வென்று, எதிரிப் படைகளைப் புறமுதுகிட்டோடச் செய்து "தனிப்பெருந் தலைவன்" என்ற பட்டம் பெற்றவன்; அவனைக் காதலிப்பது குற்றமல்ல; ஆனால் அதை விட்டுவிடுவதற்கே இப்பொழுது உறுதி கொண்டேன். மேலும் வேறோர் காரணத்துக்காக ரோடரிகோவுக்கும் ஸிமேனுவுக்கும் ஏற்பட்டிருக்கும் மாசற்ற தூய காதலை நான் கெடுக்க விரும்பவில்லை. நான் ஸிமேனுவுக்கு அளித்த பரிசை அவளிடமிருந்து திரும்ப வாங்குவது சரியல்ல. ரோடரிகோ யுத்தத்தில் வெற்றி பெறுவது நிச்சயம். மறுபடியும் அவனை ஸிமேனுவுக்குக் கொடுத்து விடுவோம்.

(அடுத்த இதழில் முடியும்)



என் குடும்பத்திற்கு என்னால் இனி கஷ்டமே இல்லை
போர்ன்-விடாவுக்கு எனது நன்றி



சென்ற வருஷம் நான் ஒரு பெரிய விபத்துக்குள்ளாகி வெகு நாட்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டேன். நான் வீட்டுக்கு வந்த பின்னும் சக்தியற்று பலஹீனமாக இருந்தேன். குடும்பத்திற்கு என்னால் நேர்ந்த கஷ்டத்தை எண்ணி கவலையுற்றேன். அப்போது தினமும் போர்ன்-விடா அருந்தும்படி எங்கள் டாக்டர் சொன்னார். அப்படியே செய்ய சீக்கிரத்திலேயே அதிக சக்தியையும் வலிமையையும் அடையப் பெற்றேன். போர்ன்-விடா எனக்குப் புத்துயிர் அளித்தது. சக்திக்கும் வலிமைக்கும் தினமும் போர்ன்-விடா அருந்துங்கள்.



நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

101. நேயர்கள் கடிதம் (2)

கடிதம் 1795-2ல் அரியூர் (விழுப்புரத்துக்கு அடுத்தது) சகோதரி எழுதுவதைப் பாருங்கள்:

''தாங்கள் கல்கியில் ஒவ்வொரு வாரத்திலும் ஒவ்வொரு வியாதியைப் பற்றியும் அதைப் போக்குவதற்கான முறைகளையும், மருந்துகளையும் மிகமிக எளிய நடையில் அதிக படிப்பில்லாதவர்களும் புரிந்து கொள்ளும் முறையில் எழுதி வருகிறீர்கள். வைத்திய வசதி இல்லாத எங்கள் கிராமத்துக்குத் தாங்கள் ஒரு சமய சஞ்சீவிபோல் ஒவ்வொரு வாரத்திலும் எழுதி வரும் வைத்தியக் குறிப்புகள் எங்களுக்குப் பெரிதும் உதவி புரிந்து வருகின்றன.''

சகோதரீ! உனக்கு ஸ்ரீராமச்சந்திரனின் அருள்மடை திறந்து பாய வேணும் அம்மா! இந்த உனது புகழுரை கிராமாந்தரங்களுக்கு வைத்திய வசதி என்றும் கிராம முன்னேற்றம் என்றும் திட்டங்களைச் சமைப்போரின் செவிகளில் விழுமானால்....பார்க்க வேண்டிய கண்களில் படுமானால்....திட்டங்கள் இனிதுமுடியும்; எளிதில் பூர்த்தியாகும். ஆனால் ''ஏழைப் பேச்சு அம்பலத்துக்கு ஏறுமா?'' என்று ஒரு பழமொழியுண்டு. தமிழ் நாட்டினர் எத்தனையோ காலமாகச் சலிப்புற்றபோது, சொல்லி வரும் பழமொழி. கனவும் நனவாவது உண்டு அல்லவா? பொறுத்திருப்போம்.

கடிதம் 1827-2ல் ஷில்லாங்கிலிருந்து ஒரு நண்பர் எழுதுகிறார்:

''....தாங்கள் அறிவித்ததின்மூலம் என் குழந்தைக்கு, ஈஸினோபீலியாவுக்காக, தஞ்சை அரண்மனை முறைப்படி செய்த அசுவகந்தா லேஹியமும், கூஷ்மாண்ட ரஸாயனமும் கொடுத்து வந்ததில் இப்பொழுது நன்றாகக் குணம் தெரிகிறது. இது humidity அதிகமாயுள்ள இடமாதலால் இங்கு வந்த புதிதில் அவனுக்கு இழுப்பு அடிக்கடி வந்து கொண்டிருந்தது. மூன்று மாதங்களாய் இந்த இரண்டு மருந்துகளும் கொடுத்து வருவதில், ஜலதோஷம் வந்தாலும் இழுப்பு வருவதில்லை. தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.''

இந்த நண்பர் அஸ்ஸாம் சர்க்காரில் உத்தியோகம் புரிபவர். குறிப்பிட்ட ஒரு இலாகாவின் தலைமைப் பதவியை வகிக்கிறார். கல்கி பத்திரிகையைத் தவறாமல் படிப்பவர். சமீபத்தில் எழுதி வந்த பெருங்கால் விஷயமாக ஏதோ கேட்டு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு எழுதியுள்ளார்.

பிள்ளையாண்டான் ஒருவன். கலெக்டர் உத்தியோகம் பார்த்து வருகிறவனாம். அவன் தகப்பனார் ஒரு மடிஸஞ்சி... மகனுக்குத் தம் பரிஷ்காரம் முன்னேற்றம், நாகரிகம் முதலியவைகளின் விளைவாக ஏற்பட்டிருந்த மனோபாவத்துக்கு இந்தத் தகப்பனாரின் வைதிகப் போக்கு பிடிக்கவில்லையாம். ஏன்! ஒரு சந்தர்ப்பத்தில் அவரைத் தன் தகப்பனாரென்று சொல்லிக் கொள்வதே இழிவானதென்று தோன்றவும் ஏதோ சொன்னான். இப்படியொரு கதை. மேனாட்டு முறையில் பள்ளிப் படிப்பின் பலத்தால் உயர்ந்த உத்தியோகமும் நிறைந்த சம்பளமும் வாய்த்திடும்போது—பாச்சாத்யவியா மோஹத்தால் நம் நாட்டுக் கலை, கல்வி, பண்பு, ஆசாரம், பழக்கம் வழக்கம், கொள்கை, நம்பிக்கை முதலியவைகளில் ஒரு மதிப்புக் குறைவும் - இகழ்ந்து குறை கூற ஆக்கமின்றி முனைந்திடும் குணமும் தலைவிரித்தாடுவது வெகு சகஜம். மேற்சொன்ன காரணங்கள் யாவும் இருக்க அவற்றின் உதவியினாலேயே, நம் நாட்டுக் கலை, கல்வி, பண்பு, ஆசாரம், பழக்கம் வழக்கம், நம்பிக்கை ஆகியவற்றில் சொல்லொணாச் சிறப்பு உளதெனக் கண்டு களிப்புடன் புகழ்ந்து ஏற்கவும் செய்பவரும் உண்டு. மேற்கண்ட கடிதத்தை எழுதியுள்ள அன்பர் இந்த இரண்டாவது வர்க்கத்தைச் சேர்ந்தவரென்று பெருமகிழ்ச்சியுடன் இவரைக் 'கல்கி' நேயர்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்.

தாம்பரம் சகோதரி 182812-ல் கிரஹணி என்ற ரோகத்தில் அஷ்டசூர்ணம் என்னும் ஹிங்க்வாஷ்டக சூர்ணத்தினால் தனக்கும் தன் குழந்தைக்கும் ஏற்பட்ட குணத்தை வெகுவாய்ப் பாராட்டி எழுதும் வகை ருசிகரமாயுள்ளது.

''.........எழுதி வரும் விஷயங்களால் பொது மக்கள் அடையக் கூடிய நன்மைகள் அளவற்றன. நாளொரு வியாதியும், நாழிக்கொரு 'காம்பிளிகேஷ'னும் என்று புதிய புதிய வியாதிகள் உண்டாகிப் பெருகி வரும் இந்நாட்களில் தங்கள் சிகிச்சை முறைகளால் எவ்வளவோ நன்மைகள் ஏற்படுகின்றன. எங்கள்



"வயதானவர்களின் பராமரிப்பு விடுதி ஒன்று ஆரம்பித்திருக்கிறோம்: அதற்குத் தாங்கள் ஏதேனும் அனுப்ப முடியுமா?"

"ஓ! பேஷாக. என் மாமியாரை அனுப்புகிறேன்: மாமனார் ஊரில் இல்லை; வந்தவுடன் அவரையும் அனுப்புகிறேன்!"

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

வீட்டு வரையில் எனக்கு எவ்வளவோ நன்மைகள் ஏற்பட்டுள்ளன....... உதாரணமாக..." என்று தொடங்குகிறாள் இந்தச் சகோதரி.

இந்தச் சகோதரிக்குத் தாய் தந்தை உடன் பிறந்தார் என்ற பந்துக்கள் யாரும் இல்லை. புகுந்த வீட்டிலிருந்த ஒரு உறவினரான மாமியாரும் காலமாகி ஒரு வருஷமாகிறது. சகோதரியோ அறியாதவள். ஆணாகப் பிறந்திருந்தால் இந்த வயதுக்குக் கல்யாணமே நடந்திராது. பெண் செல்வமாகப் பிறந்து விட்டதால்தான் தன் கணவர், இரண்டு குழந்தைகள் [லவ—குசர் எனலாம். பலராமன் கிருஷ்ணன் என்று வேணுமானாலும் சொல்லலாம்.] ஆகிய குடும்பத்துக்குத் தலைவியாயிருந்து பொறுப்பு வகித்தாக வேணும். இந்நிலையில் மூன்றாம் முறை தாய்மையை எதிர்பார்த்து நிற்கிறாள்.

இரண்டாவது முறை சூலுற்றிருந்த போது கர்ப்பக்கிரஹணியால் பட்ட அவஸ்தை ஒரு பாரதம். குழந்தை பிறந்த பிறகு ஸூதிகா கிரஹணி. "ஒரு நாளைக்கு 3-4 தரம் வெளிக்குப் போகும். ஒரு வேளை சாப்பிட்டதும் உடனே வெளிக்குப் போகும். உடம்பில் ஆகாரம் ஒட்டாது. ஆகவே உடல் மெலிவு—பலஹீனம்—என்று பல கஷ்டங்கள், என்ன வியாதி! என்ன செலவு! அப்போது மாமியாராவது "இருந்தார்". இப்போது "அவரும்" இல்லை. இந்த வயிற்றுப் போக்கினின்று மீள என்ன வழி? அப்போதுதான் அஷ்டசூரணத்தைச் செய்து சாப்பிடத் தொடங்கினாள் இச்சகோதரி.

"இப்போது அவ்வுபாதை ஒன்றும் இல்லை. இத்தனை நாட்களாக, இரண்டு வருஷங்களாக, பல மருந்துகள் சாப்பிட்டு, எவ்வளவோ ரூபாய்கள் செலவழித்தும் சரியாகாத வியாதி உங்கள் அஷ்டசூர்ணத்தால் ஒரு மாதத்தில் பூரண குணமாகி விட்டது. வயிற்றில் இரண்டு வருஷங்களாக இருந்த ஓயாத இரைச்சல், வாயு பிரிவது, அடியோடு நின்றுவிட்டன!" என்று தெரிவித்து "இரண்டாவதாக......" என்று மறுபடியும் தொடங்குகிறாள்.

தனது இரண்டாவது குழந்தைக்குக் கக்குவான் இருமல் வந்து கஷ்டப்பட்ட விவரம். "இத்தனைக்கும் அக்கம் பக்கத்தில் கக்குவான் பரவி இருந்தபோதே தடுப்பு மருந்து தந்திருந்தும் பலனில்லை,..." கக்குவானுக்குச் சிகிச்சை நடந்துவருங் காலத்தே ஒரு வயிற்றுப்போக்கு தொடங்கியது. மருந்து மாற்றி மருந்து; டாக்டர் மாற்றி டாக்டர். பிறகு ஒரு டாக்டர் வயிற்றில் புண் இருப்பதாகவும் கூறினார். வயிற்றில் இரைச்சலும் நிற்கவில்லை. குழந்தை எலும்பும் தோலுமாகி விட்டது. ".....இப்போது ஒரு மாதமாக அஷ்டசூர்ணம் தினமும் தருகிறேன். வயிற்று இரைச்சல், பேதி கிடையாது. சாப்பிட்ட ஆகாரம் சரிவர ஜீரணமாகிறது. இத்தனை நாட்கள் உட்காரக்கூட இல்லை. இப்போது உட்காருகிறான்; தவழ்கிறான். மெல்லியதாக இருந்த கால்களை இப்போது சற்றுத் தரையில் ஊன்றுகிறான். தூக்கமே இல்லாமல் இருந்தவனுக்கு இப்போது நல்ல தூக்கம் வருகிறது. ரூபாய் 300 க்கு மேல் கடந்த ஒரு வருஷமாகச் செலவழித்தது. இப்போது மூன்று ரூபாயு மில்லாமல் பூரண குணம் ஏற்பட்டது கண்டு மிக மிக மகிழ்ச்சி...இதற்காக..." என்று எனக்கும் கல்கிக்கும் புகழுரைகள் எழுதியிருக்கிறார். கடைசியாக "......இனிமேல் நான் இங்கிலீஷ் வைத்தியமே செய்துகொள்ளப் போவதில்லை. எனவே கீழ்வரும் கேள்விகளுக்கு விவரமான பதில்களைத் தயவுசெய்து கருணை புரிந்து அளிக்கவும்......" என்று நான்கு கேள்விகளை விடுத்துள்ளாள். தக்கபடி ஏதோ தெரிந்தவரையில் அவருக்குப் பதில் எழுதினேன். (தொடரும்)


அழகின் அபிவிருத்தி
நீங்கள் "'ஹாஸலீன்' ஸ்னோ" உபயோகித்
தீர்களானால், வெய்யிலின் வெப்பமோ, காற்றோ,
மழையோ உங்களுடைய தோற்றத்திற்கு
யாதொரு கெடுதியும் விளைவிக்காது. கெடுதியற்ற
தன்மையுள்ள "'ஹாஸலீன்' ஸ்னோ"
உங்களுடைய சருமத்தை மிருதுவாகவும்
அழகாகவும் விளங்கச் செய்கிறது.
மற்றும் அது ஏமாற்றம் செய்ய
முடியாத பாக்கிங்கில் கிடைக்கிறது.
HAZELINE SNOW
"'HAZELINE' SNOW" TRADE MARK
"'ஹாஸலீன்' ஸ்னோ"
டிரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு
BWY-4

தேன்கூடு

ஆர்வி

அத்தியாயம் 7

குப்பையில் மாணிக்கம்




வெள்ளையன் தோட்டத்தில் அநேகமாக எல்லாரும் உழைப்பாளிகள்தான். ஊரில் எத்தனை விதமான உழைப்புக்கள் உண்டோ அத்தனையும் செய்து பிழைக்கும் உழைப்பாளிகள் அங்கே வசித்து வந்தார்கள். நாள் ஒன்றுக்கு ஏழெட்டு ரூபாய்கள் சம்பாதிக்கும் உழைப்பாளியும் உண்டு; ஏழெட்டு அணாகூடச் சம்பாதிக்காத ஏமாளியும் உண்டு. சுருங்கச் சொன்னால் அது ஒரு தனி உலகம். அந்த உலகத்தில் வாழும் மக்களிடையே டிரைவர் குப்பனுக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது; மரியாதையும் இருந்தது.

அதற்குக் காரணம் அவன் எட்டு வருஷங்களுக்கு மேலாகப் பாரிஸ்டர் வீட்டு டிரைவராக இருந்ததுதான்; சாதாரண டிரைவராக வேலையில் அமர்ந்த அவன், காலடைவில் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவனைப் போலவே ஆகிவிட்டான். அவனுக்கு அந்த வீட்டில் அத்தனை சலுகை இருந்தது. பெரிய பெரிய இடங்களுக்கெல்லாம் போகக் கூடிய வாய்ப்பும் அவ்விடங்களில் உள்ளவர்களோடு பழகக் கூடிய வசதியும் அவனுக்கு இருந்தன. பாரிஸ்டரிடம் காரியம் ஆகவேண்டியிருந்தால் அதற்குக் குப்பன் தயவு இல்லாமல் முடியாது. பாரிஸ்டர் வண்டியில் ஏறி உட்கார்ந்து விட்டால் கவர்னர் மாளிகைக்குள்ளேகூட அவன் போய்விட்டு வரலாம். பாரிஸ்டர் சிபாரிசு செய்வாரோ, மாட்டாரோ, குப்பன் மட்டும் முனைந்து விட்டால் நிச்சயம் அந்தக் காரியம் நிறைவேறி முடிந்துவிடும். அந்தத் தோட்டத்தில் அவன் இரண்டு மூன்று சிறுவர்களைப் பெரிய இடங்களில் வேலையில் அமர்த்தியிருக்கிறான். அவனால் உதவி சிறிதாவது நிருந்திருக்குமே தவிர, கெடுதல் சிறிதும் ஏற்பட்டிராது.

இவ்வளவெல்லாம் இருந்தும் வெள்ளையன் தோட்டத்து எல்லைக்குள் அடியெடுத்து வைத்து விட்டால் அவன் வழியை விட்டு விழியைத் திருப்புவதில்லை; குனிந்த தலை நிமிருவதில்லை. அவசியம் இருந்தாலன்றி அவன் யாரிடமும் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை. ஆனால் அவனிடம் வந்து கஷ்டம் என்று யாராவது சொன்னால் அவனுக்கு உண்மையில் மனம் கசிந்து விடும். அவர்களுக்குத் தகுந்த யோசனைகளைச் சொல்வதோடு, தன்னால் முடிந்த உதவியையும் செய்ய அவன் தயங்குவதில்லை. செய்யும் உதவியையும் மூன்றாம் பேர் அறியாமல்தான் செய்வான். அதைப் பற்றிப் பிறரிடம் மூச்சுக் காட்ட மாட்டான். இதனாலெல்லாம் அவன் மதிப்பு மேலும் அதிகமாகியிருந்தது.

பாஞ்சாலிக்கு மட்டும் அவனைக் கண்டால் அவ்வளவாகப் பிடிப்பதில்லை. அதற்குக் குறிப்பிட்ட காரணம் என்று எதுவுமே இல்லை; அவன்தான் அவர்கள் வீட்டு பாபுவுக்கு ஒரு வேலை தேடிக்



கொடுத்திருந்தான். அது முதலே அவனுக்கு அவனிடம் உள்ளூற அசூயைதான். பாபுவை முன்னிட்டு நன்றி யுணர்ச்சியைக் காட்ட 'அவனுக்குப் பிடிக்கவில்லை. கடன் கொடுத்தவனைக் கண்டால் ஏற்படும் உணர்ச்சிதான் அவனுக்குக் குப்பனைக் கண்டால் உண்டாயிற்று. பாபுவுக்காகப் பிறர் என்ன இரக்கம் காட்டுவது? அவனிடம் இரக்கம் பாராட்டுவதோ, அன்பு காட்டுவதோ அவனுக்குப் பெரிய குத்தலாகப் பட்டது. அதிலும் குப்பன் வலுவிலே வந்து செய்த உதவி அவனுக்கு உள்ளூற எரிச்சலாகவே இருந்தது. அதை வெளிக் காட்டிக் கொள்ளவும் முடியவில்லை.

குப்பனுக்குப் பாபுவிடம் ஒரு தனி அன்பு இருந்தது. பாபுவின் களங்கமற்ற குழந்தை முகத்திலே அவன் என்ன கவர்ச்சியைக் கண்டானோ, யாரிடமும் பேசாத அவன் அவனைக் கண்டால் மட்டும் சிறிது நின்று இரண்டு 'வார்த்தைகளாவது பேசாமல் போக மாட்டான்; தாய் தந்தையற்ற அந்தச் சிறுவன் பாஞ்சாலியிடமும் மீசைப் பக்கிரியிடமும் அகப்பட்டுக்கொண்டு அல்லல் படுவதைப் பார்த்து அவன் மனம் தவித்தது. சிறு பைய னுயிர்றே என்று பாராமல் அவர்கள் அவனைக் கொடுமைப்படுத்தினர்; சோறுகூடப் போடாமல் அடித்தார்கள். இதையெல்லாம் போகும்போதும், வரும்போதும் கவனித்த குப்பனுக்குப் பாபுவிடம் மேலும் அன்பு பெருகியது. எந்த விதத்திலாவது அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் இருந்தது.

அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் நீதிபதி ராமசுந்தரத்தின் பத்தினி மிஸஸ் மீனாட்சி வந்து எடுபிடி வேலைக்கு ஒரு

சிறுவன் வேண்டும் என்று அவனைக் கேட்டாள். அதைக் கேட்டதுமே குப்பனுக்குப் பாபுவின் நினைவுதான் சட்டென வந்தது. அவனுக்கு நீதிபதியையும் தெரியும்; அந்த அம்மாளையும் நன்றாகத் தெரியும். எனவே பாபுவுக்கு அது ஏற்ற இடம் என்று எண்ணினான். மறுநாளே பாபுவைப் பார்த்து, பாஞ்சாலியைப் பார்த்துப் பேசி அவனைக் கொண்டுபோய் வேலையில் சேர்த்து விட்டான். பாஞ்சாலிக்கு இதனால் இரண்டுவித நன்மைகள் இருந்தன. பாபுவுக்காகச் சாப்பாட்டுச் செலவு கிடையாது; ஆனால் அவனால் வரும்படி மட்டும் உண்டு. ஆயினும் அவள் மேலுக்குச் சம்மதிக்காதவளைப் போலவே நடந்து கொண்டாள். குப்பனுக்கு நன்றிசெலுத்த வேண்டியது போக, அன்று முதலே பங்காளியைக் காண்பது போலத்தான் காய்ந்தாள். உதவியைப் பெற்றுக் கொண்டவன் பகைப்பதுபோல், விரோதியினால் கூடப் பகைக்க முடியாது என்பது அவள் விஷயத்தில் உண்மையாயிற்று.

பாபு அந்த வீட்டுக்குப் போன நாளிலிருந்து அழகான புது உலகத்துக்குப் போய்ச் சேர்ந்திருப்பது போலத்தான் உணர்ந்தான். எல்லாரும் அவனிடம் அன்பாக இருந்தார்கள். போய்ச் சேர்ந்த சில மாதங்களிலேயே ஆளே அடியோடு மாறிப் போய் விட்டான். பாஞ்சாலிக்கு என்னவோ ஒரு பயம் வந்துவிட்டது. வெளியுலகம் தெரியாமல் இருந்த அவனுடைய கண் கட்டுக்களை யாரோ அவிழ்த்து விட்டு விட்டதுபோல் அவள் எண்ணிக் கொண்டாள்.

அந்தப் பாபுவின் அழுகைக்குரலைக் கேட்டுத்தான் குப்பன் அவ்வளவு வேகமாக ஓடி வந்தான். இரண்டு மூன்று நாட்களாகவே அவன் பாபுவைச் சந்திக்கவில்லை. அவனுக்கு இப்பொழுது ஐந்து ரூபாய் சம்பளம் அதிகப் படுத்தியிருந்தார்கள். அதை அவன் பாஞ்சாலியிடம் சொல்லவில்லை; அந்தப் பணத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு வந்தான்.

பாஞ்சாலி இந்த வாசனையை எப்படியோ நுகர்ந்து விட்டாள். அவன் வாய் வழியாகவே அவன் உண்மையைப் பிடுங்கி விட்டாள். இதற்குப் பயந்துதான் அவன் வெள்ளையன் தோட்டத்துப் பக்கம் தலையைக் காட்டாமலே இருந்தான். ஆனால் பாஞ்சாலி அவன் இருந்த பங்களாவுக்கே போய்க் குற்றவாளியைக் கண்ணி வைத்துப் பிடிப்பதுபோல், வெளியிலேயே காத்திருந்து, அவனை அழைத்துக் கொண்டு வந்து விட்டாள். வெள்ளைச் சட்டைப் பையில் ரூபாய் கோட்டு இருப்பதைப் பார்த்ததும், "எத்தினி ரூபாய் இப்பகூடப் போட்டுக் கொடுக்கிறாங்க?" என்று ஒரு கேள்வியைப் போட்டு வைத்தாள்.

பாபுவின் கண்கள் கலங்கி நின்றன. பரிதாபமாக இருந்தது அவன் பார்த்த பார்வை. ஆனால் பாஞ்சாலி அவிழ்ந்த கொண்டையை ஒரு கையால் அள்ளிச் செருகிக் கொண்டே, "சொல்லுடா, கள்ளப் பயலே!" என்று நறுக்கென்று அவன் தலையில் குட்டினாள்.

"அஞ்சு ரூபாய்......"

"வூட்டுக்கு வந்து சேரு; பிறகு பேசிக்கறேன்!"

பாபு பருச்குஞ்சு நடுங்குவதுபோல் நடுநடுங்கிப்போய் நின்றான்.

"ஏண்டா, இதை நீ எங்கிட்டே அப்பவே சொல்லலே!"

பாபு விழித்தான்.

"யாரானும் சொல்ல வேணும்னு சொல்லிக் கொடுத்தாங்களா?"

"இல்லே!" என்று பாபு தலையை அசைத்தான்.

"அப்ப நீயே இதெல்லாம் கத்துக்கிட்டியாக்கும்!"

பாஞ்சாலி முருங்கக்குச்சி ஒன்றை வாட்டமாக ஒடித்துக் கொண்டாள். "உள்ளதைச் சொல்லிடு; அந்த டிரைவருக்குத் தெரியுமில்லே இது!"

"தெரியும்!" என்று தலையை ஆட்டினான் பாபு.

'சுளீர்' என்று முழங்காலுக்குக் கீழே விழுந்தது அடி. "ஐயோ!"என்று அலறித் துடித்தான் பாபு.

"அவுரா உன்னை எடுத்து வளர்த்து, ஏழவு எடுத்தாரு இத்தினி நாளும்?" அடி மேலே மேலே விழுந்தது. அவன் அலறி அலறித் துடித்தான்.

அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் எட்ட நின்றே வேடிக்கை பார்த்தார்கள். அவிழ்ந்த தலையை அள்ளி முடிக்க இடைவெளி இல்லாமல் பாஞ்சாலி சுற்றிச் சுற்றி வந்து ஆட்டுக் குட்டியை அடிப்பதுபோல் அடித்தாள்.

"போடு! போடு சொல்றேன்!" என்று வித்தைபாடியைப் போலக் கொட்டுக் கொட்டிக் கொண்டிருந்தான் பாஞ்சாலியின் புருஷன் மீசைப் பக்கிரி.

குப்பன் இதை எதிர்பார்த்துத்தான் ஓடி வந்தான். அவனுக்கு அந்தத் தோட்டத்தில் இருந்த மதிப்பு, பாஞ்சாலிக்குத் தெரியும். அதனால் அவள் இன்னும் உரத்த குரலில், "வயசானவங்க தப்பு வழியைச் சொல்லிக் கொடுத்தா, பச்சைப் புள்ளே கொடுத்ததை வாங்கிக் கட்டிக்க வேண்டியதுதான்! உங்கப் பாத்தியம், இங்கப் பாத்தியம்; உள்ளதை வந்து சொல்ல மட்டும் பாத்தியமில்லியோ? இல்லே, கேக்கறேன். இத்தினி பேரு வேடிக்கை பாக்க வந்து நிக்கிறாங்களே, காயத்தைச் சொல்லட்டுமே!" என்றான்.

நிலவு வெளிச்சத்தில் நின்றவர்களுடைய நிழல்கள் பின்வாங்கிச் சென்றன.

குப்பன் பாபுவின்மீது அடி விழாதவாறு குறுக்கே வந்து நின்றுகொண்டு, "உள்ளதைச் சொன்னதுக்காக அடிக்கிறியா, அக்கா?" என்று கேட்டான்.

பாபுவுக்காகக் குப்பன் ஓடி வந்ததைப் போல, மனைவிக்காகப் பாய்ந்து கொண்டு முன்னால் வந்தான் மீசைக்காரப் பக்கிரி. வட்டமாக ஒதுங்கி நின்ற கூட்டம் சிறிது நெருங்கி வந்து நின்றது. பாபுவுக்குத் தன் வலிகூட மறைந்து விட்டது. அவன்

குப்பனுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நின்றான். தன் மேல் விழ வேண்டிய அடி அவன் மீது பட்டுவிடப் போகிறதே என்று அவனுக்குக் கவலையாக இருந்தது. பொன்னி வாய் திறவாமல் பெண்களிடையே நின்றாள்.

"வாயைக் கட்டி, வயித்தைக் கட்டி ஆளாக்கி வளர்ந்து விட்டா, வாங்கின சம்பளத்தைக் கொணர்ந்து கொடுக்க வலிக்குது! ஊரான் பேச்சு இனிக்குது... கை எரியப் பாடுபட்டவங்களுக்கு வயிறு எரிஞ்சா வழியிலே போறவங்களுக்கு என்ன கேடு!" என்று வளைய வந்து பாபுவை மறுபடியும் அடித்தான்.

"இதைக் கேளு அக்கா, என்னதான் நீ எடுத்து வந்து வளர்த்தாலும் கை நீட்டி அடிக்க உனக்கு 'ரைட்டு' இடையாது. போங்க அப்பாலே... மரியாதையாப் போகாமப்போனா அப்புறம் போலீசு வரைக்கும் போயிடும் கதை!" என்றான் குப்பன்.

பாஞ்சாலியை இவ்வளவு தூரம் எதிர்த்தவர்கள் அந்தத் தோட்டத்திலேயே யாரும் இல்லை. எதிர்க்க முயன்றவர்களை அவள் இலேசாக விட்டதுமில்லை. ஆனால் குப்பன் பேச்சைக் கேட்டதும் அவள் ஒரு கணம் மலைத்துத்தான் போனாள். மற்றவர்களும் திகைத்துப் போய் நின்றார்கள்.

"உஹ்ஹூம்!" என்று மீசையை முறுக்கிக் கொண்டு கனைத்தான் பக்கிரி. பாஞ்சாலிக்கு அது எடுப்பு எடுத்துக் கொடுத்தது போல் இருந்தது.

"கேட்டீங்களா, அநியாயத்தை. பாத்தீங்களா அநியாயத்தை! எம் ஊட்டுப் பிள்ளையை நான் கேட்டா, வழியோடே போறவங்களுக்கு வர வல்லடியைப் பாத்தீங்களா? வாங்கின பணத்தைக் கொடுக்காதேன்னு சொல்லிக் கொடுத்திட்டு, குறுக்கே வந்து நிக்கிறதைப் பாத்தீங்களா? பச்சைப் புள்ளைக்கு வேலை வாங்கிக் கொடுக்கிறாப்பலே கொடுத்திட்டு, வாங்கற பணத்தை நோகாமே பறிச்சிக்கிட்டுப் போறவங்க யாருன்னு பாத்தீங்களா?" என்று அந்தத் தோட்டமே எதிரொலிக்கத் தட்டுத் தடங்கல் இல்லாமல் அடுக்கினாள்.

பொன்னிக்கு ரோசத்தினால் நெஞ்சு விம்மியது. அங்கே கூடியிருந்தவர்களுக்கெல்லாம் இந்தப் பேச்சு அபாண்டமாகத் தோன்றியது. ஆயினும் எல்லாரும் வாயை மூடிக் கொண்டுதான் நின்றார்கள். ஆனால் பாபு மட்டும் முன்னால் ஓடி வந்து அவளுடைய குரலுக்கு மேலே, "இந்தா சின்னம்மா!" என்று கூவினான். "நோகாமல் பணத்தைப் பறிக்கிறவர் அவர் இல்லை; அது உனக்குத்தான் தெரியும். அஞ்சு ரூபாயை காணுகத்தான் கொடுக்காமல் என்

சிரிக்காதே!

"நூறு விதமாக வியாபாரத்தில் சம்பாதிக்கலாம், சார்!"

"101 என்று சொல்லுங்கள்!"

"அந்த ஒண்ணு என்ன?"

"அதுதான் நியாயமான முறையில் சம்பாதிப்பது, அதை நீங்கள் மறந்து போய் விட்டீர்களே!"

✽

காதலன் (கலியாணம் செய்து முடிந்தவுடன்): நான் உன்னிடம் உண்மையைச் சொல்லி விடுகிறேன்! என்னிடம் காலணாக்கூடச் சொத்து இல்லை!

காதலி: ஐயையோ! அப்ப நான் கேவலம் வெறும் காதலுக்காகவா உங்களைக் கலியாணம் செய்து கொண்டேன்?

✽

டாக்டர்: நீங்கள் ரொம்ப மனத்தைச் சங்கடப்படுத்திக் கொள்கிறீர்கள்! சங்கடப்படும்படியான விஷயம் எது வந்தாலும் அதைத் தூக்கி எறிந்துவிட்டு சந்தோஷமாக இருங்கள்......சரி......என் 'பில்' வந்ததா?

நோயாளி: வந்தது: தூக்கி எறிந்து விட்டு வந்து விட்டேன்!

✽

"அதோ போகிறாரே கிழிசல் சட்டை, அவர் பெரிய தியாகி சார்!"

"எதைத் தியாகம் பண்ணினார்?"

"இந்தத் தேர்தலில் பணத்தையெல்லாம் தியாகம் பண்ணிட்டார்!"

✽

"உங்களுடைய பாட்டுக்களைப் படிக்க முடியல்லே. உங்கள் கையெழுத்து மோசமாக இருக்கு. உங்களுக்கு டைப் அடிக்கத் தெரியுமா?"

"டைப் அடிக்கத் தெரிந்தா பாட்டு எழுதி வருவேனா சார்?"

✽

"என்னை இவன் மடையன் என்று கூப்பிட்டான்!"

"அதை ருசுப்படுத்தச் சாட்சி இருக்கா?"

"நானே இருக்கிறபோது சாட்சி எதற்கு?"

✽

"வருஷக் கணக்கிலே பல்வலி என்கிறீர்கள் ஒரு பல் வைத்தியரிடம் போகப்படாதோ?"

"என் பையன் பல் வைத்தியத்துக்குப் படிக்கிறான். இந்த வருஷத்தோடு முடிந்து விடுகிறது. செலவில்லாமல் முடிக்கக் காத்திருக்கேன்!"

னிடமே வைத்துக் கொண்டேன். இனிமேல் உனக்கு மாதம் பத்து ரூபாய் தான் என்னால் கொடுக்க முடியும். நீ எனக்குச் சோறு போடவும் வேண்டாம்; நான் இந்த வீட்டுக்கு இனி வரவும் இல்லை. நான் எங்கே யிருந்தாலும் முதல் தேதி வந்து அந்தப் பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு போய் விடு. அவ்வளவுதான் பேச்சு. கூச்சல் போட்டு ஊரைக் கூட்டினாலோ, நான் ஓடியே போய் விடுவேன். அப்புறம் இதுவும் கிடைக்காது!" என்று மிகவும் துணிச்சலாகக் கூறினான்.

பாஞ்சாலி அப்படியே இடிந்து போய் நின்றாள். அவளே அசந்து போய்விட்டதைக் கண்ட அவள் கணவனும் தலையைச் சொறிந்து கொண்டு நின்றான். அவனுக்கு எந்த விஷயமும் அவ்வளவு எளிதில் உறைப்பதில்லை.

பாபு தன் சட்டைப் பையிலிருந்த ஐந்து ஒரு ரூபாய் நோட்டுக்களை எடுத்து, பாஞ்சாலியின் எதிரே வீசி எறிந்துவிட்டு, "இந்த மாதம் தொலைந்து போகட்டும். இந்த ரூபாயையும் எடுத்துக் கொள். அடுத்த மாசத்திலிருந்து ரூபாய் பத்துக்கு மேல் ஒரு பைசாகூடத் தரமாட்டேன்!" என்று வீராவேசத்துடன் கூறிவிட்டு, சுற்றிலும் நின்றவர்களைக் கடந்து, குறுக்குப் பாதையில் இறங்கி நடந்தான்.

பாஞ்சாலிக்குப் பேச்சு எழும்புவதற்குப் பதிலாக இன்று அழுகைதான் பெரிதாக வெடித்துக் கொண்டு வந்தது. எதையோ வாரிக் கொடுத்து விட்டவளைப் போல அவள் இரு கைகளையும் தூக்கி விரித்துக் கொண்டு, 'ஓ'வெனக் குரலெடுத்து அழத் தொடங்கினாள்.

அவளுடைய அழுகையைத் தடுக்க மனமின்றி, அங்கே கூடியிருந்தவர்கள் மெதுவாக நழுவினார்கள். கடைசியாகப் பொன்னியும் குப்பனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் தங்கள் குடிசைக்குப் போய்ச் சேர்ந்த போது, வழக்கமாக வரும் நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது.

"சீக்கிரமா வேலை முடிஞ்சு போச்சுன்னு துள்ளிக் குதிச்சோமே, அடியோடு பொறுக்கல்லே போலிருக்கு!" என்றாள் பொன்னி தன் கணவனைப் பார்த்து.

"அட சரிதான் போயேன்! இப்ப அதுக்குப் பதிலாக வேறு ஒண்ணு ஒரு வழியாக முடிஞ்சு போச்சு!" என்று படுக்கையை உதறிக் கட்டாந்தரையில் போட்டான் குப்பன்.

"தரையைப் பெருக்குவதற்குள் அவ்வளவு அவசரமோ!"

அதற்குள் குப்பன் படுத்து விட்டான். பாபு இந்தச் சிறு வயதில் இத்தனை துணிச்சலாக நடந்து கொள்வான் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. நீதிபதியின் வீட்டுக்குப் போன பிறகு தோற்றத்தைப் போலவே அவனுடைய பேச்சிலும் மாறுதல் ஏற்பட்டிருந்ததை எண்ணி, அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

பாபு அந்த வீட்டுக்கு எடுபிடி வேலை செய்யத்தான் போயிருந்தான். ஆனால் இப்போது ஐந்து பிள்ளைகளுக்கு மேலே ஆறாவது பிள்ளையாக அவன் விளங்கினான். குப்பையில் கிடந்த மாணிக்கத்தைக் கண்ணாடிப் பெட்டியில் சேர்த்து விட்டதைப் போன்ற நிறைவுடன் அவன் கண் அயர்ந்தான்.

அத்தியாயம் 8

தந்தி பறந்தது

சுருட்டைத் தலையும் அழகான விழியும், எளிய உடையும் எழில் முகமும் கொண்ட அந்தச் சிறுவனைப் பார்த்து உஷா சிறிது நேரம் கண் கொட்டாமல் நின்று விட்டாள்.

பொசுக்கும் அந்த வெய்யிலில் சிறிய சைக்கிள் ஒன்றில் ஏறி வந்திருந்தான் அவன். கையிலே கண்ணைக் கூசவைக்கும் வெள்ளித் தூக்குக்கூடை. முத்துமுத்தாக அரும்பிய வேர்வையைத் துடைத்துக் கொண்டே குளிர்ச்சி பொருந்திய முன் ஹாலின் வாயிலில் வந்து அவன் தயங்கி நின்றான். வெய்யிலில் வந்ததால் அங்கே உஷா உட்கார்ந்திருப்பதை அவன் முதலில் கவனிக்கவில்லை.

உஷா, நட்டுவனார் சொக்குப் பிள்ளை சொல்லிக் கொடுத்துச் சென்றிருந்த பிடிகளைத் தனியே உட்கார்ந்து அபிநயம் பிடித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். பங்களாவின் கீழ்த்தளத்தில் வேறு யாரையுமே காணவில்லை. பின்கட்டுப் பக்கத்தில் மட்டும் அவ்வப்போது ஏதோ பாத்திரங்களின் ஓசை கேட்டது.

சைக்கிள் சத்தம் கேட்டதுமே உஷா எட்டிப் பார்த்தாள். பளிச்சென்று வெள்ளிக்கூடையின் வெளிச்சம் அவள் முகத்திலே அடித்தது. அந்தச் சிறுவன் வந்து தயங்கி நிற்கும் வரையில் அவள் வெளியில் வரவேயில்லை. பிறகு மெல்லிய குரலில், "யார் அது?" என்று கேட்டாள்.

"நான் ராமசுந்தரம். பங்களாவிலிருந்து வருகிறேன். அம்மா அனுப்பினாங்க. இதைக் கொடுத்துவிட்டு வரச்சொல்லி!" என்றான் அவன்.

"யாரு, மிஸஸ் மீனாட்சி அம்மாவா!"

"ஆமாம்."

"அதிலே என்ன இருக்கு?"

"தெரியாது."

"ரொம்பக் கனமாக இருக்கிறதோ?"

"அதெல்லாம் இல்லை."

"இதை யாரிடத்திலே கொடுக்கணும்?"

அவன் சட்டென்று மறுமொழி கூறாமல் சிறிது தயங்கினான். பிறகு மெதுவாகப் புன்னகை செய்துவிட்டு, "இங்கே இருப்பவர்கள் யாரிடம் கொடுத்தாலும் ஒன்றுதானே?" என்று கேட்டான்.


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

"அது எனக்கு எப்படித் தெரியும்!"

"அப்படியானால் உங்க அம்மாவிடமே இதைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டுப் போகிறேன்!" என்று உள்ளே அடியெடுத்து வைத்தான் அவன்.

"இதோ, இதுதான் மெத்தைக்குப் போகும் வழி! அதோ, அதுதான் பின் கட்டுக்குப் போகும் வழி!" என்று கம்பளம் பரத்திய படிக்கட்டுக்களையும், பின்னல் துணி தொங்கிய உள் வாயிலையும் காட்டினாள் உஷா.

"ஆனால் அம்மா எங்கே இருக்காங்க?"

"அதைச் சொல்ல முடியாது. மெத்தையிலும் இருக்கலாம்; உள்ளேயும் இருக்கலாம். மெத்தை வழியாக உள்ளே வருவதற்கு ஒரு வழி இருக்கிறது."

உஷா அதைக் குறும்புத்தனமாகச் சொன்னாளா, வெகுளித்தனமாகச் சொன்னாளா என்பது தெரியவில்லை. அவள் சுட்டிக் காட்டிய வழியாகச் சென்று, படியேறினான் அவன். படிக்கட்டில் மடங்கித் திரும்பும் வரையில் அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற உஷா கன்னத்தைச் சுளித்துக்கொண்டு, கேலியாகச் சிரித்தாள். பயத்தையும் தயக்கத்தையும் காட்டும் பாவனையாகக் குனிந்து, நெளிந்து, எதிரே இருந்த கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்துக்கொண்டாள்.

"பேசத் தயங்குவதேன், பைங்கிளியே—என்னிடம் பேசத் தயங்குவதேன்!......" என்று ஏதோ ஒரு பாட்டின் அடிகளை முணுமுணுத்தவாறே அவள் அண்ணாந்து பார்த்தாள்.

'அட ஆம்பிளைப் போக்கிரி!'—மாடிக்குப் போவது போல் போய்விட்டு, மறுபடியும் திரும்பி வந்து எட்டியல்லவா அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்!

உஷாவின் முகம் கையிலே வைத்திருந்த புஷ்பம் போல ஆகி விட்டது.

"யாரோ என்னைக் கூப்பிட்டது போலிருந்ததே!"

உஷா சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "இங்கே யாரும் இல்லையே!" என்றாள்.

"மேலே கதவு சாத்தியிருக்கிறதே!"

"அங்கேயே பக்கத்தில் இன்னொரு வழி இருக்கு!"

வெள்ளித் தூக்குக் கூடையோடு அவன் மறுபடியும் சென்றான். உதட்டைச் சேர்த்துக் கோணை இழுத்துப் பழித்து விட்டு, அவள் சோபாவில் போய்த் தொப்பென்று உட்கார்ந்தாள்.

"மாடிக்குப் போகிறதுக்கு ஐயாவுக்கு யோசனை; இங்கு யாரோ கூப்பிட்டது போல இருந்ததாம்! உம்!" என்று அழைக்கும் மின்சார மணியை எழுந்து சென்று அழுத்தினாள்.

மிஸஸ் மீனாட்சியின் கடைசிப் பிள்ளை ரமேஷை அவள் பார்த்திருக்கிறாள். கிட்டத்தட்ட அவன் வயதுதான் இவனுக்கும் இருக்கும். ஆனால் இவன் அவனுக்கு அடுத்த அண்ணனாக இருப்பானோ? மீனாட்சியம்மாளின் பிள்ளை தூக்குக் கூடையை எடுத்துக் கொண்டு வருவானா, எங்கேயாவது? அப்படியானால் இவன் யாராக இருப்பான் என்று அவள் தனக்குத்தானே யோசனை செய்து கொண்டிருந்தாள். கை மின்சார மணியை அழுத்திக் கொண்டேயிருந்தது. மாடிக்குச் சென்றவன் திரும்பி வருவதற்குள் வேறு எங்கேயாவது போய்விட வேண்டும் என்று அவள் எண்ணிக் கொண்டாள். தன்னுடைய விஷமத்தைப் பார்த்து விட்ட அவனைப் பார்க்கவே வெட்கமாக இருக்கும் போலிருந்தது.

சிறிது நேரம் பொறுத்து, "கூப்பிட்டியா, உஷா?" என்று ஓட்டமாய் வந்தாள் பொன்னி.

"யாரோ ஜட்ஜ் ஐயா வீட்டிலிருந்து அம்மாவைப் பார்க்க வந்தானே!" என்றாள் உஷா.

பொன்னி சிரித்துக் கொண்டே, "பார்த்தேன், பார்த்தேன்; அவனைத்தான் நீ சித்த நேரத்துக்குள்ளே இல்லாத கேலியெல்லாம் செய்திட்டியாமே!" என்றாள்.

"அதுக்குள்ளே அதை அவன் எப்படிச் சொன்னான்?" உஷாவுக்கு அதுதான் இன்னும் ஆச்சரியமாக இருந்தது.

"பாபுவை நீ பின்னே என்னன்னு நெனச்சே?"

"யார் அந்தப் பாபு? மீனாட்சியம்மாளின் பிள்ளையா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. எங்களுக்குத் தெரிந்த பிள்ளை, எங்க வீட்டுக்காரருதான் அவனைக் கொண்டு போய் அங்கே வேலையிலே சேர்த்துவிட்டாரு!"

"என்ன வேலை அங்கே?"

"அங்கே என்ன பிரமாத வேலை. இதோ இப்ப வந்தானே, இதைப் போலத்தான். சொன்ன வேலையைச் செய்துட்டு, வீட்டுப் பிள்ளை பாட்டமா இருக்கிற வேலைதான்! சாப்பாடு போட்டு, பதினைஞ்சு ரூபாய் கொடுக்கிறாங்க! துணியோ மணியோ எல்லாம் அவங்க கொடுக்கிறதுதான்!"

உஷா மழலை மாறாத குரலில், "அவனைப் பார்த்தால் வேலைக்காரன்மாதிரி தென்படவில்லையே!" என்றாள் எங்கேயோ பார்த்துக் கொண்டு.

"வேலைக்காரன்னா பின்னே சிட்டா எழுதி ஒட்டியிருப்பாங்க? அவுங்களும் மினுக்காத்தானே இருப்பாங்க! ஊட்டம் இருந்தா எல்லாரும் கல்லா ஆயிடுவாங்க. இன்னும் ரெண்டு வருசத்திலே பாரேன், அவங்க ஐயா வீட்டுப் பிள்ளைங்களுக்கு மேலே ஆயிடுவான். இல்லையான்னு!" என்று சொன்னாள் பொன்னி.

"உஷாவுக்கு ரமேஷின் பெண் வேஷம்தான் கண்முன் வந்து நின்றது. கலகலவென்று கை கொட்டிச் சிரித்தபடியே அவள், "இப்பவே அப்படித்தானே இருக்கிறான்!" என்றாள்.

"பாக்கறதுக்கு மட்டுமில்லே, உஷா! படிப்பிலேகூட ரமேஷுக்கு மேலே தானும். டியூஷன் வாத்தியார்தான் சொல்றாராமே. பக்கத்துலே உட்கார்ந்து பாத்துப் பாத்து ரமேஷ் படிக்கிறதையெல்லாம் இவனும் படிச்சுப்புடுவானும்!" என்றாள் பொன்னி. அவள் முகத்தில் அதிசயம் நெளியோடியது.

உஷாவுக்குச் சட்டென்று அசுவாரஸ்யம் தட்டியது. அவள் பொறுமையின்றிச் சோபாவை விட்டு எழுந்திருந்து, "ஆமாம்! ஜட்ஜ் ஐயா வீட்டிலேயிருந்து என்ன வந்திருக்கிறது?" என்றாள்.

பொன்னி நாணம் கலந்த புன்னகையுடன், "திரட்டுப் பால்" என்றாள். "நம்ப அம்மாவுக்கு மசக்கையாயிருக்கும்னு வீட்டிலே செய்து கொடுத்தனுப்பியிருப்பாங்க!"

உஷாவின் உற்சாகம் பறந்து விட்டது. பொன்னியின் அந்தப் புன்னகையைக் கண்டாலே அவளுக்குப் பிடிக்கவேயில்லை. அது எப்போதும் வருகிற புன்னகையைப் போல இருப்பதில்லை. அதிலே வெட்கம், ஏளனம் எல்லாம் கலந்திருந்தன. பொன்னி உபயோகித்த சில புதுச் சொற்களுக்கு அவளுக்கு இப்போது கொஞ்சம் பொருள் விளங்காமல் போகவில்லை. அவளுக்குக்கூட எப்போதாவது அருமையாக ஏதாவது சாப்பிட வேண்டும் என்று தோன்றுவதில்லையா? அதைப் போலத்தான் அம்மாவுக்கும் இருக்கும் போலிருக்கிறது என்று உஷா மனத்துக்குள் எண்ணிக் கொண்டாள்.

"ஜட்ஜ் ஐயா வீட்டு ஆளுக்கு இதெல்லாம் செய்து நல்ல பழக்கம். கொஞ்சம் கொண்டு வரட்டுமா? தின்னுதான் பாரேன்!" என்றாள் பொன்னி.

"எனக்கு ஒண்ணும் வேண்டாம் போ! வேணுமானால் நீ; தின்னு பாரு. போ!" என்று எழுந்து சென்றாள் உஷா.

பக்கத்து அறையிலிருந்த சோபாவில் சாய்ந்து, 'போர்ட்டிகோ'வில் பாபு நிறுத்தி வைத்திருந்த சைக்கிளையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் உயரத்துக்கேற்ற அந்த வண்டி சற்றைக்கெல்லாம் அசையத் தொடங்கியது. அடுத்த கணமே அது மெல்ல நகர்ந்தது; திரும்பியது. மின் வெட்டும் நேரத்துக்குள்ளே அதன் மீது பாய்ந்தேறிப் புறப்பட்டு விட்டான் பாபு.

அவளுக்கு எதிலும் உற்சாகம் இல்லை. இந்தப் பதினைந்து இருபது நாட்களில் எல்லாமே அடியோடு மாறி விட்டது போல் தோன்றியது.

"கிணிங்...கிணிங்..."

சைக்கிள் மணிச் சத்தம் கேட்டதுமே அவள் ஜன்னல் வழியாக ஆவலோடு எட்டிப் பார்த்தாள்.

தந்திச் சேவகன்!

பொன்னி ஓடிச் சென்று அந்தச் சேவகன் கொடுத்த உறையையும் காகிதத்தையும் உஷாவிடம் எடுத்து வந்து கொடுத்தாள். அதைக் கையெழுத்திட்டுக் கொடுத்து விட்டு, உஷா உறையைக் கிழித்தாள். கான்வென்டில் படிக்கிறவளுக்கு இதைப் படிப்பது என்ன பெரிய வித்தையா!


"மாலையில் வந்து இரவே சிங்கப்பூருக்குப் புறப்படுகிறேன்—கண்ணபிரான்."

உஷா அதை அலட்சியமாகத் தூக்கி எறிந்து விட்டு, "கண்ணபிரானும், மூக்கபிரானும்! யார் வந்தால் என்ன, யார் போனால் என்ன?" என்று முணுமுணுத்துக் கொண்டே எழுந்து சென்றாள்.

பொன்னி உறையை மட்டும் பாரிஸ்டர் மேஜை மீது கொண்டு வைப்பப் பறக்காமல் வைத்தாள். ஆனால் உள்ளேயிருந்த தந்தியோ கேட்பாரற்றுப் பறந்து, குப்பையோடு போய்ச் சேர்ந்தது. (தொடரும்)



தில்லி சர்வகலாசாலை நூல்நிலையத்தைச் சேர்ந்த திரு கே. மகாலிங்கம் ஒவ்வொரு வருஷமும் நூல்நிலையக் கலையில் தேர்ந்த மாணவருக்குத் தங்கப் பதக்கப் பரிசு வழங்குவதற்காக நாலாயிரம் ரூபாய் தில்லி சர்வகலாசாலைக்கு நன்கொடை வழங்கியுள்ளார்.



அத்தியாயம் 6

பொல்லாத மழைப் புயல்

சக்க சேனாபதி வந்து சேதியைக் கேட்டதும் குமார பாண்டியனின் மனத்தில் உணர்ச்சியலைகள் மேலெழுந்து பொங்கின. 'தமனன் தோட்டத் துறையில் ஈழநாட்டுக் கடற்படை வீரர்களால் கைப்பற்றப்பட்டிருக்கும் கப்பல் யாருடையதாக இருக்கும்? அதில் வந்திருப்பவர்கள் யாரா யிருப்பார்கள்?' என்ற சந்தேகம் அவன் நினைவுகளை வளர்த்தது.

ஆனால் சக்க சேனாபதி அந்த நினைவுகளை வளர விடவில்லை. "நாளைக்கு அதிகாலையில் நாமிருவருமே தமனன் தோட்டத்துக்குப் போய்ப் பார்க்கலாம். நீங்கள் செம்பவழத்தீவில் கண்ட எதிரிகளின் கப்பலாக இருந்தால் அதிலிருப்பவர்களைக் கீழிறக்கி விசாரிக்கிற முறைப்படி விசாரிப்போம்" என்று கூறினார் அவர். அப்போது அவர்களுடன் அங்கிருந்த கனகமாலை, "சேனாபதித் தாத்தா! நானும் நாளைக்கு உங்களோடு தமனன் தோட்டத்துக்கு வரப் போகிறேன். நீங்கள் மறுப்புச் சொல்லாமல் என்னையும் கூட்டிக்கொண்டு போக வேண்டும்!" என்று பிடிவாதம் பிடித்தாள்.

"ஐயோ, நீ கூட வருகிற சந்தர்ப்பமில்லை அம்மா இது. நாங்கள் ஒரு முக்கியமான காரியமாகப் போய்விட்டுத் திரும்பி விடுவோம்" என்று சேனாபதி அந்தப் பெண்ணின் விருப்பத்தை மறுத்தார். பின்பு சக்க சேனாபதியும், குமார பாண்டியனும் காசிப மன்னரிடம் போய்ச் சொல்லிக் கொண்டார்கள்.

"இப்படி ஒரு கப்பல் உங்களை இரகசியமாகத் தொடர்ந்து பின்பற்றி வந்ததென்ற விவரத்தை இங்கு வந்ததுமே நீங்கள் என்னிடம் சொல்லியிருக்கலாமே! சொல்லாததனாலும் பரவாயில்லை. இப்போது உடனே போய் அந்தக் கப்பலைக் கவனியுங்கள். அதிலிருப்பவர்கள் குமார பாண்டியனின் எதிரிகள் என்று சந்தேகப்படுகிறதற்கு ஏற்றவர்களாயிருந்தால் அவர்களைச் சிறைப்பிடித்து இங்கேயே கொண்டு வாருங்கள்!" என்று கூறி அவர்களுக்கு விடை கொடுத்தார் ஈழநாட்டு மன்னர். பயணம் தொடங்குவதற்கு முன் நினைவாகத் தன் வலம்புரிச் சங்கை உடனெடுத்துக் கொண்டான் இராசசிம்மன்.

வைகறை மெல்லிருள் விலகுவதற்குமுன் அவர்கள் இருவரும் பொலன்னறுவையிலிருந்து புறப்பட்டார்கள். என்றுமில்லாதபடி அவர்களுக்கென்றே வாய்த்தது போல் அன்றைக்கு இயற்கைச் சூழ்நிலை மிக அற்புதமாக இருந்தது. மெல்லச் சுழன்று வீசும் குளிர்ந்த காற்றுடனே ஊசி ஒழுகுவது போல் சாரல் பெய்து கொண்டிருந்தது. வானம் பிறந்த மேனியாய்த் தனது நீல நிறத்தைத் திறந்து காட்டிக் கொண்டிராதபடி மேகச் சுருள்கள் திட்டுத் திட்டாக அடைந்திருந்தன. எல்லோருடைய கவனத்தையும் கவரத் தக்க மிகப் பெரிய காரியமொன்றைத் திடீரென்று செய்வதற்கு இருக்கிற மனிதன் மாதிரி இயற்கை அமைந்து அடங்கித் தன் ஆற்றலை ஒன்றுபடுத்திக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

"இன்றைக்கு மாலைக்குள் பெரு மழை வரலாம் போலிருக்கிறது!" என்று குதிரையை வேகமாகச் செலுத்திக் கொண்டே சொன்னார் சக்க சேனாபதி. இராசசிம்மன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். ஒரே மேகக் குழப்பம். அத்தனையும் கனிந்து சூல் கொண்ட கருமேகங்கள்.

பொலன்னறுவையிலிருந்து நேர் மேற்கே சென்றால் தமனன் தோட்டம் தான். அனுராதபுரத்துக்குச் செல்லாமல் சிம்மகிரி, விசிதபுரம் ஆகிய ஊர்களைக் கடந்து நேர் வழியாகவே பயணம் செய்வதென்று முடிவு செய்து கொண்டார்கள் அவர்கள். எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ, அவ்வளவு வேக மிகுதி அவர்களுடைய குதிரைப் பயணத்தில் இருந்தது. இருவரும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு செலுத்துவதுபோல் தத்தம் குதிரைகளைச் செலுத்தினர்.

"சக்கசேனாபதி! எனக்கென்னவோ நான் இங்கே அதிக நாட்கள் தங்கியிருக்க முடியுமென்று நம்பிக்கை ஏற்படவில்லை. எந்த விநாடியிலும் என்னைத் தேடிக் கொண்டு தென்பாண்டி நாட்டிலிருந்து ஆட்கள் வரலாம். விரைவாக நான் திரும்பிச் செல்ல வேண்டியிருக்குமென்று என் மனத்தில் ஒரு தோற்றம் ஏற்படுகிறது" என்று போகும்போது இருந்தாற்போலிருந்து அவரிடம் கூறினான் இராசசிம்மன்.

"போர் ஏற்பட்டாலொழிய அவ்வளவு அவசரமாக உங்களைத் தேடிக்கொண்டு யாரும் வரப்போவதில்லை. தவிர, உங்களைத் தேடி வருவதற்கு நீங்கள் இங்கே தான் வந்திருக்கிறீர்கள் என்று யாருக்குத் தெரியும்? நீங்களாக எதையாவது மனத்தில் நினைத்துப் பதற்றமடையாதீர்கள், இளவரசே!" என்று அவர் அவனுக்குப் பதில் சொன்னார்.

அதைக் கேட்டு இராசசிம்மன் சிரித்தான். "காணாமல் போன நான் எங்கே சென்றிருப்பேன் என்று அனுமானிக்க முடியாத அளவுக்குத் தென் பாண்டி நாட்டு மகாமண்டலேசுவரரும், என் அன்னையும், தளபதியும் சிந்தனை குன்றியவர்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்



போலிருக்கிறது. நான் அங்கில்லையென்றால் இங்கேதான் இருப்பேனென்று அவர்கள் மிக எளிதாகத் தெரிந்து கொள்ளுவார்கள்'' என்று இராசசிம்மன் கூறியபோது சக்கசேனாபதி அதைக் கவனித்துக் காதில் வாங்கிக் கொள்ளாமல் கலக்கம் நிறைந்த பார்வையால் வானவெளியை நிமிர்ந்து பார்த்தார். ''இன்றைக்கு நம்முடைய பயணம் நடுவழியில் எங்கேயாவது தடைப்படத்தான் போகிறது. வானம் இருக்கிற சீரைப் பார்த்தால் தன் ஆத்திரத்தையெல்லாம் கொட்டித் தீர்த்துக் கொள்ளப் போகிற மாதிரி இருக்கிறது'' என்று கவலை நிறைந்த குரலில் கூறினார். ''மழை வருவதாயிருந்தால் அதைத் தடுப்பதற்கு நாம் யார்? ஈழ நாட்டுப் படைத் தலைவரும், பாண்டி நாட்டு இளவரசனும் பயணம் செய்கிறார்களென்றால் மழைகூட அவர்களுக்குப் பயப்பட வேண்டுமென்கிற அவசியம் உண்டா?'' என்று சற்றே வேடிக்கையாகச் சக்கசேனாபதியை நோக்கிச் சொன்னான் குமார பாண்டியன். கவலை நிழல் படியத் தொடங்கியிருந்த அவர் முகத்தில் அவனுடைய வேடிக்கைப் பேச்சு சிரிப்பையோ, மலர்ச்சியையோ உண்டாக்கவில்லை.

சூரிய ஒளியே உறைக்காத மேகமூட்டம் உச்சிப் போது கழிந்து சில நாழிகைகளான பின்னும் நீடித்தது. அதனால் அந்திக்கு இன்னும் நெடுநேரம் மீதமிருந்தபோதும் அப்போதே இருளத் தொடங்கி விட்டது போன்ற சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இரவு நேரத்தில் தங்குவதற்குப் பாதுகாப்பான இடத்தை அடைந்துவிட்டால் மழையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியிராதென்று சக்கசேனாபதி நினைத்திருந்தார்.

ஆனால் மழை அவருடைய நினைவை முந்திக் கொண்டு வந்து விட்டது. தனி மழையாக வரவில்லை. பயங்கரமான காற்றும், மழையும் ஒன்று சேர்ந்து கொண்டன. அந்தச் சமயத்தில் நடுக்காட்டில் கடல் போலப் பரந்து தேங்கிக் கிடந்த ஒரு ஏரியை ஒட்டி அவர்கள் சென்று கொண்டிருந்



தார்கள். தண்ணீரைப் பாளம் பாளமாக யாரோ சீவி எறிவதுபோல் அலைமோதியது ஏரியில். நான்கு புறமும் காது செவிடுபடுகிறாற் போல் ஒரே பிரளயப் பேரொலியில் மூழ்கிவிட்டனவா? காற்றுக் கடவுளுக்கும், மழைக் கடவுளுக்கும் போர்மூண்டு விட்டதா? இடி ஓசையும், காட்டு மரங்கள் முறிந்து விழும் ஓசையும், காற்றொலியிலும் மழை ஒலியிலும் கலந்து சிறிதாகிஒலித்தன. ஊழிக் காற்று, ஊழி மழை என்றெல்லாம் சொல்லுவார்களே அவையிரண்டும் ஒரே சமயத்தில் ஊழி எல்லையைக் காண ஆசைப்பட்டு விட்டவை போலக் கிளர்ந்து எழுந்து விட்டன என்று சொல்லத் தக்க நிலை.

ஏரியின் இக்கரையில் அவர்களுடைய வழிமேல் ஒரு பௌத்தப் பள்ளியும், அருகில் உயரமான பெரிய புத்தர் சிலையும் தெரிந்தன.

"இளவரசே! வேறு வழியில்லை. இங்கே தங்கிவிட வேண்டியதுதான். இந்த இடம் ஏரி நீர்ப்பரப்பைக் காட்டிலும் மேட்டுப்பாங்கானது. இதே வழி போகப் போகத் தாழ்ந்து பள்ளமானநிலத்தில் செல்கிறது. இந்தக் காற்றிலும், மழையிலும் எப்படி ஆகுமோ? இப்படியே தங்குவதுதான் நல்லது" என்றார் சக்கசேனபதி.

இந்தத் தீர்மானத்துக்கு வருவதற்குள் அவர்கள் இருவருடைய உடலும் தெப்பமாக நனைந்து விட்டன. இருவரும் தத்தம் குதிரைகளை விரட்டிக்கொண்டு போய் அந்தப் பௌத்தப்பள்ளிக்கு முன்பாக நிறுத்தினார்கள். ஆள் பழக்கமில்லாத காரணத்தால் கட்டடம் இருண்டு பாழடைந்திருந்தது.

"மழைக்கும், புயலுக்கும், பயந்து கொண்டு நடு வழியில் தங்கி நாம் ஆற அமரப் போய்ச் சேருவதற்குள் தமனன் தோட்டத்தில் பிடிபட்ட கப்பலும் ஆட்களும் தப்பிப் போனால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை" என்று சொல்லிக் கொண்டே குதிரையிலிருந்து இறங்கிக் கட்டடத்துக்குள் நுழைந்தான் குமாரபாண்டியன்.

"அப்படித் தப்பவிட்டு விடுவதற்கு ஈழநாட்டுக் கடற்படை வீரர்கள் முட்டாள்கள் அல்லர்" என்று பதில் கூறிக் கொண்டே அவனைப் பின்பற்றி உள்ளே சென்றார் சக்கசேனபதி.

ஈர ஆடையோடு சோர்ந்து போய் ஓரிடத்தில் உட்காருவதற்காகக் குனிந்த குமாரபாண்டியன் ஒருவிதமாகப் பயங் கலந்த கூப்பாட்டோடு அந்த இடத்திலிருந்து துள்ளித் தாவினான்.

"என்ன? ஏன் இவ்வளவு பயம்?" என்று அந்த இடத்தில் சிறிது குனிந்து பார்த்த சக்கசேனபதியும் முதலில் மலைத்துப் பின் வாங்கினார். அடுத்த கணம் துணிவாக முன் சென்று கயிற்றைப் புரட்டி இழுப்பதுபோல் எதையோ சரசரவென்று பிடித்து இழுத்தார். ஓங்கிச் சுழற்றி வெளியே வீசி எறிந்தார்.

படபட வென்று தெளிந்து கடுமை மின்னும் அந்தப் பொருள் போய் விழுந்த இடத்தில் சீறி எழுந்து படத்தைத் தூக்கியது! அப்பப்பா; எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது? அவர் வீசி எறிந்தது ஒரு கருநாகம்!

"சக்கசேனபதி! உங்களுடைய துணிவு ஈடு சொல்ல முடியாதது. எனக்கானால் நீங்கள் அதன் வாலைப் பிடித்து இழுத்த போது குடல் நடுங்கியது" என்று அவரைப் பார்த்து வியந்து கூறினான் இராசசிம்மன்.

ஓங்கிய படத்தைத் தரையில் அடித்து விட்டுப் புதரில் புகுந்து மறைந்தது அது.

"ஐயோ! வேண்டவே வேண்டாம். மழையில் நனைந்து துன்புற்றாலும் சரி. மேலே பயணத்தைத் தொடரலாம். இந்தக் கட்டடத்தில் தங்கிப் பாம்புக் கடிபட வேண்டாம். அந்தக் கருநாகத்தைப் பார்த்ததிலிருந்து எனக்கு இந்த மண்டபம் முழுதிலும் பாம்பு இருக்கும்போலத் தோன்றுகிறது" என்றான் குமாரபாண்டியன்.

"அதெல்லாம் வீண் பிரமை. இப்போதுள்ள சூழ்நிலையில் இந்த இடத்தை விட்டு நகர்வது நடவாத காரியம்" என்று சக்கசேனபதி உறுதியாகக் கூறினார். குமாரபாண்டியன் அந்த இடத்தில் உட்காருவதற்கே பயமும் அருவருப்பும் அடைந்தவனைப் போல் ஒதுங்கி நின்றான்.

ஜம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு

மாதாந்திர விஜயம்

எமது வாடிக்கையாளர்களின் நலனையும் சௌகரியத்தையும் முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். அப்பொழுது அவரை நேரில் கலந்து ஆலோசிக்கலாம்.

இடம்	தேதி	நேரம்	விலாசம்
கரூர்	1	9 to 11 காலை	சென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்
சேலம்	2	9 to 11 காலை 3 to 5 மாலை	சாந்திநிகேதன் (கோயமுத்தூர் வாட்ச், பிராஞ்சு)
ஈரோடு	3	9 to 11 காலை	நவபவனம் வாட்ஜிங் (கோஷா ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
திருப்பூர்	3	3 to 5 மாலை	ஆர். எஸ். வாசன் & கோ. கெமிஸ்ட்ஸ்
கோயமுத்தூர்	4	9 to 11 காலை 3 to 5 மாலை	சல்வார் & கோ., (நாடார் மான்ஷன்) 189. ரங்கைய கவுடர் தெரு
பாலக்காடு	5	8-30 to 11-30 காலை	நாதம் & கோ., மெடிகல் ஷாப்
பொள்ளாச்சி	5	2-30 to 3-30 மாலை	எல். எஸ். மணி & கோ., மெடிகல் ஷாப்
உடுமலைப்பேட்டை	5	4-30 to 5-30 மாலை	ராஜேந்திரா & கோ. மெடிகல் ஷாப்
பழனி	5	6-30to7-30 இரவு	ஷண்முகானந்த பவன், ரயில்வே பீடர்ஸ்ரோடு
திண்டுக்கல்	6	9 to 11 காலை	வி. ஆறுமுகம் பிள்ளை & சன்ஸ் ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்
மதுரை	7, 8 & 23	9 to 11 காலை 3 to 5 மாலை	டி. என். வி. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ் கெமிஸ்ட்ஸ் வடக்கு சித்திரை வீதி
விருதுநகர்	9	8 to 9 காலை	சரவணமுத்துபிள்ளை சத்திரம், மதுரை ரோடு
கோயில்பட்டி	9	10-30 to 11-30 காலை	தனலக்ஷ்மி மெடிகல் மார்ட். கெமிஸ்ட்ஸ்
தூத்துக்குடி	9	3 to 4 மாலை	தூத்துக்குடி மெடிகல் ஸ்டோர்ஸ்
திருநெல்வேலி	10	9 to 11 காலை 3 to 5 மாலை	சந்திரவிலாஸ் ஹோட்டல் திருநெல்வேலி ஜங்ஷன்
நாகர்கோயில்	11	9-30 to 11-30 காலை	என். திரவியம் கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ்
ஸ்ரீவைகுண்டம்	11	4 to 5 மாலை	எஸ். கோமதிநாயகம் பிள்ளை, மெடிகல் ஷாப்
அம்பாசமுத்திரம்	12	9 to 11 காலை	கோமதி மெடிகல் ஸ்டோர்ஸ் கெமிஸ்ட்ஸ்
தென்காசி	12	3 to 5 மாலை	எஸ். கிருஷ்ணா & கோ. மெடிகல் ஸ்டோர்ஸ்
திருவனந்தபுரம்	13	9 to 11 காலை 3 to 5 மாலை	எம். வி. கணபதி ஐயர் & சன்ஸ், அட்டக்குளங்கரை
ராஜபாளையம்	14	9 to 11 காலை	வி. எஸ். திருப்பதி ராஜா, ஜெனரல் மர்ச்சண்ட்
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	12-30 to 1-30	டி. பி. வி. டி. ஈ. சீதாராமகோனார் & கோ. பித்தளை பாத்திரம் வியாபாரிகள்
சிவகங்கை	14	4 to 5 காலை	மீனாட்சி & கம்பெனி. கெமிஸ்ட்ஸ்
காரைக்குடி	15	9 to 11 காலை 3 to 5 மாலை	ஏ. வி. & சன்ஸ் டிராவலர்ஸ் ரெஸ்ட் ஹவுஸ்
தேவகோட்டை	16	9 to 11 காலை	ஸ்ரீ மீனாட்சி ஸ்டோர்ஸ்
புதுக்கோட்டை	16	3 to 5 மாலை	வசந்தா வாட்ச்

●

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

சென்னை - திருச்சிராப்பள்ளி - கும்பகோணம்

"அதோ; இன்னும், யாரோ நமக்குத் துணையாக இதே கட்டடத்தில் தங்குவதற்கு ஓடி வருகிறார், பாருங்கள்" என்று வெளியே கையை நீட்டிக் காண்பித்தார் சக்க சேனாபதி. நடுத்தர வயதும் மதிக்கத் தக்க தோற்றமுள்ள புத்தபிட்சு ஒருவர் ஓடி வந்து கட்டடத்துக்குள் நுழைந்தார்.

"அடிகளே! இந்த மழையிலும், காற்றிலும் ஏன் இப்படித் துன்பப்பட்டுக் கொண்டு ஓடி வருகிறீர்கள்? ஏரிக்கு அக்கரையில் இருக்கிற தவப் பள்ளியிலேயே தங்கியிருக்கலாமே! இப்போது ஏரிக் கரையோரமாக நடந்து வழியைக் கடப்பதே பயப்பட வேண்டிய செய்தியாயிற்றே?"—என்று அனுதாபத்தோடு வந்தவரை விசாரித்தார் சக்க சேனாபதி.

மொட்டைத் தலையில் வழிந்த தண்ணீரைத் துடைத்துக் கொண்டே பதில் சொன்னார் பிட்சு:— "அப்படித்தான் செய்ய நினைத்தேன் ஐயா! யாரோ ஒரு சிறு பெண் பிள்ளைக்கு இரக்கப்பட்டுப் போக இந்தக் கதிக்கு வர நேர்ந்தது. நிமிர நிமிரத் தண்ணீரோடு அலை பாய்ந்து கொண்டிருக்கிற ஏரிக் கரையில் சிறு வயதுப் பெண் ஒருத்தி வழி தெரியாமல் தயங்கி நின்று கொண்டிருந்தாள். எனக்குப் பரிதாபமாக இருந்தது. 'எங்கே அம்மா போக வேண்டும்?'-என்று கேட்டேன். "எனக்கு இந்த நாட்டு அரசரின் அரண்மனைக்குப் போக வேண்டும்"—என்று துணிச்சலோடு சொன்னாள் அவள். நட்டக்காட்டில் நின்று கொண்டு அரண்மனைக்குப் போக ஆசைப்படும் அந்தப் பெண் பைத்தியமோ என்று எனக்குத் தோன்றியது.

"மழையும் காற்றுமாக வருகிறது. பக்கத்திலிருக்கிற தவப்பள்ளியில் போய்த் தங்கி விட்டுக் காலையில் அரண்மனைக்குப் புறப்படு அம்மா! நானும் உன்னோடுகூட அரண்மனைக்கு வருகிறேன்" -என்றேன். அந்தப் பாவிப் பெண் என்னைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டு காட்டுப் பாதையில் மனம் போன போக்கில் நடக்க ஆரம்பித்தாள். அவளுக்கு ஏதாவது ஆபத்து வந்து விடக் கூடாதே என்று அவளையுமறியாமல் பின் தொடர்ந்தேன். நான் பின்பற்றுவதை அவள் கண்டு கொண்டாள். என்னைப் பற்றி வேறு விதமாக நினைத்துக் கொண்டு எங்கோ ஓடி மறைந்து விட்டாள். இவ்வளவு தொலைவு வந்த பின் அக்கரையிலுள்ள தவப் பள்ளிக்குப் போக வேண்டாமென்றுதான் இங்கே ஒண்டிக் கொள்ள வந்தேன்"—என்று அவர் கூறி முடித்ததும், "ஐயோ பாவம்! அந்தப் பெண் இந்தப் பக்கமாக வந்தால் நாம் மூன்று பேருமாகச் சமாதானப் படுத்தி யாரென்று விசாரிக்கலாமே?" – என்று அனுதாபத்தோடு சொன்னார்கள் சக்க சேனாபதியும் இராசசிம்மனும்.

"அவளைப் பார்த்தால் வெகு தொலைவிலிருந்து வந்த வேற்று நாட்டுப் பெண் மாதிரி இருந்தது. அதனால்தான் நான் உதவி செய்யப் போனேன். அந்த முரட்டுத் துணிச்சல்காரி என் மேலேயே சந்தேகப்பட்டு விட்டாள்" — என்று கூறிக் கொண்டே இருண்ட மூலை ஒன்றில் சாய்ந்து கொள்ளப் போனார் புத்த பிட்சு.

கருநாகம் இருந்த செய்தியைச் சொல்லி அவரை எச்சரித்தார்கள் அவர்கள். பிட்சு சிரித்தார். "நாமாக ஏற்படுத்திக் கொள்கிற பயங்கள் தான் வாழ்க்கையின் துன்பத்தை வளர்ப்பன. தூங்கும்போது என் உடல் நினைவு எனக்கு உரிமை இல்லை. ஆகவே நான் பாம்பைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. அது என்னைத் தீண்டும் உரிமை பெற்றிருந்தால் அதைத் தடுக்க நான் யார்?"— என்று கணீரென்று பதில் சொன்னார் அவர். கால் நாழிகைக்குப் பின் பிட்சு நன்றாகத் தூங்கும் குறட்டை ஒலி கேட்டது. இருந்த பாம்பு போன பின்பு இல்லாத பாம்பை நினைத்துத் தூங்காமல் விழித்திருந்த அவர்கள் இருவருக்கும் அவர் மேல் பொறாமையாக இருந்தது. அவ்வளவு தூய்மையான துறவி மேல் சந்தேகப்பட்ட பெண்ணை மனத்தில் சபித்தார்கள் அவர்கள். மழையும் தணிய வில்லை; காற்றும் தணிய வில்லை. எங்கோ ஒருமூலையில் ஏரி உடைத்துக்கொண்டு தண்ணீர்பாய்கிற ஓசையை அவர்கள் கேட்டார்கள் சிறிது நேரத்தில் ஒரு பெண்ணின் பயங்கர ஓலமும் எழுந்தது. சக்கசேனாபதி பிட்சுவை எழுப்பி அந்த ஓலத்தைக் கேட்கச் சொன்னார். சிறிது நேரம் உற்றுக் கேட்ட பிட்சு, "அவளுடைய குரல் போலத்தான் இருக்கிறது" என்று தீர்மானமாகச் சொன்னார்.

அத்தியாயம் 7

இருளில் எழுந்த ஓலம்


"பிட்சுவையும் கூட்டிக் கொண்டு வாருங்கள். மூன்று பேருமாக ஓடிப் போய்ப் பார்க்கலாம். அந்த அறியாப் பெண் எங்கே தவிக்கிறாளோ?" என்று இராசசிம்மன் சக்கசேனாபதியைத் துரிதப் படுத்தினான். அந்த அலை ஓசைகளுக்கிடையே அந்தப் பெண் குரலின் ஓலம் இன்னும் அவர்கள் செவிகளில் விழுந்து கொண்டுதான் இருந்தது.

"ஒரு உயிரைக் காப்பாற்றி உதவும் திருப்பணியில் இந்த ஏழையின் உடல் எந்த விதத்திலானாலும் தன்னை இழக்கத் தயாராயிருக்கிறது" என்று கூறிக் கொண்டு தாமாகவே எழுந்து வந்தார் புத்த பிட்சு. அந்த மழையையும், காற்றையும் பொருட்படுத்தாமல் அவர்கள் மூன்று பேரும் சிறிது தூரம் ஓடிப் போய்த் தேடிப் பார்த்தார்கள். அதற்கு

மேல் ஓடுவதற்குப் பாதையே இல்லை. ஏரி உடைப்பெடுத்துக் குறுக்கே பாய்ந்து கொண்டிருந்தது. "இனி நம்மால் ஆவது ஒன்றுமில்லை. அவளுக்கு வகுத்த வினைப் பயனின்படி ஆகும்" என்று சொல்லிக் கொண்டே திரும்பி நடந்தார் பிட்சு. அவர்களும் திரும்பி நடந்தார்கள். பிட்சு மறுபடியும் நிம்மதியாகத் தூங்கினார். பாம்புப் பயத்தை மறந்து சக்கசேனாபதி கூடத் தூங்கத் தொடங்கி விட்டார். தண்ணீரைத் தாங்குகிற பளிங்குக் கிண்ணம் மாதிரி உணர்ச்சிகளை உணர்ந்தும் அவற்றுக்கு இரையாகாமல் வாழ இந்த இரண்டு வயதான மனிதர்களும் எங்கேதான் கற்றார்களோ என்று விழித்திருந்த இராசசிம்மன் எண்ணி வியந்தான். அந்தப் பெண்ணின் ஓலம் நின்று விட்டாலும் கேட்டுக் கொண்டே இருப்பதாக விழித்திருந்த அவன் செவிகளுக்குப் பிரமை உண்டாயிற்று. காற்றிலும், மழையிலும், இருளிலும் அந்தக் காட்டுக் கட்டடத்தில் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் தன்மேல் தானாகவே ஒரு வெறுப்பு உண்டாயிற்று அவனுக்கு.

'மழை பெய்த ஈர மண்ணில் அனுபவமில்லாத சிறு பிள்ளை விளையாட்டுத்தனமாகக் கீறி வைத்த அரைகுறைச் சித்திரங்கள் மாதிரி இருக்கிறது, இது வரை நான் வாழ்ந்த வாழ்க்கை. வாழ்வின் உணர்ச்சிகளில் ஒன்றிலாவது முழுமையின் ஆழத்தைப் பார்க்கவில்லையே! பொறுப்பில், வீரத்தில், வெற்றியில் — எதிலும் முழுமை தெரியவில்லையே. அன்பு - அல்ல-காதல் காதலும் அல்ல-பாசம்-இவற்றில் கூட முழுமையாக வாழவில்லை நான். எத்தனை நாட்களை இப்படிக் கழிக்க முடியும்? கல்பகோடிக் காலம் வாழ வேண்டாம். ஒரு திங்கட் காலம் வாழ்ந்தாலும் ஏதாவதொரு உணர்ச்சியில் முழுமையாகத் தோய்ந்து வாழ வேண்டும். ஊழியூழியாக வாழ்வதைவிட இந்தச் சிறிது காலத்து முழுமை உயர்ந்தது; பெரியது. இணையற்றது.'

முழுமையைப் பற்றி நினைத்தபோது அவனுக்கு மதிவதனியின் நினைவுவந்தது. இடுப்பில் இடைக்கச்சத்துடன் சேர்த்துப் பிணைத்துக் கொண்டிருந்த சிறிய பட்டுப் பையைத் திறந்தான். இருளிலும் தன் நிறத்தையும், ஒளியையும் தனியே காட்டும் அந்தப் பொன்னிற வலம்புரிச் சங்கை எடுத்தான். பித்தன் செய்வது போல் கண்களில் ஒற்றிக் கொண்டான் மார்புறத் தழுவிக் கொண்டான். கைவிரல்களால் வருடியவாறு மடியில் வைத்துக் கொண்டான். கப்பலில் தான் பாடிய கவிதை நினைவு வந்தது அவனுக்கு. உணர்ச்சித் துடிப்பைச் சொற்களின் கனிமாக்கிய விந்தையை நினைந்த போது மட்டும் மனத்தில் முழுமை தோன்றுவது போலிருந்தது அவனுக்கு. அரசாட்சியையும் வெற்றி தோல்விகளையும் எண்ணிப் பார்த்தபோது அவன் உணர்ச்சிகளில் முழுமை தோன்றவில்லை. அருமை அன்னையும் மகாமண்டலேசுவரரும் தன்னிடமிருந்து எதிர்பார்த்த கடமைகளை நினைத்தபோது அவற்றில் முழுமை தோன்றவில்லை. ஏனென்றால் அந்தக் கடமைகளை அவன் இன்னும் நிறைவேற்றவேயில்லை. இடையாற்று மங்கலத்தின் அழகிய சூழ்நிலையில் குழல்மொழி என்ற பெண்ணோடு பழகிய பழக்கத்தை நினைக்கும்போதும் முழுமை ஏற்படவில்லை. மதிவதனி என்ற பெண்ணைச் சந்திக்க நேராமலிருந்தால் ஒருவேளை இடையாற்று மங்கலத்து அழகியாவது, கனகமாலை என்ற பேரெழில் நங்கையாவது அவனைக் கவர்ந்திருக்கலாமோ, என்னவோ? வெள்ளநீரில் பழைய தண்ணீர் அடித்துக் கொண்டு



போகப்படுகிற மாதிரி அவன் மனத்தின் அரைகுறை நினைவுகளை யெல்லாம் 'மதிவதனி' என்ற முழுமை இழுத்துக் கொண்டு விட்டதா? அல்லது அந்த முழுமையில் அவன் மூழ்கி விட்டானா? 'பார்க்கப் போனால் முழுமையான வாழ்வு என்பதுதான் என்ன? என்னைப் போல் அரச குடும்பத்தில் பிறந்தவனுக்குப் போர்களும், அவற்றில் வெற்றி வாகை சூடுவதும்தான் முழுமையான வாழ்வு என்று அரசியல் அறம் சொல்லலாம். அப்படிச் சொல்வது இதற்கு இலக்கணமாக இருக்கலாம். ஆனால் அது மட்டும் எனக்கு முழுமையான வாழ்வாகத் தோன்றவில்லையே? முழுமையாவது, மண்ணாங்கட்டியாவது! அரசனாகப் பிறந்தாலென்ன? ஆண்டியாகத் தோன்றினாலென்ன? பிறப்பது மண்ணில்தானே? வாழ்வதும் மனிதனாகத்தானே? மனிதனுடைய வாழ்க்கை;—அது ஒரு ஓட்டைப் பானை. ஒரு பக்கம் முழுமை கண்டால் இன்னொரு பக்கமாக ஒழுகிவிடுகிறதே! ஒன்றை நிறைவாக அனுபவித்தால் இன்னொன்றை இழக்க வேண்டியதுதான். நிறைவு, முழுமை யெல்லாம் அமர வாழ்க்கையில்தான் உண்டு போலிருக்கிறது. தேனீக்களை விரட்டாமல் தேனடையிலுள்ள தேனைக் குடிக்க முடியுமா? வாழ்விலுள்ள துன்பங்களைப் போக்காமல், குறைகளை நீக்காமல் முழுமையும் நிறைவும்' காண்பது எங்கே?

அறத்தையும், அன்பையும், கருணையையும் கொண்டே வாழ்ந்துவிட என் தாய்க்கு ஆசை. அறிவையும், சூழ்ச்சியையும் கொண்டே வாழ்ந்துவிட மகாமண்டலேசுவரருக்கு ஆசை. படைகளையும் போர்க்களங்களையும், உடல் வன்மையையும் கொண்டே வாழ்ந்துவிட வல்லாளதேவனுக்கு ஆசை. இந்த ஆசைகள் தான் முழுமையான வாழ்வா? குழல்மொழி என்ற பெண்ணுக்குக் கூட என்னையும் எனது அரச போக ஆடம்பரங்களையும் தனதாக்கிக் கொள்ளும் ஆசையிருக்கிறது. என்னுடைய பதவியும், பெருமையும், தகுதியும் தெரியாமலே என்மேல் அன்பு செலுத்தவும் ஒரு பெண் இருக்கிறாள். அவளுக்கு என்மேல் இருக்கும் அன்போ எனக்கு அவள்மேலிருக்கும் அன்போதான் முழுமையானதா?

எது முழுமை? எது நிறைவு? அழியாதது எது? பரிபூரணமான வாழ்வு எது? என்னைப் போன்று பெரிய அரசமரபின் வழித் தோன்றலாக வந்த ஒரு இளைஞனுக்கு அது எப்படிக் கிடைக்கும்?'' என்று இப்படி உருக்கமான பல நினைவுகளை மனத்தில் அசை போட்டுக் கொண்டிருந்தான் இராசசிம்மன்.



பொழுது விடிவதற்குச் சிறிது நேரத்துக்கு முன் சக்கசேனாபதியும், புத்தபிட்சுவும் தூக்கம் விழித்து எழுந்திருந்த போது வாசற்படியில் சாய்ந்து உட்கார்ந்தவாறே இராசசிம்மன் கண்ணயர்ந்திருப்பதைக் கண்டனர். அவன் மடியில் சிறிய குழந்தை ஒன்று படுத்துத் தூங்குவது போல் அந்தச் சங்கு கிடப்பதைப் பார்த்துச் சக்கசேனாபதி சிரித்துக் கொண்டார்.

முதல் நாள் காற்றும், மழையும் ஓய்ந்து போயிருந்தன. எனினும், அந்த மழையும் புயலும் உண்டாக்கிய சீரழிவுகளும் அலங்கோலங்களும் கண்பார்வை சென்ற இடமெல்லாம் தெரிந்தன. வானம் அழுக்கு நீங்கி வெளுத்து விரித்த நீலத் துணிபோல் வெளிவாங்கியிருந்தது. அவர்களுடைய குதிரைகள் நனைந்து நிறங் கலைந்த மேனியோடு கட்டடத்துக்கு அருகில் ஒண்டிக் கொண்டு நின்றன. குமார பாண்டியனைத் தொட்டு எழுப்புவதற்காக அருகில் சென்றார் சக்கசேனாபதி. ஆழ்ந்த தூக்கமில்லாமல் கண்களை மூடிச் சோர்ந்து உட்கார்ந்திருந்ததால்

அவருடைய காலடி ஓசையைக் கேட்டே விழித்துக் கொண்டான் அவன். சங்கை எடுத்துப் பட்டுப் பைக்குள் போட்டுக் கொண்டு எழுந்து நின்றான். சக்கசேனபதியைப் பார்த்து, "அடடா! பொழுது விடியப் போகிறது போலிருக்கிறது. நாம் புறப்படலாமா? நண்பகலுக்குள் எப்படியும் தமனன் தோட்டத்தில் இருக்கவேண்டும் நாம்" என்றான்.

"அவசரப் படாதீர்கள், இளவரசே! நேற்று மழையிலும், காற்றிலும் மரங்கள் ஒடிந்து விழுந்து பாதையெல்லாம் சீர்கெட்டிருக்கிறது. ஏரி உடைப்பினால் வேறு வழிகள் அழிந்திருக்கலாம். முதலில் சிறிது தொலைவு சுற்றித் திரிந்து பாதைகளைச் சரிபார்த்துக்கொண்டு வருவோம்" என்றார் சக்கசேனபதி.

"தம்பீ! பெரியவர் சொல்கிறபடி கேள். நிதானமாகப் பாதையைப் பார்த்துக் கொண்டு புறப்படுவது தான் நல்லது; அவசரம் வேண்டாம். நானும் உங்களோடு தான் வரப் போகிறேன்" என்று புத்த பிட்சுவும் கூறினார்.



நெட்டை மனிதர்: வெய்யில் ரொம்பக் கடுமை. மண்டை வெடிச்சு விடும் போல் இருக்கு. நீங்கள் அதை ரொம்பப் பொருட்படுத்தவில்லை போல இருக்கே!

குட்டை மனிதர்: என்ன இருந்தாலும் என்னை விட உங்க தலை சூரியனுக்குக் கிட்டே இருக்கு பாருங்கோ!

குதிரைகளை அங்கேயே விட்டு விட்டு மூவரும் வழிகளைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள். பெரிய பெரிய மரங்களெல்லாம் வேரோடு சாய்ந்திருந்தன. அங்கங்கே தண்ணீர் தேங்கி வழியெல்லாம் சேறும் சகதியுமாக இருந்தது. ஏரி உடைத்துக் கொண்டு பாய்ந்தோடிய நீர்ப்பிரவாகம் சில இடங்களில் பாதையைப் பயங்கரமாக அறுத்துக் குடைந்திருந்தது. காற்றும், மழையும் கொண்ட கோபத்துக்கு ஆளாகி அந்தக் காட்டின் அமைதியான அழகு தாறுமாறாகித் தோற்றமளித்தது.

"கண்ணுக்குத் தெரிகிற காட்சிகளைப் பார்த்தால் நேற்றிரவு அந்தப் பெண் உயிர் பிழைத்திருக்க முடியுமென்று என்னால் நம்ப முடியவில்லை. பாவம்! அவள் தலையில் எழுதியிருந்தது அவ்வளவுதான் போலிருக்கிறது" என்று புத்தபிட்சு பரிதாபமான குரலில் கூறினார். அவர் தம் வார்த்தையைச் சொல்லி முடிக்கவும், "அதோ, பாருங்கள் அடிகளே......! யாரோ விழுந்து கிடக்கிறாற்போலிருக்கிறது" என்று முகத்தில் பயமும், வியப்பும் படரச் சக்கசேனபதி ஒரு புதரைக் கை நீட்டிக் காட்டிக் கூச்சலிடவும் சரியாக இருந்தது. முதல் நாளிரவு தண்ணீர் பாய்ந்து ஓடிய அடையாளம் அங்கே தெரிந்தது. மரக்கிளைகளின் முறிவுகளும் செடி கொடித் தூறுகளும் அடர்ந்து பின்னிக் கிடந்த புதரில் தண்ணீர் இழுத்து வந்து சொருகினாற் போல அந்த உடல் கிடந்தது. தோற்றத்திலிருந்து பெண்ணுடல்தான் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

"அந்தப் பாவிப் பெண்ணுக்குத்தான் இருக்கும். நேற்று நான் எவ்வளவு ஆதரவோடு அவளிடம் பேசினேன்! எபபடியாவது அவளைக் காப்பாற்றி விடவேண்டும் என்ற எண்ணம்தான் என் உள்ளத்தில் உறுதியாயிருந்தது. ஆனால் புத்த பகவான் திருவுள்ளம் வேறாயிருந்திருக்கிறது. அட பாவமே! நேற்றே நான் சொல்லியபடி கேட்டிருந்தால் இப்படி ஆகியிருக்காதே! வாருங்கள், போய்ப் பார்க்கலாம்" என்று முன்னால் ஓடினார் புத்த பிட்சு. இராசசிம்மனும், சக்கசேனபதியும் அவருக்குப் பின்னால் ஓடினார்கள். பிட்சு அந்தப் பெண்ணின் உடைகளைச் சரிசெய்து விட்டு, "அவள் தான் ஐயா அநியாயமாகச் செத்துத் தொலைந்திருக்கிறாள்" என்று கூறிக்கொண்டே அந்த உடலைப் புதருக்குள்ளிருந்து வெளியே தூக்கி வந்து முகம் தெரியும்படி தரையில் கிடத்தினார். சக்கசேனபதியின் விழிகளில் அனுதாபம் மின்னியது.

கண்களில் சந்தேகமும் பீதியும் மிளிரக் கொஞ்சம் கீழே குனிந்து அந்த முகத்தை உற்றுப் பார்த்தான் இராசசிம்மன். அவன் முகம் பயத்தால் வெளிறி வாய் கோணியது. அடுத்த கணம் அவன் வாயிலிருந்து வெளியேறிய ஒரு பெயர் அந்தக் காடு முழுதும் எதிரொலித்து அலறிக் கொண்டிருந்தது.

(தொடரும்)



SHRI YOGIRAJ UMESHCHANDRAJI



வெளிவராத உண்மை



எஸ். வைத்தியநாதன்

போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் பொன்னுதுரை முதலியார் 'கேஸ்'களில் எதிராளிகளை விசாரிக்கத் தொடங்கினாரானால் அவருடைய நயனங்கள் ராவணன் விழியாக மாறும்; சுபாவத்திலேயே இரும்பு அடிப்பது போல் ஒலிக்கும் அவர் குரல் இன்னும் கர்ண கடூரமாக அலறும்! அவரது வலக்கரம் ஆட்டுக்கொம்பு மீசையை இழுத்து இழுத்து விட்டுக் கொள்ளும்! எதிராளியின் உள்ளத்தில் பயத்தை எழுப்பி உண்மையைக் கக்க வைப்பதற்கு இந்த உபாயங்கள் இன்றியமையாதவை என்பது அவருடைய கருத்து!

அன்று அவருடைய கண்களும், குரலும், மீசையும் வழக்கத்தைக் காட்டிலும் படாதபாடு பட்டன. அவருடைய சொந்த வீட்டிலேயே அல்லவா ஒரு 'கேஸ்' நடந்து விட்டது!

அவருடைய மனைவி கமலநாயகி அன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு முன்னால் தனது நகைகளைக் கழற்றிக் கூடத்து அலமாரியில் வைத்தாள். மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு அவைகளை மீண்டும் அணிவதற்காக அலமாரியிலிருந்து எடுத்தாள். அவளுடைய கழுத்துச் சங்கிலியை அவற்றில் காணோம்!

பதற்றத்துடன் அலமாரி முழுதும் தேடினாள். வீடு முழுதும் சுற்றிச் சுற்றி வந்தாள். சங்கிலி அகப்படவில்லை! மற்ற நகைகள் அப்படியே இருக்க, சங்கிலி மட்டும் எப்படி மறைந்திருக்கும் என்பது புரியாத புதிராக இருந்தது.

மத்தியானச் சாப்பாட்டுக்காக வீட்டுக்கு வந்த கணவரிடம் தயங்கித் தயங்கி விஷயத்தைக் கூறினாள். பொன்னுதுரை ரௌத்ராகாரமானார். 'இந்தப்பொன்னுதுரை வீட்டிலேயே திருடத் துணிந்து விட்டாயா?' என்று கர்ஜித்தார். அவர் கண்களும், மீசையும், குரலும் அவரது விசாரணையில் தங்கள் பங்கை வழக்கத்தைவிட அதிகமாகவே செலுத்தத் தொடங்கின!

"யார் எடுத்தது நகையை! மரியாதையாகச் சொல்லி விடவேணும்! உம், சீக்கிரம்!" என்று கூச்சலிட்டார் பொன்னுதுரை. மீண்டும் கமலநாயகி பயத்துடன், "நான் எடுக்கவில்லை. என் நகையை நானே திருடுவேனா?" என்றாள் தட்டுத் தடுமாறிக்கொண்டே.

அப்புறந்தான் ஸப்-இன்ஸ்பெக்டருக்கு அங்கு வேறு யாரும் இல்லை, நகையைப் பறிகொடுத்தவளையே மிரட்டிக் கொண்டிருக்கிறோம் என்பது புரிந்தது! "சரி, காலையிலிருந்து இங்கு வந்து விட்டுப் போனவர்கள் யாரார்?" என்றார்.

"மாடு கறக்கும் மண்ணுங்கட்டி, வண்ணான் வைரவேலு இருவரும் வந்து விட்டுப் போனார்கள். வேலைக்காரி வேலாயி பதினொரு மணி வரை வேலை செய்து கொண்டிருந்தாள். சற்று முன் தான் யாரையோ பார்த்து விட்டு வருவதாகப் போனாள்."

இந்தச் சமயத்தில் கல்லூரியிலிருந்து இடைவேளைச் சாப்பாட்டுக்காக அவர்களுடைய புதல்வன் ராஜநாயகம் வந்தான். "ராஜா! சைக்கிளை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குப் போ. 'முப்பத்தேழு' இருப்பான். மண்ணுங்கட்டி, வைரவேலு, வேலாயி மூவரையும் உடனே இங்கே இழுத்துக் கொண்டு வரச் சொல்லு!" என்று அவனுக்குக் கட்டளையிட்டார் பொன்னுதுரை. அவனும் சிட்டாய்ப் பறந்து 'முப்பத்தே'ழிடம் தந்தையின் ஆக்ஞையைத் தெரிவித்து விட்டு வந்தான்.

தந்தையும் தனயனும் சாப்பிட்டு எழுந்தார்கள். வைரவேலு வந்து கும்பிட்டு நின்றான். கண்களைக் குரூரமாக்கிக் கொண்டு, சகிக்க முடியாத ஒலியை எழுப்பினார் பொன்னுதுரை:- "ஏய்! நீ காலையில் இங்கு வந்தாயா!"

அவருடைய சினத்தின் காரணம் புரியாமல் பீதியுடன், வைரவேலு "ஆமாங்க!" என்றான்.

"நீதானே எடுத்துக் கொண்டு போனாய்!" என்றார் அவர்.

"ஆமாம், எசமான்!"

"ஹாஹ்ஹாஹா! அப்படிச் சொல்லு! எனக்கு அப்பவே தெரியும்!...எங்கேடா வைத்திருக்கிறாய் அதை? சீக்கிரம் சொல்லி விடு!"

"வீட்டில்தானுங்க!"

"வரும் போது கொண்டு வரவில்லையா அயோக்கிய ராஸ்கல்! ஓடிப் போய்க் கொண்டு வாடா உடனே!"

"எப்படிங்க கொண்டு வர முடியும்! நாலு நாட்களாவது 'டைம்' வாணுங்களா?" என்றான்.

"உதைப்பேன் உன்னை! ஒரு விநாடியில்கொண்டு போய்விட்டான், கொண்டு வர நாலு நாட்கள் ஆகுமாம்! மரியாதை நடத்த வேணுமாடா?" என்று அவனை நெருங்கினார் பொன்னுதுரை.

"எஜமான்! இப்படி அகாரணமா என்னை அடிக்க வர்றீங்களே! இது அநியாயமா! வெள்ளாவி வைச்சு, வெளுத்துப் பெட்டி போட்டுக் கொண்டு வர நாலு நாட்களாவது வேணுமா! இப்பவே எப்படிங்க கொண்டு வருவது!"

பொன்னுதுரை திகைத்தார். "டேய், மூட்டாள்! நான் சங்கிலியைக் கேட்டால் நீ துணியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறாயே. என்னடா விளையாட்டு இதெல்லாம்?" என்று சீறினார்.

"சங்கிலியா! ஐயையோ, எங்க வண்ணார மாரியாத்தா மேல் ஆணையாகச் சொல்கிறேன்; ஒரு சங்கிலியையும் நான் கண்ணால்கூடப் பார்க்கவில்லைங்க!" என்று ஓலமிட்டான் அவன்.

"நீ சரியான பூசை வாங்காமல் ஒத்துக் கொள்ள மாட்டாய்! இரு, முப்பத்தேழு வரட்டும்!" என்று பொன்னுதுரை உறுமினார்.



இந்தச் சந்தர்ப்பத்தில் மண்ணாங்கட்டி அரங்கத்தில் பிரவேசித்தான். சுற்றி வளைத்துப் பேசாமல், "சங்கிலி எங்கேடா?" என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.

"மன்னிச்சுக்குங்க, எஜமான்! சாயங்காலம்...."

"சாயங்காலம் கொண்டுகிட்டு வரப் போகிறாயாடா, களவாணிப் பயலே! எங்கேயிருந்துடா!" என்று உறுமினார் பொன்னுதுரை.

"கடையிலிருந்துதானுங்க!"

"கடையில் அடமானம் வைத்து விட்டாயா?" என்று சீறிக்கொண்டு அவனை நெருங்கினார் அவர்.

"நீங்க பேசறது விளங்கவே இல்லீங்களே, எஜமான்! அம்மா நேற்று சங்கிலி ஒண்ணு வாங்கிக் கொண்டு வரும்படி பணம் கொடுத்தாங்க. நான் மறந்தே போய் விட்டேன். அதைத்தான் சாயங்காலம் கடைக்குப் போய் வாங்கி வரேன்னு சொன்னேன்..."

குழப்பத்துடன் கமலநாயகி பக்கம் திரும்பினார் பொன்னுதுரை. அவள் விளக்கினாள்: "எருமை மாடு கட்டுவதற்கு இரும்புச் சங்கிலி ஒண்ணு வாங்கி வரும்படி நேற்று பணம் கொடுத்தேன். அதைச் சொல்கிறான் போலிருக்கு!"

"காலிப் பயலே! எருமைச் சங்கிலியும் அம்மாவின் சங்கிலியும் ஒன்றாகப் போய் விட்டதாடா உனக்கு? அம்மா சங்கிலி எங்கேடா?"

ராஜநாயகம் குறுக்கேபுகுந்துகூறினான்: "ஏய், மண்ணாங்கட்டி! கண்டபடி உளறி அப்பாவின் கோபத்தை அதிகரிக்காதே! அம்மாவின் கழுத்துச் சங்கிலியைக் காலையில் கழற்றி அலமாரியில் வைத்திருந்தாங்களாம். அதைக் காணவில்லையாம்! நீ எடுத்திருப்பாய் என்று சந்தேகிக்கிறார்!"

"ஐயோ சாமி! எனக்கு ஒரு பாவமும் தெரியாதுங்களே!" என்று கலக்கத்துடன் புலம்பினான் மண்ணாங்கட்டி.

வேலாயி பின்தொடர 'முப்பத்தேழு' உள்ளே நுழைந்தான்.

"ஏ, வேலாயி! சங்கிலி எங்கே?" என்று கூச்சலிட்டார் சப்-இன்ஸ்பெக்டர் பொன்னுதுரை.

"சங்கிலிங்களா? சற்று முந்திதான் வால்குடிக்குப் போச்சு!" என்று பதிலளித்தான் வேலாயி.





''லால்குடிக்கா! அனுப்பிவிட்டாயா?''

'' நான் அனுப்ப வில்லேங்க! அதுவா கத்தான் போயிருக்கு!''

'' அதுவாகப் போச்சா! போதும், போதும்! அதுக்குக் கால் முளேச் சிருக்கும்! அப்படித்தானே.''

'' கால் முளேக்கவில்லே என்பதற்கு அது சின்னப் பாப்பாவா, எஜமான்! இருபத்தஞ்சு வயது ஆகவில்லே?''

'' என்ன வயது, இயசு என்று உளறு கிருய்? அம்மாவின் கழுத்துச் சங்கிலி யைக் காணும் என்ருல் என்னமோ ஒய்யாரமாகப் பேசுகிருயே!.....''

'' அம்மா சங்கிலியா; காணுமா! எந்தப் பாவி களவாடியது? இவ்வளவு வருஷங்களாக இந்த வீட்டில் நான் பழகியிருந்தும், என்னேப் பற்றி உங்க ளுக்கெல்லாம் நல்லாத் தெரிஞ்சிருந் தும், என்மேல் சந்தேகப்படறீங்களா? என் ஒண்ணுவிட்ட மச்சான் சங்கிலிக் கருப்பனேத்தான் கேட்டிங்களாக்கும்னு நினேச்சேன். எஜமான்! சத்தியமாச் சொல்லறேன். சங்கிலியை நான் எடுக் கல்லே!'' என்ருர் அழாக்குறையாக.

'' அதெல்லாம் எனக்குத் தெரியாது! உங்கள் மூன்று பேருக்குள் யாரோ ஒருத் தர்தான் அதை எடுத்திருக்க வேண்டும். உண்மையை ஒப்புக் கொண்டு விட வேணும். இல்லேயென்ருல் துப்பாக்கி யால் சுட்டுத் தள்ளி விடுவேன்! ஆமாம்!'' என்று வெறி கொண்டவர் போல் கத்தினுர் பொன்னுதுரை.

''இன்னும் ஐந்து நிமிஷம் கொடுக் கிறேன். அதற்குள் குற்றவாளி சரணடைந்து விட வேண்டும்!..........'' என்று இறுதி எச்சரிக்கை விடுத்தார் பொன்னுதுரை.

சற்று யோசனே செய்பவள் போலிருந்த வேலாயி சட்டென்று கூடுவாய் மூலேப் பக்கமாகப் போனுள். இரவாணத்தில்

தொடர்ச்சியான ஆறு விளம்பரங்களில் நாலாவது இது.

கயிறின் கதை




தென்னங் கூந்தல் "உதை தின்கிறது"

கப்பல் வடங்களாக, மரக்கலக் காப்புத்தறிகளாக, கப்பற் பணி முட்டுகளாக கயிறு பயன்பட்டது பற்றி, கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அராபிய எழுத்தாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாரசீக வளைகுடாவில் கப்பல்கள் கட்ட கயிறு பயன்பட்டதாக இத்தாலிய யாத்திரிகர் மார்க்கபோலோ குறிப்பிட்டிருக்கிறார்.

கடற்கழியின் உப்புத்தண்ணீரில் தீர்த்தமாடிய தென்னங் கூந்தல்கள், அடுத்தபடியாக தடியடி சிகிச்சைக்காக, பெண்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அவர்கள் அவற்றை மரப்பலகைகள் அல்லது பாறைக்கற்கள் மீது வைத்து தடிகளினால் வெளுத்துவாங்குகிறார்கள். அடி நன்றாக உதவுகிறது. கூந்தலிலிருந்து தென்னஞ் சவுரி பிரிகிறது. சவுரியை எடுத்துத் துவைத்து, தூசி தட்டி, உலர வைக்கிறார்கள். சுத்தமான, தொய்வுடைய சவுரி மெருகிடப்பட்ட தங்க நிறத்தில் கிடைக்கிறது. அதைத் தரம்பிரித்து, நீளமானவற்றைக் கயிறாகத் திரிக்கிறார்கள். சொறசொறப்பான, முரட்டுச் சவுரியை பிரஷ்களும், துடைப்பங்களும் தயாரிக்க உபயோகிக்கிறார்கள். மீதி சவுரி மெத்தைகள், குஷன்கள், சோபாக்களுக்குப் பயன்படுகின்றன. தயாராகும் 130,000 டன் தென்னஞ்சவுரியில் 600 டன் மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. பாக்கி கயிறாகப் பின்னப்படுகிறது.







இந்தியாவில் விளையும் 330 கோடித் தேங்காய்களில், 162 கோடி நெற்றுகளை, 130,000 டன்கள் கயிறும், கயிறில் தயாராகும் பொருள்களும் செய்யக் கயிற்றுத் தொழில் உபயோகப் படுத்துகிறது. இந்தத் தொழில் மூலம் நாட்டுக்கு 11 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. 500,000 குடும்பங்களுக்கு—பெரும்பாலும் பெண்களுக்கு—வேலை கிடைக்கிறது.

காயர் போர்டு இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருப்பது. திட்டமான தயாரிப்பு, பொருள்களின் தன்மை நிர்ணயம், ஒழுங்கான முறையில் விற்க ஏற்பாடு செய்வது ஆகிய சேவைகளே இந்த போர்டின் நோக்கம்.

விலை மலிவான கயிற்றுப்பாய்கள், மெத்தைகள், தளவிரிப்புகள் ஆகியன உங்கள் அலுவலகங்களுக்கும் வீடுகளுக்கும் அழகு சேர்க்கின்றன.

காயர் போர்டு

(கவர்ன்மென்ட் ஆப் இந்தியா) எர்ணாகுளம்.

ஷோ-ரூம்கள் & விற்பனை நிலையங்கள்:

16 A, அசப் அலி ரோடு, புது டில்லி—போன்: 26988

1/155, மவுண்ட் ரோடு, மதராஸ்-2—போன்: 85787

1 A, மஹாத்மா காந்தி ரோடு, பெங்களூர்

கஸ்தூர் நிவாஸ், பிரெஞ்சு ரோடு, பம்பாய்—7—போன்: 74053

5, ஸ்டேடியம் ஹவுஸ், சர்ச்கேட், பம்பாய.

EP.CB.4

கைவிட்டாள். வெளியே எடுத்த அந்தக் கையில் சங்கிலி காட்சி தந்தது! தாம் அபார சாமர்த்தியத்துடன் புலன் விசாரணை செய்து அவ்வளவு விரைவில் நகையைக் கக்க வைத்து விட்டதைக் குறித்துப் பொன்னுதுரைக்கு விவரிக்க இயலாத பெருமை. "முட்டாள்கள்!... இத்தகைய திறமைசாலியான நான் இதற்குள் ஐ. ஜி. யாக ஆகியிருக்க வேண்டும். இருபது வருஷங்களாகியும் இன்னும் ஸப்- இன்ஸ்பெக்டராகவே வைத்திருக்கிறார்கள்!" என்று தமது இலாகா மேலதிகாரிகளை மானசீகமாகச் சபித்துக் கொண்டிருந்தார்.

கமலநாயகி வேலாயியினிடமிருந்து சங்கிலியைப் பெற்றுக் கொண்டவள், திகைப்புடன் "ஏண்டி! நீயா இந்தக் காரியம் செய்தாய்?" என்றாள்.

"நீங்களா அம்மா இப்படிக் கேட்கிறீங்க நான் செய்வேனுங்களா?"

பொன்னுதுரை "நீ செய்யாமல் உங்க மாமியார் செய்தாளோ!" என்று குறுக்கிட்டு இடி முழக்கம் செய்தார்.

"சத்தியமா நான் எடுக்கலீங்க!"

"பின் யார் எடுத்து இரவாணத்தில் வைத்தது? அது உனக்கு எப்படித் தெரிந்தது?"

"அதையெல்லாம் என்னிடம் கேட்காதீங்க. நான் எடுக்க வில்லை; அவ்வளவுதான்! என்னை நம்புங்க!"

"ஏய், முப்பத்தேழு! இந்த நாயை இழுத்துக் கொண்டு போய் 'லாக்-அப்'பில் தள்ளு!" என்று கர்ஜித்தார். கதறக் கதற வேலாயியை ஸ்டேஷனுக்குத் தள்ளிக் கொண்டு போனான் அவன்!

"பன்னிரண்டு வருஷங்களாக நம் வீட்டில் வேலை செய்கிறாள்! இது வரையில் தப்புக் காரியம் எதுவும் செய்ததில்லை! இப்போது புத்தி பிசகி விட்டாள், பொல்லாத வேளையின் பயனாக! போனால் போகிறாள், விட்டு விடுங்கள்!" என்றாள் கமலநாயகி, உள்ளூறப் பயத்துடனேயே.

"ஆமாம் அப்பா! அவளை மன்னித்து விட்டுவிடுங்கள்" என்று ராஜநாயகமும் சிபாரிசு செய்தான்.

தாம் பிரமாதமான முறையில் புலன் விசாரித்துக் குற்றவாளியைக் கையும் களவுமாகப் பிடித்திருக்கும் போது, அவளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்காமல் விட்டு விடுவாரா பொன்னுதுரை?

வேலாயியின் மீது கோர்ட்டில் வழக்கு நடந்தது. சர்க்கார் செலவில் அவளுக்காக அமர்த்தப்பட்ட வக்கீல் கூட அவளுக்கு எதிரான சாட்சியம் பலமாக இருப்பதைக் கண்டு, "குற்றத்தை ஒப்புக் கொண்டு விடு! முதல் குற்றம் என்று மன்னித்து விடுதலை செய்ய ஏற்பாடு செய்கிறேன்!" என்று அவளுக்கு எவ்வளவோ புத்திமதி சொன்னார். "பொய் சொல்ல மாட்டேனுங்க! நான் திருடவில்லை என்பது சத்தியம்! ஆனால் யார் எடுத்தது என்பதை வெளியே சொல்லவும் மாட்டேன். ஆண்டவன் விட்ட வழி ஆகட்டும்" என்று உறுதியாகக் கூறினாள் அவள்.

கோர்ட்டிலும் அதையேதான் கூறினாள் அவள். அவளுக்கு எப்படி விடுதலை கிடைக்கும்? மூன்று வருஷக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டாள்.

ஆண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடின. பொன்னுதுரை முதலியாரின் குடும்பத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. பட்டம் பெற்ற ராஜநாயகத்துக்குக் கும்பகோணத்தில் ஒரு நல்ல குணவதியாகிய அழகிய மனைவியும் வாய்த்தாள். பொன்னுதுரை முதலியார் சிவபதமடைந்து விட்டார்.

தண்டனைக் காலம் முடிவுற்றுச் சிறையிலிருந்து வெளியே வந்தாள் வேலாயி. பல வருஷங்களுக்கு முன்னேயே கணவனை இழந்து விட்டவள் அவள். பிறந்த வீட்டு உறவினரும் யாரும் கிடையாது. எனவே உழைத்துத்தான் சாப்பிட வேண்டும் அவள். பொன்னுதுரை முதலியார் வீட்டோடு தங்கி வேலை செய்து கொண்டு அவர் மாற்றலாகிப் போகும் ஊருக்கெல்லாம் அவர் குடும்பத்தோடு அவளும் போய்க் கொண்டிருந்தாள். பன்னிரண்டு வருஷங்கள் கவலையின்றி இவ்வாறு தள்ளிவிட்ட அவள் கடைசியில் அவர் திருச்சியிலிருக்கும் போது தான் சிறைத் தண்டனை பெற நேர்ந்தது. அதுதான் அவளுடைய சொந்த ஊருங்கூட. எனவே அவளைப் பற்றிய விஷயங்கள் அந்த நகர் முழுதும் நன்றாகப் பரவி யிருந்தமையால் அவளை மீண்டும் அந்த ஊரில் வேலைக்கு வைத்துக் கொள்வார் இல்லை. சில மாதங்கள் வியர்த்தமான முயற்சியில் ஈடுபட்டு, படாத கஷ்டங்களெல்லாம் பட்டுவிட்டுத் தஞ்சாவூருக்குப் பயணமானாள். அவ்வூரில் சிரமப்பட்டு நாலைந்து வீடுகளில் வேலை பிடித்துக் கொண்டு ஏதோ கால் வயிற்றுக் கஞ்சி குடித்து வந்தாள். ஆனால் பத்து மாதங்களுக்குள் அவள் துரதிர்ஷ்டம் அங்கும் துரத்திக் கொண்டு வந்துவிட்டது! கான்ஸ்டேபிள் 'முப்பத்தேழு' அவ்வூருக்கு மாற்றலாகி வந்தான். அவன் குடிவந்த வீட்டுக்கு அடுத்த வீட்டில் வேலாயி வேலை செய்து கொண்டிருந்ததைக் கண்டு வெகு கர்ம சிரத்தையாக அவ் வீட்டுக்காரர்களிடம் போய் அந்த 'ஜெயிலுக்குப் போன கழுதை'யை

வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டாம் என்று எச்சரித்தான். அவளுக்கு அன்றே சீட்டுக் கிழிந்தது அவ் வீட்டில். மற்ற வீடுகளுக்கும் இச் செய்தி விரைவிலேயே பரவி அவ் வீடுகளிலும் அவளை வேண்டாம் என்று கூறி விட்டார்கள்!

வேலாயி தஞ்சையைவிட்டுக் கிளம்பிச் சிதம்பரத்துக்குப் போனாள். அங்கே சில வீடுகளில் வேலை பிடித்துக் கொண்டு ஒரு வருஷ காலம் தள்ளினாள். அவள் விதி அவளை விடவில்லை! வேலாயி வேலையை இழந்து அவ்வூரையும் விட்டுக் கிளம்பும்படி ஆகியது! கடைசியாகக் கும்பகோணம் வந்து சேர்ந்தாள் அவள்.

ராஜநாயகத்தின் மனைவி சண்பகவல்லி கல்யாணமான நாலு வருஷங்களில் மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிவிட்ட காரணத்தால் மிகவும் துர்ப்பலமாயிருந்தாள். குழந்தைகளையும் பார்த்துக் கொண்டு வீட்டு வேலைகளையும் செய்வது அவளுக்கு மிகுந்த சிரமமாயிருந்தது. எனவே தன் வீட்டோடு தங்கி வேலை செய்யக் கூடியவளாக யாராவது வேலைக்காரி இருந்தால் பார்த்துத் தரும்படி அடுத்த வீட்டு வேலைக்காரி அஞ்சலையிடம் சொல்லி வைத்திருந்தாள். அந்தச் சமயம் தான் வேலாயி அவ்வூருக்கு வந்தது.

அஞ்சலை வேலாயிக்கு எட்டிய உறவு. அவள் அவ்வூரிலிருப்பதை அறிந்திருந்த வேலாயி அவளை அணுகித் தன் நிர்க்கதியான நிலைமையைக் கூறித் தனக்கு வேலை பார்த்துத் தரும்படி கேட்டுக் கொண்டாள். அஞ்சலை அவளைச் சண்பகவல்லி வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்.

சண்பகவல்லி வேலாயியை, 'நன்றாக வேலை செய்வாயா?' 'ஒழுங்காகச் செய்வாயா?' 'நீடித்து இருப்பாயா?' என்றெல்லாம் விசாரித்தாள். அவளுக்குத் திருப்தியளிக்கும் வகையில் எல்லாவற்றுக்கும் பதில் கூறிய வேலாயி, இறுதியில் "ஆனால் ஒரு விஷயம் அம்மா....!" என்று இழுத்தாள்.

"என்ன?"

"நான் ஜெயிலுக்குப் போனவள்! என்னை வைத்துக்கொள்ளச் சம்மதிப்பீர்களா?" என்றாள் வேலாயி.

சண்பகவல்லி திகைத்துத் திடுக்கிட்டாள். என்றாலும் வேலாயியின் ஒளிவு மறைவற்ற பேச்சு நல்ல அபிப்பிராயத்தையே உண்டாக்கியது அவளுடைய மனத்தில்.

"ஆனாலும் ஒரு தப்புத் தண்டாவும் நான் செய்யவில்லை அம்மா! செய்யாத குற்றத்துக்காக நான் ஜெயில் வாசம் செய்தேன்!"

"அப்படியா! விவரமாகச் சொல்லு!" என்றாள் ராஜநாயகத்தின் மனைவி.


தான் ஒரு போலீஸ் சப் - இன்ஸ்பெக்டர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்ததாக ஆரம்பித்து, நடந்ததெல்லாவற்றையும் கூறினாள் வேலாயி. இறுதியில் "ஏன் அம்மா! நான் திருடியிருந்தால் கடைசிவரை 'தெரியாது' என்று சாதித்திருக்க மாட்டேனா! எடுத்துக் கொடுப்பேனா?" என்றாள்.

"பின் நீ ஏன் எடுத்துக் கொடுத்து மாட்டிக் கொண்டாய்?"

"அந்த ஐயா மகா கோபக்காரர். முரட்டு ஆசாமி. அந்த வண்ணான், பால்காரன், நான் ஆகிய மூனு பேரையும் அடிச்சுப் பிணம் புரட்டியிருப்பாரு; குற்றுயிரும், குலை உயிருமாகப் பண்ணியிருப்பாரு. அதைத் தவிர்க்கவே சங்கிலியை எடுத்துக் கொடுத்து விட்டேன். அதுவும் தவிர நான் தாமதித்திருந்தால் அந்தச் சங்கிலி வெளியேறி, இன்னும் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கும்."

வெளியே போய்விட்டு வீடு வந்த ராஜநாயகத்தின் செவிகளில் வேலாயியின் கடைசி வாக்கியங்கள் விழுந்தன. அவள் குரலை அவன் ஒரே நொடியில்

குடிக்கவா? குளிக்கவா?





"நான் பரீட்சைக்குப் போகிற போது அவன் என்ன செய்கிறான் பாருங்கப்பா!"

இனம் கண்டு கொண்டான். அவன் உள்ளமும் உடலும் நடுநடுங்கின!

ஆம்! ராஜநாயகந்தான் நிஜக் குற்றவாளி! கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த அந்த நாகரிக யுவனுக்கு, சிகரெட்டுக்கு, சினிமாவுக்கு, நண்பர்களை அழைத்துக் கொண்டு உல்லாசமாக ஹோட்டலுக்குப் போவதற்கு, பணம் தேவையா யிருந்தது. ஆனால் பொன்னுதுரை முதலியார் காலணாக்கூட அவன் கண்ணில் காட்ட மாட்டார்! அவனுக்கு வேண்டிய புஸ்தகம், துணி மணிகளைக் கூட அவரே வாங்கிக் கொடுத்து விடுவார். எனவே 'இதற்கு என்ன வழி பண்ணுவது?' என்று பல நாட்கள் யோசித்துக் கடைசியில் அம்மாவின் நகையைக் கிளப்பிவிடுவது என்னும் முடிவுக்கு வந்துவிட்ட அவன், அன்று காலை சங்கிலியைக் கிளப்பி இரவாணத்தில் வைத்து விட்டான். ஆற, அமர, அமளியெல்லாம் ஓய்ந்தபின் அதையெடுத்து உபயோகித்துக் கொள்ளலாம் என்பது அவன் கருத்து.

அச்சமயம் கொல்லைப் பக்கத்திலிருந்து தற்செயலாக அந்தப் பக்கம் வந்த வேலாயி, அவன் கூடத்துப் பக்கத்திலிருந்து விரைவாக வந்து இரவாணத்தில் கைவிடுவதைப் பார்த்தாள். ஆனால் சந்தேகம் எதுவும் ஏற்படவில்லை அவளுக்கு. என்னவோ ஏதோ என்று வாளா விருந்து விட்டாள். அப்புறம் மத்தியானம் நடந்த விசாரணையின் போதுதான் திடீரென்று அவளுக்கு அந்த ஐயம் ஏற்பட்டது. அவள் ஐயம் சரியாகி விட்டது!

தான் செய்துவிட்ட களவின் விளைவாக அவள் மாட்டிக் கொண்டது அவன் மனசை மிகவும் அறுத்தது. எனினும் உண்மையை ஒப்புக் கொள்ளத் துணிவில்லை அவனுக்கு!...

"அந்தச் சங்கிலியைத் திருடியது யார்தான் பின்னே? நீ ஏன் அதை வெளிப்படுத்தவில்லை?" என்றாள் சண்பகவல்லி.

வேலாயி உண்மையைக் கூறிவிடப் போகிறாள் என்று கருதிய ராஜநாயகம் அவளுக்கு மீண்டும் களவுப் பட்டம் கட்டி, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட வேண்டியதுதான் என்று பதற்றத்துடன் உள்ளே விரைந்தான்!

அவனைப் பார்த்து அதிர்ச்சி யடைந்த வேலாயி, "சின்ன யஜமான்! நீங்களா?" என்று கூவினாள்.

சண்பகவல்லி குழம்பித் திகைத்தாள். அவளை நோக்கி வேலாயி "இவங்க வீட்டிலேதான் அம்மா நான் சொன்ன கதை நடந்தது! ... சங்கிலியை யார் எடுத்தது என்று கேட்டீங்க? ஜெயிலுக்குப் போகும்போதே நான் அதைச் சொல்லவில்லையே! இனிமேலா சொல்லி விடுவேன்! இந்த மனசை விட்டு அந்த ரகசியம் என் ஆயுசுள்ள வரையில் வெளி வராது, அம்மா!" என்றாள்.

ராஜநாயகத்தின் உள்ளம் கூனிக் குறுகித் துடித்தது! கண் கலங்க 'வேலாயி! இந்தக் களவனை இப்போதும் காட்டிக் கொடுக்க விரும்பவில்லையே நீ! ஏன்?' என்பதுபோல் அவளைப் பார்த்தான்.

கனிவுடன் அவள் கண்கள் அவனுக்குப் பதிலிறுத்தன:—'உண்மை வெளியாகி யிருந்தால் மூர்க்கராகிய உன் அப்பா உன்னை வீட்டை விட்டுத் துரத்தி யிருப்பார்; இல்லாவிடில் ஜெயிலுக்கு அனுப்பினாலும் அனுப்பி யிருப்பார். நான் வளர்த்த பிள்ளையல்லவா நீ? உன் வாழ்க்கை பாழாவதை நான் விரும்புவேனா? அதனால்தான் அன்று ஜெயிலுக்குப் போகத் துணிந்தேன். என் அருமை ராஜா தன் மனைவியின் மதிப்பில் தாழ்ந்து விடக் கூடாது என்றுதான் இன்றும் உண்மையைச் சொல்லவில்லை!'

"இவள் நல்லவள் என்றுதான் எனக்குப் படுகிறது! இவளை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம் அல்லவா?" என்றாள் சண்பகவல்லி.

"என் தாய்க்குச் சமம் இவள். என் தந்தையின் மூர்க்கத்தனத்தால் தான் இவள் சிறைக்குப் போக நேர்ந்தது. இவள் குற்றமற்றவள் என்பது பற்றி அவரைத் தவிர எங்கள் யாருக்குமே துளியும் சந்தேகம் கிடையாது! இவளை ஆயுளுள்ளவரை பராமரிக்க வேண்டியது நம் கடமை!" என்றான் ராஜநாயகம்.

மனைவி தன்னை மிகவும் மட்டமாகக் கருதி விடுவாளே என்ற அச்சம் குறுக்கிட்டிருக்காவிடில் முழு உண்மையையும் ஒப்புக்கொண்டு அவன் கதறியிருப்பான்!



தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.



உரிமைப் பொருள்

பிலஹரி

ஒரு சில நிமிஷங்கள் கோதை அசந்து விட்டாள். நான் கூறியதை நம்பவில்லை என்று அவள் முகம் எடுத்துக் காட்டியது.

''என்ன இது! உண்மையாகத்தான் பேசுகிறீர்களா, இல்லாவிட்டால் விளையாட்டா?'' என்று அவள் கேட்டதும், எனக்கு ஏதோ சிடுசிடுப்புத்தான் உண்டாயிற்று.

''இதிலே என்ன விளையாட்டு? நிஜமாகத்தான் சொல்கிறேன். ராத்திரி வண்டிக்கே நான் கிளம்பப் போகிறேன்!''

அதைக் கேட்டு அடித்து வைத்த சிலையென நின்றுவிட்டாள் அவள்.

''நான் பேசுகிறது பொய்யென்று நினைத்தால், இந்தப் பையைப் பிரித்துப் பாரு! குழந்தைக்குப் பிடிச்ச மாம்பழக் கலர் மைசூர் சில்க் புடவை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன், ஆபீஸிலிருந்து வரும்போது. நாற்பது ரூபாய் விலை! இதோ தங்கசாலைக்குப் போய் அவளுக்குப் பிடித்தமான 'ஸ்வீட்' வேறு வாங்கணும்!''

''நன்றாக இருக்கிறது உங்கள் பேச்சு! கல்யாணமாகிப் புக்ககத்தில் கொண்டு விட்டு இன்னும் முழுசாக ஒரு மாசம்கூட ஆகவில்லை! அதற்குள் என்ன பார்வை வேண்டிக் கிடக்கு? கடன் தலைக்குமேலே இருக்கும்போது புடவை வேறு வேண்டியிருக்கா? ஏதாவது நான் முறைமை பார்த்து வாங்கிக் கொடுத்தாலாவது நன்றாக இருக்கும்! இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் 'மனசே ராஜான்னு' வாங்கிக் கொண்டு வந்தால்......''

''சரிதான், வாயை மூடு! என் குழந்தைக்கு நான் செய்கிறதுக்கு நாள் என்ன? முறைமையென்ன? அவள் விஷயத்திலே எனக்குக்

ணைக்குத் தேவையில்லை!'' உணர்ச்சி மிகுதியால் என் குரல் கரகரத்தது.

மூக்குக்கண்ணாடியைத் தோளில் இடித்துக் கொண்டாள் கோதை.

''ஆமாம்! குழந்தையைப் பாரு, குழந்தையை! அடுத்த வருஷமே அந்தக் குழந்தைக்கு ஒரு குழந்தை பிறந்தாலும் பிறக்கலாம்! இன்னும் மனசுக்குள்ளே உங்க அருமைப் பெண் பாவாடை சட்டை போட்டுக் கொள்கிற பச்சைக் குழந்தை என்ற எண்ணமோ என்னவோ? இப்படிக் கொண்டுவிட்ட ஒரு மாதத்துக்கெல்லாம் போய்ப் பார்த்தால் நாலுபேர்கள் நாலுவிதமாகப் பேசமாட்டார்களா? முதலில் மாப்பிள்ளையே தப்பாக நினைத்துக்கொள்ள மாட்டாரா?''

''இதிலே தப்பு என்ன இருக்கிறது? என் குழந்தையை நான் பார்க்கப் போகிறேன்! எப்படியோ ஒரு மாதம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்து விட்டேன்! இனிமேல் என்னால் தாளவே முடியாது! சௌகர்யப்பட்டால் குழந்தையை இங்கேயே அழைத்துக் கொண்டு வந்தாலும் வந்து விடுவேன்!''

கோதைக்குத் தூக்கிவாரிப் போட்டது!

''கல்யாணத்துக்குப் போட்ட கோலம்கூட அழியவில்லை! அதற்குள்ளே பிறந்த வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வரணும் என்கிறீர்களே! ஆனாலும், பெண்ணைப் பெற்றவர்களுக்கு இவ்வளவு பாசம் கூடவே கூடாது. இனிமேல் அவள் நம் பொருள் இல்லை! வேறு வீட்டுச் சரக்கு! ஞாபகம் இருக்கட்டும்!''

சற்று ஆத்திரத்துடன் பேசினாள் அவள். அதற்கெல்லாம் மசிந்து கொடுத்து விடுவேனா நான்? இரவு வண்டிக்கே கிளம்பிவிட்டேன்.

★

சீவி விருந்த காரிருளைக் கிழித்துக் கொண்டு கன வேகமாகச் சென்று கொண்டிருந்தது வண்டி. கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி இரண்டாகி விட்டது.

வெளியிலே மார்கழி மாதப் பனி மழை பெய்து கொண்டிருந்தது. வண்டியில் கூட்டம் என்னவோ கிடையாது. உள்ளேயிருந்த ஏழெட்டுப் பிரயாணிகளும் குளிருக்கு அடக்கமாக ஜன்னல் கதவுகளைப் போட்டுக்கொண்டு, குறட்டை விட்டுக் கொண்டிருந்தனர்.

வழக்கமாக இந்நேரமெல்லாம் இரண்டு தூக்கம் போட்டிருப்பேன், வீடாக இருந்தால். இப்போதுதான் உள்ளம் அலை பாய்ந்து கொண்டிருந்ததே. மருந்துக்குக் கூடச் சிறிதளவு நிம்மதி கிடையாது. விளக்கைச் சுற்றிச் சுற்றி வட்டமிடும் விட்டில் பூச்சியைப் போல், நினைவெல்லாம் என் பெண் பத்மினியைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

பத்மினிக்கு வயது என்னவோ பதினாறு ஆகிவிட்டது. காலம் அவள் வயதை விழுங்கி, உடலை வளர்த்து விட்டது. உள்ளமும் கூடவே வளரக் கூடாதா? வயது வந்த பச்சைக் குழந்தை அவள்— என்னைப் பொறுத்த மட்டில். ஏன்? சென்ற மாதம் ஒன்பது கஜம் பட்டுப் புடவை சலசலக்க மணையில் உட்கார்ந்து கொண்டு, கணவன் கையால் கழுத்தில் மங்கள நாண் தரித்துக் கொண்டபோதுகூட, அவள் வளர்ந்து விட்டதாக என் கண்ணுக்குப் புலப்படவில்லை. சின்னஞ்சிறு கவுன் அணிந்து கொண்டு, தலையில் இரட்டைப் பின்னல் அசைந்தாட, காலில் வெள்ளித்தண்டை 'கலீர் கலீர்' என்று ஒலி எழுப்ப ஓடி வரும் பச்சிளம் குருத்தாகத் தானே எனக்குத் தோன்றினாள்?

இவ்வளவுக்கும் எனக்கு வேறு குழந்தைகளே கிடையாதா? பத்மினிக்குப் பிறகு ரேவதியும் முரளியும் இருக்கத்தானே செய்கின்றனர். ஆனால் பத்மினியிடம் நான் கொண்டுள்ள மட்டற்ற பிரேமைக்கு முன், அவர்களிடம் நான் கொண்டிருந்த பாசம் ஒரு ஈடாக முடியுமா? அவர்களும் என்னுடைய குழந்தைகள்தான்; பத்மினியும் என்னுடைய குழந்தைதான்.

அவளிடம் மட்டும் ஏன் இவ்வளவு எல்லையில்லாத பற்றுதலை எனக்கு ஆண்டவன் உண்டாக்கி விட்டான்?

காலையில் என்னை எழுப்புவது பத்மினிதான். அறையை விட்டு வெளியே வந்தால், கிணற்றடியில் பற்பொடி தயாராக இருக்கும். பல் துலக்கிவிட்டு வரவேண்டியதுதான், ஆவி பறக்கும் காப்பியுடன் காத்துக் கொண்டிருப்பாள் குழந்தை. அதைக் குடித்துவிட்டு, மாடிக்குச் சென்று சற்று நேரம் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருப்பேன். அரை மணிக்கெல்லாம், குழந்தை தடதடவென்று மாடி ஏறி வந்து விடுவாள்.

''வெந்நீர் ஆறிப் போகிறதே! சூடாக ஊற்றிக் கொண்டால்தானே, அப்பா, உடம்புக்கு இதமாக இருக்கும்! கீழே இறங்கிப் போயேன்!'' என்று அன்புக் கட்டளை பிறக்கும்.

சாப்பிட உட்கார்ந்தாலும், அவள்தான் பரிமாற வேண்டும். தாயாரைக்கூட அருகில் விடமாட்டாள்.

★

இரண்டு மாதங்களுக்கு முன்பு.

பத்மினிக்கு நிச்சயமாகி விருந்த வரனைப் பற்றி எனக்கும் கோதைக்கும் எப்படியோ சர்ச்சை எழுந்து விட்டது. நான் ஏதோ சொன்னேன். அவளுக்கு ஏன் தான் அப்படிக் கோபம் வந்ததோ தெரியவில்லை. கொஞ்சம் நிதானம் இழந்து பேசி விட்டாள். அவ்வளவு நேரம் பத்மினி எங்கிருந்தாளோ தெரியாது. புயல் மாதிரி உள்ளே நுழைந்தாள்.

''என்னம்மா, இது? என்னவோ அப்பாவை ஓட ஓட விரட்டுகிறாயே! நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்! பாவம், அவருக்கும் வாய் கிடையாது! கோவில் மாடு மாதிரி தலையசைக்கிறார்! நீயாகப் பொரிந்து தள்ளுகிறாயே!...'' என்று அக்கறையுடன் என் பக்கம் பேச ஆரம்பித்து விட்டாள்.

''ஆமாம்டி ஆமாம்!... என்னைப் பெற்றவள் நீதானே! இனிமேல் உன்னிடம் கற்றுக் கொள்கிறேன்! எனக்கு இல்லாத அக்கறை உனக்கு வந்துவிட்டது!'' என்று கோதை பெண்ணுக்குப் பதில் கூறினாள்.

அப்படி உயிருக்குயிரான பத்மினி, வீட்டில் ஒரு மாதம் இல்லை. விவாகம் நடந்த கையுடன் கணவன் வீட்டுக்கு வண்டியேறி விட்டாள். இந்த ஒரு மாதகாலமாக நான் படும் வேதனை கொஞ்சமா, நஞ்சமா? எப்போதும் குழந்தை



நாகரீகபெண்கள்
நம்பிக்கையுடன்
அணிவது
TRAYONS
"டிரெயான்ஸ்"
ரேயான் நூல்களினுல்
நெய்யப்பட்ட
ஆடைகளேயே
இந்தியாவில் முதல் முதலாக சிறந்த ரசாயன முறையில் தயாரிக்கப் பட்ட உன்னத நூல், "டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள்.
"டிரெயான்ஸ்" ரேயான் நூலின் விசேட குணங்கள் – விலைமலிவு – நீண்டகால உழைப்பு – பகட்டான உடைகளுக்கு ஏற்றது.
"டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள் 120, 150. டினேயர்களில் தயாரிக்கப்பட்டு எங்களால் வினியோகிக்கப்படுகிறது.
டிஸ்டிரிபியூட்டர்கள்:
ரேயான் டிரேடர்ஸ்
பிரைவேட் லிமிடெட்
61, செம்புதாஸ் தெரு, சென்னை-1
தந்தி: "CELYARN"
கிளைகள்:
போன்: 253
தந்தி: "CELYARN"
சேலம்
தந்தி: "CELYARN"
மதுரை
தந்தி: "RAYONS"
கோவை


விரைவில் வருகிறது!
மாடர்ன் தியேட்டர்ஸ்
தலை கொடுத்தான் தம்பி
டைரக்ஷன் T.R. சுந்தரம்
கதை, வசனம்
முரசொலி மாறன். M.A.
இசை
விஸ்வநாதம், ராமமூர்த்தி.

என்னையே சுற்றிச் சுற்றி வருவதைப் போன்றதொரு பிரமை. வீட்டிலும் நிம்மதி இல்லை; வெளியிலும் நிம்மதி இல்லை.

இறுதியில், இனிமேல் தாளமுடியாது என்றதொரு நிலை வந்தவுடன்தான், திடீரென்று கிளம்பி விட்டேன். முடிந்தால் குழந்தையை அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டும். இரண்டு மூன்று மாதங்கள் நம்மிடம்தான் அவள் இருக்கட்டுமே. அதற்குள் என்ன, குழந்தைக்கு வீடு, சம்சாரம், பொறுப்பு இதெல்லாம் வேண்டியிருக்கிறது?

வண்டி ஸ்ரீரங்கத்தை அடையும்போது, மணி சரியாக ஐந்து. இன்னும் இருள் நன்றாகப் பிரியவில்லை.

பத்தே நிமிஷங்களில் மாட்டு வண்டியில் குழந்தையின் வீடு வந்து சேர்ந்தேன். அவசரத்துடன் வண்டியிலிருந்து கீழே குதித்தேன்.

வீட்டு வாசலில் யாரோ கோலம் இட்டுக் கொண்டிருந்தனர். இருளில் முகம் தெரியவில்லை. ஒருவேளை வேலைக்காரியாக இருக்கலாம். சட்டைப் பைக்குள் கையை விட்டு, வண்டிக்காரனுக்குச் சில்லறை எடுத்துக் கொண்டிருந்தேன்.

''யாரது?... அப்பாவா?...''

திடுக்கிட்டுத் திரும்பினேன். கையில் கோல டப்பியுடன் நின்றுகொண்டிருந்தாள் பத்மினி. இந்தக் கொட்டுகிற பனியில், இவ்வளவு விடியற்காலை நேரத்தில் எதற்காகக் குழந்தை எழுந்து கோலம் போடவேண்டும்?

''என்ன அப்பா இது? அப்படியே நின்று விட்டாயே! ஏது இப்படிச்சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென்று? ஏதாவது ஆபீஸ் காரியமாக வந்தாயா? உள்ளே வா!''

எடுத்தவுடனே ஏமாற்றம்தான் எனக்கு! இரவெல்லாம் பொட்டுத் தூக்கம் கூட இல்லாமல், விடிய விடியக் கண் விழித்து அவளைப் பார்க்க ஓடோடி வந்திருக்கிறேன். அவள் என்னடா வென்றால் ''ஆபீஸ் காரியமாக வந்தாயா?'' என்கிறாள்.

உள்ளே நுழைந்தேன். வீடெல்லாம் வெகு சுத்தமாக, பார்வையாக இருந்தது.

''மாப்பிள்ளை எங்கே அம்மா?'' என்றேன்.

''மாப்பிள்ளையா?.........வடக்கு வாசல் போயிருக்கிறார்! இப்போ போனால் நல்ல காய்கறியெல்லாம் வந்திருக்கும்! அதனால் தான்.........புழக்கடையிலே போய்ப் பல் தேய்த்துவிட்டு வா!......அதற்குள் காப்பி கலந்து விடுகிறேன்!''

''காப்பி கிடக்கட்டும்!...முதல்லே இங்கே வா!...... உனக்கு என்னவெல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன், பாரு!'' என்றேன், அவள் இன்னும் பச்சைக் குழந்தை என்ற நினைவுடன்.

''அதுக்கு என்னப்பா அவசரம்!......மெதுவாகப் பார்த்தால் போகிறது!''

பத்மினியை உற்றுப் பார்த்தேன். பழைய பத்மினியா அவள்! ஒரு மாதம் முன்பு வரை சதா குறு குறு வென்ற பார்வை தெறித்தோடும் அந்த முகத்தில், ஓர் தனிப்பட்ட அடக்கம் தென்பட்டது. படபட வென்று பொரிந்து தள்ளும் பேச்சிலே, இப்போது அபூர்வ நிதானம். பூமி அதிருவது போல் நடக்கும் நடையிலே, இப்போது சிந்திக்கவும் முடியாத அவையடக்கம். அந்தக் குழந்தைத்



கமலா:—டேய் மணி! உன்மேலே ஒரு எட்டுக்கால் பூச்சிடா.

மணி:—'டபாய்'க்காதே! அது எட்டுக்கால் பூச்சிச் சட்டைன்னு எனக்கு நன்னாத் தெரியும்!

கமலா:—இல்லேயடா! ஒரு நெஜ எட்டுக்கால் பூச்சி இருக்குடா!

தனம், அந்தக் குறுகுறுத்த பார்வை, அந்த ஓட்டம் எங்கே மறைந்துவிட்டன? ஒரு மாதத்துக்கு முன்பு வரையில் பச்சைக் குழந்தையாகத் தோன்றிய என் கண்களுக்கு, இப்போது எப்படித் திடீரென்று பெண்மையின் பூரிப்போடு தாய்மைக் கோலம் தாங்கியவளாகத் தோன்றுகிறாள்?

பெட்டியிலிருந்து நான் வாங்கி வந்த புதுப் புடவையை எடுத்துக் கொடுத்தேன். என் கையிலிருந்து வாங்கிப் பார்த்தாள் பத்மினி.

''புடவை நன்றாகத்தான் இருக்கிறது. விலை அதிகமாக இருக்குமே! இப்போது எதுக்கு அநாவசியமா இதெல்லாம்? கல்யாணத்துக்கு வாங்கின புடவைகளெல்லாம் அப்படியே இருக்கின்றனவே? பண்டிகை பருவத்துக்குச் செய்தால் போதாதா? இந்தக் கல்யாணக் கடனெல்லாம் அடைவதற்குள்ளே ரேவதி மதமதவென்று வளர்ந்து விடுவாளே! இப்படிக் கண்ணை மூடிக் கொண்டு செலவு செய்தால் எப்படி...''

நான் பதிலே பேசவில்லை. என்னவெல்லாமோ நினைத்து வந்தேன். நடப்பது வேறொன்றாக இருக்கிறதே. நேற்று வரையில் என்னுடன், என் பொருளுடன் உரிமை கொண்டாடி வளர்ந்த அதே பெண்ணுக்கு இன்று என் பொருள்—என் அருமை—வேற்றுமையாக ஏன் தோன்றுகிறது? அந்தப் பழைய பாத்தியம் எப்படி மறைந்து போய் விட்டது?

பகல் பொழுது, மெதுவாகக் கரைந்து கொண்டு வந்தது. இரவு வண்டிக்கே ஊருக்குக் கிளம்பிப் போய்விட வேண்டும். ஆபீஸில் லீவு கிடையாதே!

இரண்டு வார்த்தை, அந்தரங்கமாக அவளுடன் பேச வேண்டும் என்ற அவா எனக்கு. அவளுக்கு வேலை சரியாக இருந்தது.

"முன்றைக்கு அவருக்கு லீவு அப்பா! வாய்க்கு ருசியாக டிபன் பண்ணனும்!...... தினம்தான் டிபன் ஹோட்டலில் சாப்பிடுகிறார்!" என்று சொல்லி விட்டு, அடுப்பங்கரையில் அமுங்கிவிட்ட பெண்ணைப் பார்த்ததும், எனக்கு ஆத்திரம்தான் ஏற்பட்டது. நான் வந்திருப்பது ஒரு பொருட்டல்ல. நேற்று உறவாகி இருக்கும் 'அவர்' காரியம் முக்கியமாம்!

எவ்வளவுக் கெவ்வளவு உற்சாகத்துடன் நேற்று இரவு புறப்பட்டு வந்தேனோ, அவ்வளவுக்கவ்வளவு மனத்தாங்கல்தான் தற்சமயம் எஞ்சி நின்றது.

இங்கே குழந்தைக்கு என்னவோ ஒரு குறையும் இருப்பதாகத் தோன்றவில்லை. கடல் போன்ற பெரிய வீடு; அதுவும் சொந்தத்தில். கண் நிறைந்த கணவன். கை நிறைய வருமானம். இருவர் அந்நியோந்நியத்துக்கும் குறைவு இல்லை. இருந்தும், என் உள்ளத்தில் ஓர் ஏக்கம் குடிகொண்டுதான் இருந்தது. நேற்றுவரை என்னுடன் மானசீகமாக ஒட்டிக் கொண்டிருந்த குழந்தை, இன்று மனத்தளவில் தொலைவில் போய் விட்டாளே என்ற வருத்தம்தான். ஒரு வேளை இதெல்லாம் என் பிரமைதானோ?

இன்னும் ஒரே ஒரு நப்பாசை உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருந்தது. குழந்தையை எப்படியாவது என்னுடன் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்பதுதான். ஊருக்கு என்றால் குதி போட்டுக் கிளம்பாமலா இருந்து விடுவாள்?

இரவு மணி எட்டரை இருக்கும்.

பத்து மணிக்கு வண்டி. இன்னும் அரை மணியில் கிளம்ப வேண்டும். உள்ளே குழந்தை ஏதோ காரியமாக இருந்தாள். மாப்பிள்ளையிடம் பேசிக்கொண்டிருந்த நான், மெதுவாக என் விருப்பத்தைத் தெரிவித்தேன். அவர் சிரித்தார்.

"எனக்கு ஆட்சேபணை ஒன்றுமில்லை. அவளைக் கேட்டுப் பாருங்கள். வந்தால், அழைத்துப் போங்களேன்!" என்று அவர் கூறி விட்டார்.

சற்றே உற்சாகம் ஏற்பட்டது எனக்கு. சமையலறைக்குச் சென்றேன்.

"பத்மினி!" பாத்திரம் கழுவிக் கொண்டிருந்த குழந்தை திரும்பிப் பார்த்தாள்.

"சீக்கிரம் உன் துணிமணிகளை யெல்லாம் எடுத்துக் கொள்! ஊருக்குக் கிளம்ப வேண்டும்!" என்றேன்.

வியப்புடன் என்னைப் பார்த்தாள்.

"ஊருக்கா? எந்த ஊருக்கு?" என்றாள்.

"நம் வீட்டுக்குத்தான் அம்மா! மாப்பிள்ளையிடம் கேட்டு விட்டேன்! சரியென்று சொல்லி விட்டார்!" என்றேன்.

குழந்தை லேசாகச் சிரித்தாள்.

"உன் மாப்பிள்ளைக்கென்ன? எது கேட்டாலும் தலையசைத்து விடுவார். கோவில் மாடு மாதிரி! தனக்காக ஒன்றும் தெரியாது. வயசு ஆகிவிட்டதே யொழியப் பச்சைக் குழந்தைதான் இன்னும்! இலை பார்த்துப் போடக்கூட ஆள் இல்லா விட்டால், பட்டினி கூட இருந்து விடுவார்...நான் எப்படி வருவது சொல்லு! ஹோட்டல் சாப்பாடு அவருக்கு ஒத்துக் கொள்ளாதே. இங்கு வீடு வாசல் எப்படி ஆவது? இப்போது ஊருக்கு வந்து நான் என்ன செய்யப் போகிறேன்?" நிதானமாகத்தான் கூறினாள் அவள்.

நான் அயர்ந்து விட்டேன். நேற்று வரை என்னைப் பற்றி என்னவெல்லாம் நினைத்திருந்தாளோ, இன்று அதே அடிப்படையில் வேறொரு ஆத்மாவிடம் அவள் கவனம் சென்று விட்டது. இத்தனை நாட்கள் என் உரிமைப்பொருளாக நான் நினைத்துப் போற்றி வந்தது, இன்று வேறொருவரின் உரிமையாகி விட்டது. ஆயிரம் இருந்தாலும் பெண் பெண்தான்.

வாசலில் மாட்டு வண்டி வந்து நின்று விட்டது. ஊருக்குக் கிளம்பி விட்டேன்.

"அப்பா!"

வாசற்படி இறங்கியவன், திரும்பிப் பார்த்தேன். பத்மினி நின்று கொண்டிருந்தாள்.

"என்னம்மா வேணும்?" என்றேன் பரிவுடன்.

குழந்தை தயங்கினாள்.

"பரவாயில்லை! சொல்லம்மா!" என்றேன்.

"ஒன்றுமில்லை அப்பா! நான் சொல்கிறேனென்று தப்பா நினைத்துக்கொள்ளாதே!...... என்னைப் பார்க்கிறதுக்கு என்று ஒரு நாளைக்கு இவ்வளவு செலவழித்துக்கொண்டு வந்துவிட்டுப் போகிறாயே! என் க்ஷேமலாபத்துக்கு ஒரு முக்காலணா கடிதாசு போட்டால் போதாதா, அப்பா? நமக்கு இதெல்லாம் கட்டி வருமா? உன் மனசு எனக்குத் தெரியும். பெற்றவர்களுக்குப் பெண்ணிடம் இவ்வளவு பாசம் கூடாதுதான் அப்பா! இன்னும் முரளி படிப்பை முடிக்க வேண்டும்! ரேவதியை ஒருத்தன் கையிலே ஒப்படைக்கணும்!...... நிதானமாகவே நடத்துக்கணும், அப்பா!... எனக்கு மாத்திரம் உன்மேல் பிரியமில்லையா? இருந்தாலும், சிக்கனமாக இருக்கணும்....... என்மேல் கோபமா?"

என் இதயம் கரைந்தது. கண்களுக்கு வெம்பனி விளிம்பு கட்டியது. கண்களைத் துண்டால் ஒற்றி எடுத்தேன். என் குழந்தை எனக்கே புத்தி சொல்ல இவ்வளவு சமர்த்தாகி விட்டாளா?

"இல்லேம்மா குழந்தை! எனக்குக் கொஞ்சம்கூட வருத்தமோ கோபமோ கிடையாது! இப்போதுதான் எனக்கும் உலகம் புரிந்ததம்மா! உனக்குக் கூட அடிக்கடி கதை சொல்வேனே நினைவிருக்கிறதா; பிரணவாகாரத்தின் மகிமையைக் குமரன்தான் பரமசிவனுக்கு உபதேசம் செய்தானென்று! அப்போ, பரமசிவனின் மனசு சங்கடப்பட்டிருக்குமா, இல்லாவிட்டால் பூரித்திருக்குமான்னு நீயே கேட்பாயே!......கட்டாயம் பூரித்துத்தான் இருக்கும் என்று இப்போதுதான் எனக்கும் தோன்றுகிறது! சகல சௌபாக்கியத்துடன் நீ நன்றாக வாழணும்! அதுதான் அம்மா, என் ஒரே பிரார்த்தனை! வரட்டுமா?"

நேற்று இதே நேரம் என்னுள் குடி கொண்டிருந்த அயர்வு, சஞ்சலம், சலனம், எதுவும் இப்போது எங்கோ ஓடி ஒளிந்து விட்டன. உள்ளத்தில் பொங்கி வழியும் திருப்தியுடன் தான் வண்டியில் ஏறினேன்.


வனப்புடன் திகழ...
Remy
BORATED
TALCUM POWDER
சந்திரகாந்தா
ரெமி
ஸ்நோ &
பவுடர்
AVRA-591

தமிழ் கூறும் நல்லுலகம்

ரூர்கேலா இளம் தமிழ்த் தொண்டர்கள் மார்ச் 29-ந் தேதி கல்காவியம் தந்த செந்தமிழர் கம்பனது விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள். விழாவுக்குத் திரு எஸ். வெங்குஸ்வாமி அவர்கள் தலைமை வகித்தார். பல இளைஞர்கள் கம்பனது கவிதை நடையின் சிறப்பு பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

✲

செம்பூர் தமிழ்ச் சங்க நான்காவது ஆண்டு விழா 25-3-59 புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு டவுன்ஷிப் காலனி திறந்த வெளியரங்கில் திரு எஸ். நடராஜன் எம்.ஏ., எம்.ஈடி. அவர்களின் தலைமையில், கருத்து மிக்க கலை நிகழ்ச்சிகளோடு நடைபெற்றது. திரு என். கே. அமீர்கல்தான் திறப்புரை ஆற்றினார். பிரதம விருந்தாளி திரு மணிலால் எஸ். டோஷி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கும் இளைஞர்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.

மற்றும் பள்ளி மாணவிகளின் கோலாட்டமும், சங்க மாணவிகளின் பரத நாட்டியமும், இலட்சிய நாடக மன்றக் குழுவினர்கள் நடித்த "எது வாழ்வு" நாடகமும் அனைவருக்கும் அரிய கலை விருந்தாக அமைந்தன.

✲

கல்கத்தா பாரதிய கலாநிகேதன் நாடகக் குழுவினர் தங்கள் இரண்டாவது விழாவைத் திரு கோமதி சுவாமிநாதனால் எழுதப்பட்ட "மனமே மயங்காதே" என்ற நாடகத்தை ஏப்ரல் ஐந்தாம் தேதி நடித்துக் கொண்டாடினர்.

✲

பூனாவில் ஸ்ரீ ஷண்முகானந்த சபையாரால் பங்குனி உத்திர விழாவை முன்னிட்டு ராஸ்தாபெட் ஸ்ரீ கணபதி கோவிலில் மார்ச் 15-ந் தேதி முதல் இருபது தினங்களாக ஸ்ரீ வில்லிப்புத்தூர் "சொல்லின் செல்வன்" ராமானுஜ அய்யங்கார்சுவாமிகள் "ஸ்ரீஸ்காந்த புராணம்" உபன்யாசம் செய்தார். ஏராளமான பக்தர்களை ஆனந்த பரவசமாக்கிய ஸ்ரீமான் ஐயங்கார் அவர்களுக்குப் பொதுமக்களின் சார்பில் ஷண்முகானந்த சபையினர் விசேஷ வெகுமதிகளுடன் ஒரு தங்கப் பதக்கமும் வழங்கினர்.

விழாவை ஏப்ரல் மாதம் 4-ந் தேதி "ஸ்ரீ வள்ளி பரிணயத்துடன்" சிறப்பாகக் கொண்டாடினர்.

✲

பூனா ஹரிஹர பஜனை சமாஜத்தின் ஆதரவில் ராஸ்தாப்பேட்டை கணேசர் ஆலயத்தில் சாஸ்திர ரத்தினம் ஸ்ரீ கே. ஏ. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் ஏப்ரல் 9-ந் தேதியிலிருந்து 19-ந் தேதி வரை வால்மீகி ராமாயண உபன்யாசம் செய்தார். பூனாவிலுள்ள தென்னிந்திய மக்கள் இப் பிரவசனத்தைக் கேட்கத் திரளாகக் குழுமியிருந்தனர். அது தவிர ஒவ்வொரு ஞாயிறன்றும் 'சாந்தோக்கிய உபநிஷத' உபன்யாசங்களும் செய்து உபநிஷத்தின் பெருமையை எடுத்துரைத்தார்.

✲

குத்தாலம் டவுன் கிளப்பில் கழக உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு பிச்சையா சோழகர் கம்பராமாயண சுந்தரகாண்ட விளக்கவுரை யாற்றி வந்தார். அவரைப் பாராட்டி ஏப்ரல் 1-ந் தேதி நடந்த விழாவுக்கு ஸ்ரீ ரங்கசாமி ரெட்டியார் தலைமை வகித்தார்.

✲

நாக்பூர் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் ஆதரவில் விதர்ப்ப சாஹித்ய சங்கத்தில் ஏப்ரல் 8-ந் தேதி குமாரி கமலாவும் குமாரி ராதாவும் நடன விருந்தளித்தனர்.

மேற்கு ஜெர்மனியிலுள்ள ஸ்டட்கார்ட் நகரத்தின் டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் தென்னிந்தியாவின் பரதநாட்டியத்துக்கு ஒரு இடம் அளிக்கப்பட்டிருந்ததைக் கேட்கத் தமிழ் கூறும் நல்லுலகம் பெருமை கொள்ளுகிறது. அந்த வாய்ப்பு ஸ்டட்கார்ட்டில் அச்சகம் ஒன்றில் பதவி வகிக்கும் திரு கிருஷ்ண கே. ஈச்வரனின் மனைவி திருமதி சுசீலா கிருஷ்ணாவுக்குக் கிடைத்தது. இவர் பம்பாயிலுள்ள ராஜராஜேச்வரி கலா மந்திரத்தில் பரதநாட்டியம் பயின்று இளவயதில் போத்தார் கலாசாலை மன்றத்தில் அரங்கேறியவர்.



உருவகக் கதை

வண்டின் காதல்



பகல் பிறக்கும் பருவம்.

தன் பயணத்தை உற்சாகமாக ஆரம்பித்தது கருவண்டு. மனிதர்கள் கருவிழி போல் நிறம் பெற்ற வண்டு.

மனக் கவலை சிறிதுமில்லாமல் ஆடிப் பாடிப் பறந்து சென்றது.

குட்டையை நோக்கிப் பறந்தது.

குளிக்க அல்ல.

குளித்து விட்ட புதுமையுடன் இதழ் விரித்து மலர் முகம் காட்டி அவனை மகிழ்ச்சியுடன் வரவேற்கக் காத்திருந்த தன் காதலியைக் காண....

பெண்ணின் முகம் போன்றவள் வண்டின் காதலி.

''அன்பிற் சிறந்தவளே !'' என்று ரீங்காரம் செய்து வண்டு அவளிடத்தில் சென்றது. சூழ்ந்திருந்த நீரில் குளிர்ச்சியை எடுத்துக் கொண்டு காதலர்களுக்கு அளித்தது காற்று.

காதலி மெல்ல ஆடினாள்.

காதலன் பாடினான்.

''நிலவைப் புகழும் மனிதர்களைக் கண்டு எனக்குச் சிரிப்பு வருகிறது. நாம் பகலவனை எதிர்பார்ப்பது இவர்களுக்குத் தெரியவில்லை.....''

காதலியின் முகத்தில் நாணம் செம்மையை ஏற்றவில்லை; எப்போதுமே செம்மையானவள் அவள்.

காதலி மெல்ல ஆடினாள்.

காதலன் பாடினான்.

காதலன் பாட்டு ஓய்ந்தது.

காதலியின் ஆட்டமும் ஓய்ந்தது.

குட்டையின் ஓரத்திலுள்ள தவளைகள் கண்சிமிட்டின.

''நான் சென்று நாளை வருவேன்'' என்று கூறியது வண்டு.

தேனை உண்டவனுக்குப் போக மனமில்லை தான். என்ன செய்வது?

மறுநாளும் பயணம்தொடங்கியதுகருவண்டு.

போகும் வழியில் —

அதே மளிகைக் கடை, பிறகு அதே குச்சுக் குடிசை, கோயில், நந்தவனம்...அதே...

இல்லை...இல்லை...அன்று அதே இல்லை.. வழி தவறிப் போய் விட்டது.

வழி தவறியது முதலில் அதற்குத் தெரியவில்லை.

அந்த இடத்தில் நுழைந்தபோது அருவருக்கத் தக்க மணம். முறைகெட்ட காலத்தில் வீசும் மணம்.

வண்டு புனிதமானது. அந்த வீட்டினுள் அது நுழைந்து சென்றதில்லை. ஊர் மனிதர்கள் கூட அந்த வீட்டைப் பற்றி ஒரு மாதிரியாக...

இருந்தால் என்ன? வந்த சுவடு தெரியாமல் போய் விடலாம் என்று எண்ணிக் கொண்டு 'விர்'ரென்று பறந்தது கருவண்டு.

நேரமானால் காதலி காய்ந்திடுவாள்என்ற எண்ணம். மேலும் வேகமாய்ச் சென்றது.

''சிலுக் சிலுக்.''

அந்த வீட்டை விட்டு அதிவேகமாய்ப்போக வேண்டும் என்று நினைத்த எண்ணம் ஈடேறுவதற்குள்...

''சிலுக்...சிலுக்...''

வண்டு தன் விழிகளை அகலத் திறந்து பார்த்தது. அப்படியே சொக்கிப்போய் நின்றுவிட்டது.

பச்சை, சிவப்பு முதலிய எல்லா வண்ணங்களையும் ஆடையாக்கி அதனுள் அழகாய் அமர்ந்து கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

அந்த வீட்டைப் பற்றிச் சில மனிதர்கள் கேவலமாய் நினைத்ததற்கு இந்தப் பெண் காரணமல்ல; அவள் வேறு ஒருத்தி.

இந்தப் பெண்ணின் அழகைக் கண்டு மயங்கி நின்றது கருவண்டு.

ஆந்தை அலறியது.

தன்னை மறந்து அவள் அழகில் தன்னைப் புதைத்துக் கொண்டு அவளைச் சுற்றிச் சுற்றி வந்தது.

அவள் அலட்சியமாய் வண்ண ஆடைகளை நெய்து கொண்டு தேவகன்னிகையாய் நடமிட்டு வந்தாள். தன்னைப் போல் இறக்கையற்ற ஒருத்தி அந்தரத்தில் மாடமாளிகை கட்டிக்கொண்டு வாழ்வதைக் கண்டு அந்த வண்டு அங்கேயே தங்கி விட்டது.

முதலில் அந்த வீட்டைப் பற்றிக் கேவலமாய் நினைத்த வண்டு அவ்வீட்டில் புகுந்த மனிதர்களைப் போல் அதே பழியாய் இருக்க ஆரம்பித்து விட்டது.

ஆனாலும் அவளை நெருங்கும்படி இன்னும் சமயம் வாய்க்கவில்லை.

ஆனால் அவளோ வண்டை நாளுக்கு நாள் நெருங்கும்படி செய்து வந்தாள்.

இரண்டு முறைகள் சூரியனைக் கண்டும், ஒரு முறையும் காதலனைக் காணமல் ஏங்கித் தவித்து நின்றாள் வண்டின் காதலி.

அந்தப் பிரிவில் வெளுத்துச் சிறுத்துப் போய் விட்டாள் காதலி.

தன்னை அன்புடன் நேசித்த வண்டினை அவளால் மறக்க இயலவில்லை.

சுற்றியிருக்கும் குட்டை நீரின் மட்டம் சிறிது உயர்ந்தது. காரணம் காதலி அழுதாள்.

இவளை மறந்து வாழ்ந்த வண்டு அப்போது அலட்சியமாய் அங்கே பறந்தது.

''வண்டே!...வண்டே!...''

வண்டு மெல்லக் காதலியிடம் சென்றது. ''சீ அவள் அழகெங்கே, வண்ணங்கள் எங்கே, வாழும் சுகம் எங்கே? இவள் இங்கு குட்டையில் வாழும் நாற்ற வாழ்க்கை எங்கே?'' என்று வண்டு வெறுப்புடன் பேசியது.

''இனிமேல் என்னை அழைத்துத் தொந்தரவு செய்யாதே!''

''வண்டே! சென்ற நாட்களை யெல்லாம் மறந்து விட்டாயா?'' என்று உள்ளமுருகக் காதலனை வேண்டிக் கொண்டது காதலி.


பதில் சொல்லாமல் வண்டு பறந்தே போய் விட்டது. தேனுடன் அதன் காதல் மாய்ந்து விட்டது.

வண்டு வண்ண ஆடைக்காரியிடம் சென்றது. என்றுமில்லா உற்சாகம். தான் கட்டிய மாளிகையில் ஒய்யாரமாய் நடனம் செய்து ஆடிய அவளைக் கண்டு ஆனந்தக் கூச்சலிட்டது வண்டு.

அவள் கண்ணைச் சிமிட்டி கருவண்டை அழைத்தாள்.

வண்டுக்கு ஒரே மகிழ்ச்சி; பல ஆண்டுகள் தவம் செய்த பிறகு வரம் கிடைத்ததுபோல் மகிழ்ச்சி.

அவளுடன் கைகோத்து ஆனந்தமாக ஆடி இன்பமாய் வாழ்நாட்களைக் கழிக்க எண்ணி...



நேரே கட்டியிருந்த படியில் ஏறத் தொடங்கியது.

அவள் கைகாரி. நேரே பீடத்தை நோக்கிக் கருவண்டைத் திரும்பித் திரும் பிப் பார்த்துக்கொண்டே ஓடினுள்.

வண்டு தீராத ஆசையுடன் அவளே நோக்கி ஓடியது. ஆனுல் அவளேப்போல் ஓட முடியவில்லேயே. இருந்தாலும் ஆசை அயர்ச்சி அறியுமா? கால்கள் தள் ளாட அவளேத் தொடர்ந்தது வண்டு.

பீடத்தில் சிறிது நேரம் இருந்து, 'வா வா' என்று அழைத்த அவள் திடீ ரென்று இன்னெரு வழியில் அமைந்த படிக்கட்டில் ஓடத் தொடங்கினுள்.

வண்டுக்கு மூச்சு வாங்கியது.

திடீரென்று அதற்கு ஒரு யோசனே.

இரண்டு வழிகளுக்கும் குறுக்கே செல்ல லாம் என்று குறுக்கே...

'ஐயோ!'

வண்டின் கால்கள் இரண்டு வழிக ளிடையே அமைந்திருந்த வலேகளில் சிக்கிக்கொண்டு எடுக்கவும் முடியாமல், எழுந்திருக்கவும் முடியாமல்......?

''என்னேத் தூக்கிவிடு'' என்று கூறிக் கருவண்டு அசட்டுச் சிரிப்புச் சிரித்தது. அலட்சியமாக அவள் சிரித்தாள்!

கருவண்டு திடுக்கிட்டது. உற்சாகம், மகிழ்ச்சி, மோகம்—இவை அடங்கிய ஒரு மாயையைக் காதலென்று நினேத்து வலேயிற் சிக்கிய பைத்தியக் காரத் தனத்தை ஒருகணத்தில் உணர்ந்து விட்டது கருவண்டு. முன்னிலும் ஏளன மாக அவள் சிரித்தாள்.

கருவண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டது. காய்ந்த நெருஞ்சிமுள்ளேத் தேய்த்துப் போட்டாற் போன்ற அரு வருக்கத்தக்க முகமும், மக்கிய குச்சியை ஒடித்து வைத்தாற்போலக் கால்களும் கருவண்டுக்குக் குமட்டியது.

மறுபடியும் அவள் சிரித்தாள்.

''ஏய், பைத்தியக்கார வண்டே!''

அவமானத்துடன் தலே குனிந்திருந் தது வண்டு.

''...என்னே நம்பி வந்து நன்றுக என் வலேயில் சிக்கிக்கொண்டு விட்டாய்...''

''இல்லே! நான் உன்னேக் காதலிக் கிறேன்...''

''...இந்த வார்த்தையை எங்கு கற்றுக் கொண்டாய்? நீயாக நினேத்துக் கொண்ட ஒன்றுக்குக் காதல் என்ற பெயர் சூட்டி, அந்தப் பெயரில் அக்கிர மங்களேச் செய்கிருய். மனிதர்களிடம் கற்றுக் கொண்டாயோ?''

''...இல்லே நிச்சயமாய் நான் உன்னேக் காதலிக்கிறேன்...நீயும் என்னேக் காத லித்தாயே?''

''நானு...நான் உன்னேக் காதலித் தேனு...உன்னிடம் நான் காட்டிய பரிவு உன்னே என்னுடையவளாக ஆக்கிக் கொள்வதற்கு...''

வண்டு இதைக் கேட்டு அளவில்லா மகிழ்ச்சியடைந்தது. மனிதக் காத லர்கள் இப்படிப் பேசினுல் 'காதல்' என்று அர்த்தம்! இது அதற்குத்தெரியும்.

''அதைத்தான் காதல் என்கிறேன்.''

''சீ...உன் உள்ளத்தை என் உள்ள மாக ஆக்கிக் கொண்டால் அது காதல். உன் உயிரை என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்னுடையதாக ஆக்கிக் கொள்ளப் போகிறேன். மனி தர்களிடம் கொஞ்சமாய் இருக்கிற காதலேக் கண்ட நீ நிறைந்திருக்கும் இந்த வேஷத்தைக் காணுமல் போய் விட்டாயே.''

அவளுக்குப் பசி அதிகம். வண்டைச் சுற்றி முன்பிருந்ததைக் காட்டிலும் அதிக ஆவேசத்துடன் வலே பின்னியது.

ஏங்கிச் செத்திருந்த காதலிமேல் பாய்ந்து பறித்தெடுத்தான் மனிதன் ஒருவன். எடுத்துக் கரையில் கைகொட் டிச் சிரித்த பெண்ணெருத்தியிடம் காண் பித்தான்.

அதுதான் மனிதர்கள் காதல், அப் போதுதான் ஆரம்பமாகியது என்பதை உணர்ந்து கொண்டது வண்டின் காதலி.

அவன் கையில் சிறிது நேரம் அமர்ந் திருந்து பலவித அல்லல்களுக்குள்ளா ளுள் வண்டின் காதலி.

அதன் உயிர் பிரிந்துகொண்டு வந்தது.

திடீரென்று அதை மனிதன் கசக்கி ஞன்; எதிரே நின்றிருந்த பெண்ணேக் கண்டு ஏதேதோ கோபமாய்ப் பேசினுன்.

பெண் திரும்பி இன்னெரு வழியே போய் விட்டாள். இவன் எதிர்த் திசை யில் போய் விட்டான்.

சாகும் தறுவாயிலும் இந்த மனித னுடைய போலிக் காதலேக் கண்டு ஈனச் சிரிப்புச் சிரித்தாள் வண்டின் காதலி.

அவளேத் தூர விட்டெறிந்தான் மனிதன்.

குப்பை மேடு.

வண்டின் காதலி துவண்டு, சில்லிட்டு அலங்கோலமாய் விழுந்து கிடந்தாள்.

அதன் அருகில் வலேயோடு சுற்றிப் பின்னப்பட்டுத் தூக்கி யெறியப்பட்ட வண்டும் வந்து விழுந்தது.


இரண்டுக்கும் மூச்சு முட்டிக் கொண் டிருந்தது.

''காதலியே...!''

அகன்ற விழிகளே விழித்து விட்டுக் காதலனேக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் காதலி.

''உலகத்திலே நம்முடைய காதல்தான் கடைசிக் காதல்...''

குப்பையோடு குப்பையாகக் கலந்து விட்டார்கள் காதலர்கள்.


REX
ரெக்ஸ் " பானங்களின் ராஜா "
ஆரஞ்சு ஸ்க்வாஷ் . லெமன் ஸ்க்வாஷ் . லைம்
ஜூஸ் கார்டியல் . லெமன் பார்லி . ஸிரப்ஸ்
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம். (இந்) பிரைவிட்.
பம்பாய் 1
இந்தியாவிற்கான ஏஜெண்டுகள் :
பாரி அன்டு கோ. லிமிடெட்.

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்யரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விவரம்

தங்கும் இடங்கள் வழக்கம்போல். மற்ற விபரங்களுக்கு எழுதவும்

ஊர்	தேதி	நேரம்
தாராபுரம்	1	காலை 8-30 to 9-30
பழனி	1	காலை 10-30 to 11-30
உடுமலைப்பேட்டை	1	மாலை 3 to 4
பொள்ளாச்சி	1	மாலை 5 to 6
பாலக்காடு	2	காலை 9 to 11
,,	2	மாலை 3 to 5
கோயமுத்தூர்	3	காலை 9 to 11
,,	3	மாலை 2 to 4
மேட்டுப்பாளையம்	3	மாலை 5 to 6
சத்தியமங்கலம்	4	காலை 8 to 9
கோபி	4	காலை 10 to 11
பவானி	4	மாலை 2 to 3
மேட்டூர் அணை	4	மாலை 4-30 to 5-30
ஈரோடு	5	காலை 9 to 11
திருப்பூர்	5	மாலை 4 to 5-30
திருச்சி	6	காலை 11 to மாலை 6
தஞ்சாவூர்	7	காலை 7 to 9
கும்பகோணம்	7, 17, 27	காலை 10 to மாலை 5
சீர்காழி	8	காலை 7 to 8-30
மாயூரம்	8	காலை 9 to 11
நன்னிலம்	8	மாலை 2 to 3
நாகப்பட்டினம்	8	மாலை 5 to 6-30
திருவாரூர்	9	காலை 7-30 to 9-30
விஜயபுரம்	9	காலை 10 to 11
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2 to 3-30
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 to 6-30
புதுக்கோட்டை	10	காலை 8 to 10
பொன்னமராவதி	10	காலை 11-30 to 12-30
தேவகோட்டை	10	மாலை 2-30 to 3-30
காரைக்குடி	10	மாலை 4-30 to 6
பரமக்குடி	11	காலை 8 to 10
ராமநாதபுரம்	11	மாலை 3-30 to 4-30
சிவகங்கை	11	காலை 8-30 to 10
மதுரை	11	காலை 11 to 12-30
	11	மாலை 3 to 6

ஊர்	தேதி	நேரம்
கோவில்பட்டி	12	காலை 8 to 9
திருநெல்வேலி ஜங்.	12	மாலை 3 to 5
திருநெல்வேலிடவுன்	12	மாலை 5 to 6
அம்பாசமுத்திரம்	13	காலை 8 to 9-30
தென்காசி	13	மாலை 3 to 5
ராஜபாளையம்	14	காலை 9 to 10
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை 10-30 to 11-30
பெரியகுளம்	14	மாலை 3 to 4-30
திண்டுக்கல்	15	காலை 8 to 9-30
நாமக்கல்	15	மாலை 3 to 4-30
ராசிபுரம்	15	மாலை 5-30 to 6-30
சேலம்	16	காலை 9 to 11
,,	16	மாலை 3 to 5
தருமபுரி	17	காலை 9 to 10-30
கிருஷ்ணகிரி	17	மாலை 3-30 to 5
மல்லேஸ்வரம் / பெங்களூர் - 3	18	காலை 9 to 11 / மாலை 3 to 5
திருப்பத்தூர் (N.A.)	18	காலை 8-30 to 10
குடியாத்தம் (N.A.)	18	மாலை 2 to 3-30
சித்தூர் (ஆந்திரா)	18	மாலை 5 to 6-30
வேலூர் (N.A.)	19	காலை 9 to 11
பெரிய காஞ்சிபுரம்	19	மாலை 3 to 5
சென்னை	20	காலை 9 to 11
,,	20	மாலை 3 to 5
செங்கற்பட்டு	21	காலை 9 to 10-30
திண்டிவனம்	21	மாலை 2-30 to 4
விழுப்புரம்	21	மாலை 5 to 6
திருவண்ணாமலை	22	காலை 8-30 to 10
திருக்கோவிலூர்	22	காலை 11 to 12
கடலூர் (N.T.)	22	மாலை 4 to 5-30
சிதம்பரம்	23	காலை 9 to 10-30
விருத்தாசலம்	23	மாலை 3-30 to 5
கள்ளக்குறிச்சி	24	காலை 8-30 to 9-30
ஆத்தூர்	24	காலை 11 to 12
துறையூர்	24	மாலை 3-30 to 5

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலை

H. O. கரூர்

கிளைகள் :
1. 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்
2. கணேஷ் பில்டிங்ஸ், 2/2, லிங்க் ரோடு, பெங்களூர் - 3

குறிப்பு: குழந்தைகளுக்குக் கட்டி வராமல் தடுக்கவும், கக்குவான் இருமலைக் குணப்படுத்துவதற்கும், தொண்டை சதை வளர்ச்சியை (TONSILS) ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்துவதற்கும் எங்களிடம் நல்ல மருந்துகள் கிடைக்கும்.





அன்று நவசக்தி நாடக மன்றத்தின் மகோன்னத தயாரிப்பான "முடிவு என்ன?" என்ற நாடகத்தின் அரங்கேற்றம். ஆகையால் கொட்டகையில் திரளான கூட்டம் கூடியிருந்தது. அந்த நாடகத்தில் ஒரு முக்கிய பாத்திரத்தைத் தஞ்சாவூர் பஞ்சாமி ஏற்று நடிக்கப் போகிறார் என்று விளம்பரப் படுத்தப்பட்டிருந்தது. தஞ்சாவூர் பஞ்சாமியின் பெயர் சமீப காலத்தில் பிரபலமாகியிருந்தது. அந்த ஆவல் காரணமாகத்தான் அன்று கொட்டகையில் அவ்வளவு கூட்டம்!

நாடகம் ஆரம்பமாயிற்று. சீன்கள் ஒன்றன்பின் ஒன்றாக மாறிக் கொண்டே வந்தன. கீர்த்தி வர்மன் என்னும் மன்னன் கொங்கண நாட்டை ஆண்டு வருகிறான். அவனது ராணியின் பெயர் பிரியசந்திரிகை. மன்னன் அவளிடம் எல்லையில்லாக் காதல் கொண்டிருக்கிறான். ஆனால் வருஷங்கள் பல ஆகியும் அவர்களுக்கு மக்கள் பேறு கிட்டவில்லை. மன்னன் ஏக்கமுறுகிறான். ஆகையால், தனது வம்சம் செழித்தோங்குவதற்காக அவன் நளினசந்திரிகை என்னும் இளவரசி ஒருத்தியை மணந்து கொள்ளுகிறான். அவளுக்கு ஓர் ஆண் மகவு பிறக்கிறது. அதற்கு மூர்த்தி வர்மன் என்று நாமகரணம் செய்து, சீராட்டித் தாலாட்டி வளர்க்கிறார்கள். நளின சந்திரிகைக்கு ஒரு கவலை மட்டும் இருக்கிறது. அதாவது, தன்னையும் தன் மகனையும் அரசன் சிறிது கூடக் கவனிக்காமல், மூத்த மனைவியான பிரியசந்திரிகையிடமே நிறைய அன்பு காட்டி வருகிறான் என்பது. நாளடைவில் அந்தக் கவலை பொறாமையாக விசுவரூபம் எடுக்கிறது. பொறாமை வந்தால்தான் பகுத்தறிவு பறந்து விடுமே! ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்ற அரசனை நளினசந்திரிகை தந்திரமாகக் கொலை செய்து விடுகிறாள். அடுத்த காட்சி மூர்த்தி வர்மனுக்குப் பட்டாபிஷேகம்.........

இது வரையில் நாடகம் கொஞ்சமும் சுவையின்றி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. மூர்த்திவர்மனாகத் தோன்றிய தஞ்சாவூர் பஞ்சாமியின் நடிப்பு சோபிக்கவே இல்லை. ஆயினும் மக்கள் கிளர்ச்சி ஏதும் செய்யாமல் கதையின் முடிவைக் காண்பதற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர்.

இடைவேளைக்குப் பின் கணகணவென்று மணி அடித்ததும் திரை விலகியது. முடிசூட்டும் சீன் ஆரம்பமாயிற்று. ராஜ சபையில் மந்திரி பிரதானிகளும் பொதுமக்களும் வீற்றிருந்தனர். ராஜகுரு மூர்த்தி வர்மனை நோக்கி, "இளவரசே! தங்கள் தந்தை இந்நாட்டை நீதி நெறி வழுவாது ஆண்டு வந்தார். அத்தகைய சத்தியசந்தனுக்குப் பிறந்த இளவரசராகிய தாங்களும் தந்தையை விடச் செம்மையாக அரசு புரிவீர்கள் என்று நான் கூற வேண்டியதில்லை. ஆகையால் இளவரசரே! தாங்கள் இந்தச் சிம்மாசனம் ஏறி அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மந்திரிகளின் சார்பிலும் மக்களின் சார்பிலும் தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்......" என்று கூறி, மூர்த்திவர்மனை அரியாசனத்தில் அமரச் சொன்னார். சபையோரின் கரகோஷம் வானைப் பிளந்தது.

மூர்த்தி வர்மன், முகத்தில் அசடு வழிய முடி சூட்டிக் கொள்வதற்காகச் சிம்மாசனத்தில் ஏறச் சென்றான். ஆனால், படியேறப் போனவன் சட்டென்று பின்வாங்கி அங்கேயே நின்றான்.

"என்ன தயக்கம் இளவரசரே? வாருங்கள், சிம்மாசனம் ஏறுங்கள்" என்றார் ராஜகுரு பரிவுடன்.

மூர்த்தி வர்மன் சட்டென்று திரும்பினான். "முடியாது, ராஜகுருவே! முடியாது. என்னால் படியிலே ஓர் அடியும் வைக்க முடியாது. சிம்மாசனம் ஏறிச் சித்திரவதைக்கு உள்ளாகவும் முடியாது. வஞ்சமில்லா நெஞ்சத்திலே நஞ்சைப் பாய்ச்சிக் கொள்ளவும் முடியாது" என்று கணீரென்று கண்டிப்பான குரலில் கூறி விட்டு விரைவாக உள்ளே சென்றான். அப்பொழுது



அவனது முகத்தில் ஆயிரம் உணர்ச்சிகள் தோன்றின. அவனது கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. உலக பந்தம் வேண்டாம் என்ற பீதியில் அவனது முகத்தில் பயக்குறி படர்ந்திருந்தது. உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. சோதனைக் காலம் வந்து விட்டதே என்ற ஏக்கத்தில் கண்களில் நீர் நிரம்பி வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவ்வளவும் நடிப்பாகவே தோன்றவில்லை. உண்மையாக நடப்பது போலவே இருந்தது! உடனே திரையும் விழுந்தது.

கொட்டகையே இடிந்து விழும் போல் கரகோஷம் எழுந்தது. "தஞ்சாவூர் பஞ்சாமியின் நடிப்பு அபாரம், அற்புதம், அருமையானது!" என்ற பாராட்டுதல்கள் ஒவ்வொருவரின் வாயிலிருந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

ஆனால் திரைக்கு மறைவில், "படுபாவி கதையின் போக்கையே மாற்றி விட்டானே? இப்பொழுது என்ன செய்வது?" என்று கதறிக் கொண்டிருந்தார் கதாசிரியர்.

"நீர் சும்மா இருமய்யா. ஜனங்களுக்குப் பிடித்த முடிவாக இருந்தால்தான் ஐயா பணம் வசூல் ஆகும். முடிவைப் பற்றிக் கவலைப் படாதேயும். அடுத்த சீனில் மூர்த்தி வர்மன் முடி துறந்து, காஷாயம் தரித்துக் காட்டுக்குச் செல்வதாகக் காட்டி, நாடகத்தை முடித்து விடுவோம்" என்று கூறிக் கதாசிரியரின் வாயை மூடி விட்டார் நாடகக் கம்பெனியின் முதலாளி.

தஞ்சாவூர் பஞ்சாமி கடைசிக் காட்சியில் மட்டும் எப்படி அபாரமாக நடித்தான் என்று அனைவருக்குமே ஆச்சரியம்!

அது ஒரு ரகசியம்! அப்படி அவனை அற்புதமாக நடிக்க வைத்தது எது? கதையின் உருக்கமான கட்டமா? இல்லை. வசனங்களின் சக்தியா? அதுவும் இல்லை. நடிப்புக்கலையில் அவனுக்கு இருந்த ஆர்வமா? ஊஹூம்! பெயரும் புகழும் பெற வேண்டும் என்னும் ஆசையா? கிடையவே கிடையாது. பின்னை எது?......சிம்மாசனத்தின் முதலாவது படியின் மீதிருந்த ஒரு பெரிய கருந்தேள்தான்!

படித்துப் பாருங்கள்

வானவெளிப் பயணம்

இது விஞ்ஞானயுகம். இந்த யுகத்திலே 1958-ம் ஆண்டு மிகப் பிரசித்தமான ஆண்டு. அந்த ஆண்டில்தான் மனிதன், வானவெளியை வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கை பெற்றான். இந்த நம்பிக்கையை அளித்தவர்கள் சோவியத் விஞ்ஞானிகள்.

விஞ்ஞானம் நாலு கால் பாய்ச்சலில் வளர்ந்துகொண்டே போக, இவ்வரிய விஞ்ஞான விஷயங்களை யெல்லாம் தமிழில் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று தமிழ் மக்களுக்கு ஏக்கம் இருப்பது இயல்புதான்.

அதிலும் ராக்கெட்டுகளையும், ஸ்புட்னிக்குகளையும் பற்றியெல்லாம் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் விஞ்ஞானத் துறையிலுள்ள பௌதிகம், ரசாயனம், வானசாஸ்திரம், பொறிஇயல் ஆகிய பல விஷயங்களில் கணிசமான அளவு அறிவிருந்தால்தான் புரிந்துகொள்ள முடியும். இருந்தாலும் சொற்ப அளவு விஞ்ஞான அறிவு படைத்தவர்களும், தமிழிலேயே படித்து இவற்றைப் பற்றிப் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில் திரு ஜி. ஆர். தாமோதரன், பல அறிஞர்களைக் கொண்டு பல கட்டுரைகளை எழுதச் செய்து தொகுத்து வெளியிட்டிருக்கிறார்.

இவை யாவும் 'கலைக்கதிர்' பத்திரிகையில் வெளியானவை. கோவையிலிருந்து வெளியாகும் 'கலைக்கதிர்' அறிவுத் துறையில் முக்கியமாக விஞ்ஞான, பொறிஇயல் துறையில் தமிழுலகுக்கு எத்தகைய சிரிய பணி புரிந்து வருகிறது என்பதை யாவரும் அறிவர். ஸ்புட்னிக்குகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் துடிக்கும் தமிழ் மக்களுக்கு அவர்கள் நல்ல பணி புரிந்திருக்கின்றனர். கலைக்கதிர் வெளியீட்டாளர்கள், இந்தத் துறையில் மேலும் மேலும் பல புத்தகங்களை வெளியிட்டு, தமிழ்த் தாய்க்கு அரிய பணிபுரியவேண்டும் என்று விழைகிறோம்.

பிரசுரம்: கலைக்கதிர் வெளியீடு, கோவை. விலை: ரூ. 3.

திருக்கேதார பத்ரிநாத் யாத்திரை


"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்ற தாயுமான அடிகளாரின் அருள்வாக்குப்படி தெய்வம் கோயில் கொண்டிருக்கும் தலங்கள்தோறும் யாத்திரை செல்வது மிகவும் புனிதமான செயல். ஆனால் யாத்திரையைத் தொடங்குவதற்கு முன்பு திவ்விய க்ஷேத்திரங்களுக்குப் போகும் மார்க்கங்களையும், அவ்விடங்களில் உள்ள வசதிகளையும் நன்கு அறிந்துகொண்டு விட்டால் மிகவும் சௌகரியமாயிருக்கும். திவ்விய ஸ்தலங்களின் மகிமையைப் புராணங்களின் வாயிலாக ஒருவாறு அறிந்து கொள்ளலாம். ஸ்தலங்களைப் பற்றிய மற்ற விவரங்களை அறிந்து கொள்ள இச்சிறு நூல் பெரிதும் உதவியாயிருக்கும். "யாத்திரைக்கு ஏற்பாடுகள்" என்ற தலைப்பில் வரும் விஷயங்களும், "யாத்திரை வசதிகள்" என்ற தலைப்பில் வரும் விஷயங்களும் யாத்திரிகர்களுக்கு உபயோகமானவை.

எழுதியவர்: ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயர், 4, புதுத் தெரு, சிதம்பரம்; விலை: அணா 8.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam


அவள் எவ்வளவு அழகாயிருக்கிறாள்...

அவள் உபயோகிப்பது பாண்ட்ஸ்



நீங்களும் சருமத்தை மிருதுவாகவும், வழவழப்பாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

இலேசானதும் பனிக்கட்டிபோல் மென்மையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தின் மென்மையான அழகைப் பாதுகாத்து, அதை எழிலுடனும், பொலிவுடனும் இருக்கச்செய்யும். எண்ணெய்ப் பசையில்லாத இந்த கிரீம் தேய்த்துக்கொண்ட மறு விநாடியிலேயே மறைந்து விடுகிறது. பவுடர் போட்டுக் கொள்வதற்குமுன் இந்த க்ரீமைத் தடவிக்கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.



சருமத்தை சுத்திகரிக்கும் சிறந்த க்ரீம்
தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை முகத்தில் தடவுங்கள். அது உங்கள் மிருதுவான சருமத்தை சுத்தம்செய்து முக அழகைப் பாதுகாக்கும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon